Free Circulation Germany-England
தை.Jan.2020

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
29 வது ஆண்டு நிறைவில்
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel:0231 162377
Fax:0231 147836

# உலகில் தடைசெய்யப்பட்ட நூல்களால் யேர்மனியில் அமைத்த நினைவாலயம்

Dr.IN

ஆண்களின் கதி அதோகதியாகும் காலம் வருமா?








U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52 44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.11

Gopara Gnanam
RHEINISCHE STR 62 44137 DORTMUND
Tel: Mob:0171 330 6542
Tel:0231 53482206
Page.23

StaR-Impex
Kipper Str.03 44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.37

# மகாத்மா காந்திஜியின் கடைசி நாள்



FOR THE LAST TIME GANDHI JI WENT TO THE PRAYER MEETING THROUGH THIS PATH





## தை 30, 1948.

நியூ டில்கி என்றதும் இந்தியாவின் தலைநகரம் என்பதற்கு மேலாக பாரதத்தின் பிதாமகன் அகிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியடிகளின் நினைவே வரும். அவர் தன் இறுதி மூச்சை நாட்டுக்காக விட்ட இடத்தில் கால் பட்டதும் மனம் இந்தக்கணம் நடந்த ஒரு கொடும் நிகழ்வுபோல் பதைபதைத்தது.

காந்தியடிகள் கடைசி நாட்களில் வசித்த வாசஸ்தலத்தில் அவரது பாவனைப்பொருட்களைப் பார்க்கும்போது அவர் உயிருடன் இருப்பதுபோல் தோன்றியது. அவர் மரணத்திற்கு முந்திய சில நிமிடம் உரையாடிய இடம் அதனைத் தொடர்ந்து பிராத்தனை செய்யும் இடத்திற்கு நடந்துபோன பாதை யாவும் குறியீடு இட்டு காட்டப்பட்டு இருந்தது. எமது பாதங்கள் எத்தனை இந்த பூமியில் சுவடுகளைப் பதித்திருக்கும். அத்தனையும் அக்கணமே அழிந்து விடும். மகாத்மாவின் சுவடுகள் 71 ஆண்டுகள் ஆகியும் ஒருவர் மனதையும் விட்டு நீங்காமல் உள்ளது.

வாசகர்களே மகாத்மா காந்திஜியின் கடைசி நாள் பற்றி ஸ்டீபன் மர்பி அவர்கள் கூறுவதைப்பாருங்கள்.

ஜனவரி 30, 1948. வெள்ளிக்கிழமை. அதிகாலை 3.30 மணிக்கே எழுந்துவிடுகிறார் மகாத்மா காந்தி. புதுடில்லியின் அல்புகுர்க்யு சாலையில் உள்ள பிர்லா ஹவுசின் தரைத்தளத்தில் உள்ள விருந்தினர் மாளிகையில் அவர் தங்கியிருந்தார். டில்லியில் சண்டையிட்ட இரு மதத்தினரையும் ஒற்றுமைப்படுத்த 10 நாள் உண்ணாவிரதம் இருந்த காந்திஜி, அந்த விரதத்தை முடித்து 12 நாட்கள்தான் ஆகிறது. 10 நாட்களுக்கு முன், பிர்லா ஹவுசில் அவரைக் கொல்ல முயற்சி நடந்தது. டில்லியில் அமைதி திரும்பியிருந்தாலும், அவரின் உயிருக்கு ஆபத்து இருக்கவே செய்தது. அதையும் அவர் அறிந்தே இருந்தார்.

எல்லோருக்கும் முன்னதாக எழுந்த காந்திஜி, முதல்நாள் இரவில் தயாரித்திருந்த, காங்கிரஸ் அரசியல் அமைப்புச் சட்ட வரைவில் சில திருத்தங்கள் செய்தார். அதுதான் அவரின் கடைசி உயிலாகவும், இந்திய தேசத்தின் இறுதி ஏற்பாடாகவும் இருக்கப் போகிறது. முந்தைய நாள் இரவில், கிஷோரிலால் மன்சூராவாலாவுக்கு அவர் எழுதிய கடிதத்தில் சில திருத்தங்கள் செய்த காந்திஜி, அதை அனுப்ப மனுவிடம் கொடுக்கிறார். காலை 7 மணி. ரஜென் நேரு என்ற பெண்மணி காந்தியைச் சந்திக்கிறார். அமெரிக்கா செல்ல உள்ள அவர், காந்தியிடம் ஆசீர்வாதம் வாங்க வந்தார். அவரிடம் சில நிமிடங்கள் பேசியிருந்துவிட்டு, அறைக்குள் திரும்பிய காந்தி, தன் செயலாளர் பியாரிலாலிடம், காங்கிரஸ் அரசியல் அமைப்புச் சட்டம் குறித்து தான் எழுதியிருந்தவற்றைக் கொடுத்து, 'கவனமாகப் பார்த்துக் கொள். நான் ரொம்ப மனக்கஷ்டத்தில் எழுதியது. ஏதாவது திருத்தம் செய்ய வேண்டுமென்றால் செய்து கொள்' என்று கூறுகிறார். பின்னர் காந்தியை மனு குளிப்பாட்டி விடுகிறார். காலை 9.30 மணி காலை உணவு சாப்பிட்டுக் கொண்டே, செயலாளர் பியாரிலாலிடம், காங்கிரஸ் அரசியல் அமைப்புச் சட்ட வரைவு குறித்து கேட்கிறார். காலை 10.30 மணி. களைப்பில் தூங்கிவிடுகிறார். மதியம் 12 மணி வாக்கில் எழுந்திருக்கிறார். சிறுநீர் கழிக்க எழுந்து செல்கிறார். இதை திடீரெனப் பார்த்த மனு, 'பாபு என்ன இது. இப்படித்தனியாகச் செல்கிறீர்கள்? தனியாகச் செல்லலாமா? என்று கேட்க, 'இது நல்லா இருக்கிறதே. தனியாகப் போகிறேன். தனியாகப் போகிறேன்' என்ற தாகூரின் கடைசி வார்த்தைகளை நினைவுக்குக் கொண்டு வந்து இரண்டு முறை திரும்பத் திரும்ப கூறுகிறார்.

பகல் 2.15. வழக்கமான சந்திப்புகள் துவங்குகின்றன. இரண்டு பஞ்சாபியர்கள், இலங்கையிலிருந்து வந்த ஒருவர், ஒரு சிறுமி, கல்லூரி பேராசிரியர், பஞ்சாபிலிருந்து வந்த ஒரு குழுவினர் என பலரையும் சந்தித்து, ஒவ்வொருவரிடமும் பேசி அவர்களை வழியனுப்பி வைக்கிறார். மாலை 4 மணி. பேட்டி, சந்திப்பு எல்லாம் ஒருவாறாக முடிவடைகிறது. இந்த நேரம், வெளியே இருந்து சத்தம் கேட்கிறது. காந்தியை சந்திக்க கத்தியவாக்கில் இருந்து வந்தவர்கள், காந்தியைப் பார்க்க வேண்டும் என்கின்றனர். அவர்களிடம் மனு, படேலுடன் காந்தி பேசிக் கொண்டிருக்கிறார். கொஞ்ச நேரமாகும் என்கிறார். நாங்கள் பார்த்தே ஆக வேண்டும் என்று அந்த இருவரும் அடம்பிடிக்கின்றனர். சத்தம் கேட்டு, மனுவை அழைத்த காந்தி, என்ன என்று கேட்கிறார். 'இப்போது முடியாது. மாலை இறைவணக்கத்திற்குப் பிறகுதான். அதுவும் அப்போது நான் உயிருடன் இருந்தால்தான்' என்கிறார்.

நாதுராம் விநாயக் கோட்சே. 37 வயது இந்து தீவிரவாதி. பழைய டில்லி ரயில்வே ஸ்டேஷன் ஓய்வறை எண் 6ல் தங்கியிருந்த கோட்சே, வெள்ளிக்கிழமை அதிகாலையிலேயே எழுந்து விடுகிறான். இன்றுதான் அவன் காந்தியை கொல்ல உள்ளான். அவன் காந்தியை நெருங்குவதற்கான வழிகளையும், அவனை பிறர் தடுக்காமல் இருப்பதற்கான வழிகளையும் மற்றவர்கள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டிருந்தது. துப்பாக்கியை அவ்வளவாகப் பயன்படுத்தத் தெரியாத கோட்சேயிடம், 7 ரவைகள் கொண்ட ஆட்டோமேடிக் பிஸ்டல் இருந்தது.

தொடர்ச்சி 23ம் பக்கம்








வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 281



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

**Vettimaniy Ltd**

**Company No: 8876276**


# ஜெனீவா“வை எதிர்கொள்வதற்காக
# மகிந்த கையில் எடுக்கும் உபாயம்

**- கொழும்பிலிருந்து ஆர். பாரதி -**



கோத்தாபய ராஜபக்‌ஷ தலைமையிலான புதிய அரசாங்கம் உள்ளூர்ப் பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டுவரும் நிலையில், சர்வதேச அரங்கு அவர்களுக்குச் சவாலாகத்தான் இருக்கப்போகின்றது. குறிப்பாக பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஜெனீவா கூட்டத் தொடர் புதிய அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கப் போவதாகத்தான் அமையும். இதனை எதிர்கொள்வதற்கான வியூகங்களை வகுத்து புதிய அரசாங்கம் செயற்படத் தொடங்கியிருப்பதைக் காணமுடிகின்றது. இந்த முயற்சியில் அவர்களால் வெற்றிபெற முடியுமா?

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்துவது குறித்து ஆராயப்போவதாக பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ தெரிவித்திருப்பது இதற்காகத்தான். இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர் பிரதமரை சந்தித்துப்பேசியபோதே இது தொடர்பில் தன்னுடைய கருத்துக்களை பிரதமர் மகிந்த தெரிவித்திருக்கின்றார். புதிய அரசாங்கம் பதவியேற்றுக் கொண்ட பின்னர் முதன்முறையாக சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்ற ஒரு சந்திப்பாக இரு சொல்லப்பட்டாலும், அரசியல் ரீதியாக இதற்குள்ள முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

சிங்கள பௌத்த கடும் போக்கைக்கொண்ட ஒரு அரசாங்கமாகவே கோத்தாபயவின் அரசாங்கம் பார்க்கப் படுகின்றது. ஒப்பீட்டளவில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய மேற்கு நாடுகளின் ஆதரவு தற்போதைய அரசுக்கு இல்லை. இந்தப் பின்னணியில், வரப்போகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஜெனீவா கூட்டத் தொடர் இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கும் ஒன்றாக அமையலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. ஏனெனில் இலங்கை அரசாங்கத்துக்கு இரண்டாவது தடவையாக வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசம் மார்ச் மாதம் முடிவுக்கு வருகின்றது. தமக்கு சாதகமற்ற ஒரு அரசாங்கம் பதவியிலிருப்பதால், மேற்குலகின் அழுத்தங்கள் அதிகமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் பரவலாகக் காணப்படுகின்றது.

இந்த நெருக்கடியை எப்படி எதிர்கொள்வது என்பதுதான் இலங்கை அரசாங்கத்துக்கு இன்றுள்ள நெருக்கடி. ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில்லை என்பதையும், அதிலிருந்து தாம் வெளியேறுவோம் என்பதும்தான் இந்த அரசாங்கத்தின் நிலைப்பாடு. ஏப்ரல் இறுதியில் வரப்போகும் பொதுத் தேர்தலும் முக்கியமானது. தற்போதுள்ள “இனவாத அலை“யைப் பயன்படுத்தியே பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவதுதான் ராஜபக்‌ஷக்களின் உபாயம். அதனால் ஜெனீவா தீர்மானத்துக்கு அரசாங்கத்தினால் எந்தவகையிலும் இணங்கிப்போய்விட முடியாது. அதனைவிட்டால், இரண்டு தெரிவுகள் அரசாங்கத்துக்கு இருப்பதாகத் தெரிகின்றது.

ஒன்று பழைய உள்ளூர் ஆணைக்குழுவின் தீர்மானம் ஒன்றை நடைமுறைப்படுத்து வதாகச் சொல்லி காலத்தைக் கடத்துவது. அதனைத்தான் இப்போது பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ இப்போது கையில் எடுத்திருக்கின்றார் போலத் தெரிகின்றது.

இரண்டாவது, தற்போதிருப்பது ஒரு ”இடைக்கால அரசாங்கம்”! அதனால், ஜெனீவா போன்ற சர்வதேச அரங்குகளில் உறுதியான தீர்மானம் ஒன்றை எடுத்துவிட முடியாது எனச் சொல்லி நிலைமைகளைச் சமாளித்தல். அது கொஞ்சம் நெருக்கடியானதாகத்தான் இருக்கும். ஏனெனில் பொதுத் தேர்தலின் பின்னர் அரசாங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்புக்கள் பொதுஜன பெரமுனைக்குத்தான் பெருமளவுக்குள்ளது. அதனால்தான், ”கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு”வின் அறிக்கையை மகிந்த ராஜபக்‌ஷ கைகளில் எடுத்திருக்கின்றார் எனக் கருதலாம். இது ஒரு உள்ளூர்ப் பொறிமுறையாக இருப்பதால், உள்நாட்டில் அதனை நியாயப்படுத்த முடியும் என்பது அவரது கணிப்பாக இருக்கலாம்.

2009 இல் பாரிய இழப்புக்களுடன் போர் முடிவுக்கு வந்த போது, யுத்தத்தின் போது இடம்பெற்ற குற்றங்கள் குறித்த விசாரணை முன்னெடுக்கப்படும் என்ற வாக்குறுதி அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்‌ஷவினால் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குக் கொடுக்கப் பட்டது. அது குறித்த அழுத்தங்கள் அதிகரித்து தனியான விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கு ஐ.நா. முயன்ற போதுதான் இந்த ஆணைக்குழுவை அமைப்பதாக மகிந்த ராஜபக்‌ஷ அறிவித்தார். போர் முடிவடைந்து ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில், 2010 மே மாதத்தில்தான் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. போர் இடம்பெற்ற சூழ்நிலை குறித்து ஆராய்வதும், அதன் அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதும்தான் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்பு. சுமார் 18 மாதகாலமாக விசாரணைகளை முன்னெடுத்த இந்தக் குழு, 2011 நவம்பரில் அதன் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. 2011 டிசெம்பர் 16 ஆம் திகதி இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் பகிரங்கமாக் கப்பட்டது. எதிர்பார்க்கப் பட்டதைப்போல, அரசாங்கத் துக்கு சாதகமான அறிக்கை ஒன்றையே இந்தக் குழு வெளியிட்டிருந்தது. குறிப்பாக, அரசாங்கப் படைகள் வேண்டுமென்றே பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தவில்லை என்பதும், அதிகளவுக்கு பொதுமக்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்தப்பட்டது என்பதும் இந்த அறிக்கையின் முக்கிய அம்சமாக இருந்தது.

தொடர்ச்சி 17ம் பக்கம்






# ஆண்களின் கதி அதோகதியாகும் காலம் வருமா?

அமரர்.பொ.கனகசபாபதி
(முன்னாள் அதிபர். மகஜனக்கல்லூரி )

பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். பிரேசில் நாட்டு விஞ்ஞானிகள் அங்கே அழிந்து போகும் இடர்ப்பாடு கூடிய இனங்களைக் காப்பாற்றுதற்கான முயற்சியில் ஈடுபடுகிறார்களாம். அந்நாட்டில் உள்ள விலங்கினங்களில் எட்டு இனங்கள் அழியக் கூடிய நிலையில் உள்ளனவாம். இவற்றின் அழிவைக் காப்பாற்றும் முயற்சியில் தான் இந்த உயிரியல் விஞ்ஞானிகள் ஈடுபாடு காட்டுகிறார்கள். இந்த விலங்குகளில் முக்கியமானது Maned Wolf எனும் பிடரி மயிர் ஓநாய். உலகம் முழுவதுமாக இந்த விலங்கின் எண்ணிக்கை 23,600 வரை உள்ளதாம் அதில் பெரும் தொகை ஓநாய்கள் பிரேசில் நாட்டில் உள்ளன.
விலங்குகளைக் எப்படிக் காப்பாற்றப் போகிறார்களாம்?
நீங்கள் சில வருடங்களுக்கு முன்னர் கேள்விப்பட்ட முளைவகையாக்கல் (Cloning) முறையினால் தான் இதனை செய்ய எண்ணியுள்ளார்கள்.

ஏற்கனவே பல நாடுகள் தமது நாட்டின் அழியவுள்ள மிருகங்களைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகளில் ஒன்று தான் இந்த முளைவகையாக்கல்.

ஓநாயின் தோலில் உள்ள ஒரு கலத்தினை எடுத்து அதன் கருவினைத் தனிப்படுத்துவார்கள். சாதாரண நாயினது முட்டை ஒன்றினை எடுத்து அதன் கருவை நீக்கிட்டு ஓநாயின் கருவினை அந்த முட்டையுள் செலுத்தி விடுவார்கள். இந்த முட்டையை இப்போது ஒரு நாயினது கருப்பையின் உள்ளே பதித்து ( implanting) விடுவார்கள். அங்கே அந்த முட்டை விருத்தியுற்று நாய் சுகப்பிரசவம் செய்கின்ற பொழுது அது நக்கிக் கொடுப்பது நாய்க் குட்டியாயில்லாமல் ஓநாய் குட்டியாகவே இருக்கும்.

நாய் இங்கே ஈன்றாள் ( Surrogate mother). குயிலின் முட்டையைக் காகம் அடைகாத்துக் கொடுப்பது தெரிந்ததே. அதுவும் ஒரு வகை ஈன்றாள் தானே. அங்கே பொரித்த குயில் குஞ்சு தனது குரலால் தான் யாரெனப் புலப்படுத்தியதும் காகம் ஓட ஓட விரட்டுவதைப் பலர் கண்டிருப்பீர்கள்.

ஏன் விஞ்ஞானிகள் ஓநாயின் முட்டையை விட்டு நாயின் முட்டையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓநாய் முட்டையை உபயோகிப்பது சுலபம் தான் ஆனால் காட்டுக்குள் சென்று பெண் ஓநாயைக் கொண்டு வந்து கூட்டில் அடைத்துப் பராமரிப்பதிலும் றோட்டில் திரியும் நாயினை உபயோகிப்பது சுலபமல்லவா. பொதுவாக முளைவகையாக்கலின் போது ஒரு இனத்தினது பெண்ணினது முட்டையின் கருவினை அகற்றி விட்டு அதே இனத்தின் உடற்கலத்தில் ( somatic cell) உள்ள கருவினையே முட்டையுள் செலுத்துவார்கள்.இதற்கு விதி விலக்காகச் சில விலங்கினங்கள் உள்ள. அந்த இனங்களில் மாத்திரமே இனத்துக்கிடையான கலப்புப் பிறப்பு (Interspecific crossing) ஏற்படும் சாத்தியம் உள்ளது. பொதுவாக விலங்கு களிலே இரு வேறு வேறு இனங்களுக்கிடையே புணர்ச்சி ஏற்படுவதில்லை. ஆனால் நாயுக்கும் ஓநாயுக்கும் இடையே இனத்துக் கிடையான கலப்புப் பிறப்பு ஏற்பட முடியும்.

அதன் விளைவாகத் தோன்றும் வழித்தோன்றல் ஓநாய்-நாய் அல்லது ஓநாய் கலப்பினம் எனப் படும் ( Wolf-dog/ Wolf Hybrid). கோவேறுகழுதை ( Mule) ஒரு கலப்பினம். கழுதையும் குதிரையும் இனம் கலப்பதால் உருவானது. ஆனால் இந்த கலப்பினங்கள் இனப் பெருக்கம் செய்யும் தகமை அற்றவை. ஓநாயின் முட்டைக்குப் பதிலாக சாமானிய நாயின் முட்டையை உபயோகிப்பது விஞ்ஞானிகளுக்குச் சுலபமாய் அமையும்.



அமரர்.பொ.கனகசபாபதி

மேலே நான் தந்த தகவல் நீங்கள் பலர் கேட்டுக் அறிந்ததே! இப்போ நான் சொல்லப் போவது இன்னொரு விசயம். ஆண் இனத்தின் வருங்காலம் பற்றியது. இயற்கையும் ஆண் இனத்திற்குப் பாதகமாய் உள்ளது. அதே போல செயற்கையும் ஆணின் மேல் கை வைக்கும் போலத் தெரிகிறது.

மனித இனத்திலே 23 சோடி நிறமூர்த்தங்கள் உள்ளன என்பது அறிந்ததே. அதில் 22 சோடிகளைத் தன்மூர்த்தம் ( Autosomes) எனவும் ஒரு சோடியை அயன் மூர்த்தம் அல்லது இலிங்கமூர்த்தம் ( Allosomes / Sex-Chromosomes) எனவும் அழைப்பதும் தெரிந்திருக்கும். இவற்றிலே தன்மூர்த்தங்கள் உடல் இயல்புகளையும் அயன் மூர்த்தங்கள் பாலியல் இயல்புகளைத் தீர்மானிப்பதாயும் கருதுவர்.
இந்த இரண்டிலே ஒன்று சற்றுச் சிதைவடைந்து காணப்படுகிறது. அதனை Y நிறமூர்த்தம் என்றும் மற்றதனை X நிறமூர்த்தம் எனவம் அழைப்பார்கள் மனித இனத்திலே துர்ப்பாக்கிய வசமாக இந்தச் சிதைவடைந்த Y நிறமூர்தம் ஆண்களில் காணப் படுகிறது (XY). பெண்களில் இரண்டுமே நல்ல நிலையில் உள்ளன (XX). இலிங்க நிறமூர்த்தங்களாலேதான் பாலியல் தீர்மானத்துடன் சம்பந்தமான பரம்பரை அலகுகள் உள்ளன.X நிறமூர்த்தத்தில் பெண்மைக்கும் Y நிறமூர்த்தத்தில் ஆண் உறுப்புக்கள் விருத்திக்கும் வேண்டிய பரம்பரை அலகுகள் உள்ளன. இங்கேதான் ஒரு செய்தியைக் கூற வேண்டும். இந்தச் சிதைவடைந்த Y நிறமூர்த்தம் தனது கைங்கரியத்தை நிறுத்த வில்லைத் தொடர்ந்து சிதைவடைந்து கொண்டே இருக்கிறதாம்.
இதனாலே தொடக்க காலத்திலே அதில் காணப்பட்ட 1438 பரம்பரை அலகுகளிலே இப்போது வெறும் 45 மாத்திரமே உள்ளனவாம், மிகுதி 1393 போன இடம் தெரியவில்லை.

கணக்குப் போட்டுப் பார்த்த பொழுது ஒவ்வொரு பத்து இலட்சம் வருடங்களில் 4.6 பரம்பரை அலகுகள் சிதைந்துள்ளன. இதன் படிக்கு இன்னும் பத்து மில்லியன் (10,000000) வருடங்களில் Y நிறுமூர்த்தம் இருந்த இடமே தெரியாது போய்விடும். அப்போ ஆண்களின் கதி? அங்கேயும் இங்கேயுமாக திருநங்கைகள் ( transgender) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அண்மைக் காலங்களில் பெரிதாக அடிபட்ட தென்ஆபிரிக்காவின் ஓட்ட வீராங்கனை செமேனியா இந்த வகையினர். பெரும் சர்ச்சைக்கு ஆளாகினார். திருநங்கைகள் ஆண்களாகப் பிறக்க வேண்டியவர்கள் ஆனால் விகாரம் ஏற்பட்டு Y நிறமூர்த்தத்தினை இழந்தமையால் ஒரு X நிறமூர்த்தத்தை மாத்திரமே கொண்டிருப்பார்கள். எனவே ஆண் உறுப்புக்கள் விருத்தியுறு வதில்லை. பெண்மைக்கான சில துணை இயல்புகள் மாத்திரம் தேன்றலாம். இயற்கை ஆண் இனத்திற்கு ஏற்படுத்திய வஞ்சம் 10 மில்லியன் வருடங்களில் ஆண் இனமே இல்லாமல் போக வழி வகுத்துள்ளதை காண்கிறோம். அப்படியாயின் 10 மில்லியன் வருடங்களில் உலக சமூகம் வெறும் பெண்களைக் கொண்ட சமூகமாத்தான் இருக்குமா? ஆண்கள் இல்லாவிட்டால் இனப்பெருக்கம் நடைபெற முடியாதே. அப்படி என்றால் மனித இனமே முற்றாக அழிந்து போய்விடலாம் அல்லவா? மில்லியன் டொலர் வினா என்பார்களே அது இதுதானா?

தொடர்ச்சி 10ம் பக்கம்







Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
2020 Summer
Frankfurt - Colombo
Ab; 599€
46Kg
Offnungszeiten
Mo-Fr.10.00-19.30
Sa.10.00-15.00
Mo-Sa Mobile: 24.00
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
Graphic Design Vettimaniy Ltd
Mob:No: 0179 1484 892
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171

# இந்திய வேலைவாய்ப்பும் ஈழத் தமிழர்களும்







கடல் நடுவே இருக்கும் ஈழத்தின் மறுபக்கம் கண்ணீர்த் துளிகளைப் பரிசளிக்கத் தமிழகம் நோக்கித் தன்னம்பிக்கையோடு பயணித்து வாழ்வின் பெரும்பகுதியைத் தமிழகத்திலேயே கழித்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்வியற் சிக்கல்கள் ஒன்றுக்கொன்று குறைவின்றித் தமிழர்களின் தன்னம்பிக்கையை எப்போதும் சீண்டிக் கொண்டே உள்ளது.

மாண்டு போகாமல் மீண்டு வந்தோம் என்று தமிழகத்தைத் தஞ்சம் அடைந்தவர்கள் மாளா வேதனையில் வலம் வருதல் இங்கு மாறாமல் போயுள்ளது . பொதுவாக ஈழத்தமிழர்களின் வாழ்வாதாரம் என்பது சிக்கலாக இருப்பது மட்டுமன்றிப் பட்டப்படிப்பு முடித்தவர்களும் படிப்பிற்கேற்ற வேலையைப் பெற முடியாமல் இந்த ஏதிலி வாழ்க்கை சதி செய்கின்றது.
தம் பிள்ளைகளை ஒரு பட்டப் படிப்பேனும் படிக்க வைப்பது கனவாக இருக்கும் இந்நேரத்தில் தம் பிள்ளைகளை இந்தியாவில் படிக்க வைப்பதற்காக வேதனை கொள்ளும் நிலையில் ஈழத்துப் பெற்றோர் இருப்பது பலருக்குத் தெரியாமல் இருப்பதுதான் வேதனைக்குரியதாக உள்ளது.

எல்லாவற்றையும் இழந்து ஏதிலியானோம். ஏதிலியானதால் எல்லாவற்றையும் இழந்துள்ளோம். ஏதிலி என்ற காரணத்தால் குடியுரிமை, ஓட்டுரிமை, சான்றிதழ்கள் ஆவணங்கள் என எதையும் பெற முடியாமல் போனவர்களின் பட்டியலில் இருப்பது இந்த வேலைவாய்ப்பின்மையுமாகும். கூலி வேலை செய்தேனும் தம் பிள்ளைகளைப் பட்டப்படிப்பு படிக்க வைத்தவர்களும், வெளி நாட்டு வருமானத்தில் பகட்டாகப் படிக்க வைத்தவர்களும் எதிர்கொள்ளும் சிக்கல் படிப்பிற்கேற்ற வேலையின்மை.

இந்தியர்களுக்கும் வேலையில்லை என்பது உண்மைதான் ஆனால் இங்கு கூறப்படுவது ஏதிலி என்ற ஒரே காரணத்தால் வேலை மறுக்கப்படுவது. பன்னாட்டு நிறுவனங்கள் கடவுச்சீட்டற்ற ஏதிலிகளை ஏற்றுக்கொள்வதில்லை . ஈழத் தமிழர் என்று தெரியாமல் தேர்வு செய்தாலும் பணி அனுமதிக்கான அயல்நாட்டு நுழைவுச் சான்று (விசா ) வாங்கி வந்தால் வேலை கொடுப்பதாக்க் கூறித் திருப்பி அனுப்பி விடுகின்றனர். நுழைவுச் சான்றோடு வரும் வாய்ப்பிருந்தால் ஏன் இந்தியாவில் ஏதிலிகளாக இருக்க வேண்டும் இலங்கை சென்று இந்தியா வரும் சூழ்நிலை இருந்தால் இங்கு வேலை செய்யவே வேண்டியதில்லையே. இழப்புகள் தாங்கிய இனத்தின் சோகத்தின் பிண்ணனி தெரிந்தும் இதுபோன்ற நிபந்தனைகள் விதிப்பதும், வேலை மறுப்பதும் வேதனைக்குரியது.
ஏதிலிகளாக வாழ்ந்து வருபவர்கள் பெரும்பாலும் கூலி வேலையே செய்கின்றனர். அதில் பட்டப் படிப்பு முடித்த பின்பும் சரியான வேலை கிடைக்காமலோ் கிடைத்த வேலை மறுக்கப்பட்டதாலோ பெரும்பாலானோர் கூலி வேலைக்குச் செல்கின்றனர்.

தனியார் நிறுவனங்கள் குறைந்த ஊதியத்துடன் வேலைக்கு அமர்த்திக்கொண்டாலும் படிப்பிற்கேற்ற வேலையைப் பெறுவதில் ஈழத் தமிழர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்பது குறித்த உண்மை இன்னும் கண்டுகொள்ளப்படாமலே உள்ளது.



**பொலிகையூர் ரேகா** B.com.M.com.M.phil.M.B.A.M.phil.

எத்தனை பட்டப்படிப்பை முடித்தாலும்,திறமைகளை வளர்த்திருந்தாலும் ஏதிலி என்ற அடையாளமே வேலை மறுப்புக்குக் காரணமாக இருக்கின்றது.
எந்தத் திறமைகளுக்கும் உடனே அங்கீகாரம் கிடைப்பதில்லைதான் ஆனால் ஈழத் தமிழரைப் பொறுத்தவரை எப்போதுமே அங்கீகாரம் கிடைக்காமல் போய்விடுகின்றது.

கனவுகளோடு படித்து முடித்து வெளியே வந்த பின்பு நிகழும் இந்தப் புறக்கணிப்புகள் படிப்பின் மீதான நம்பிக்கையையும், வாழ்வின் மீதான நம்பிக்கையையும் அசைத்துவிடுகின்றது. ஏதிலி என்ற அடையாளமும், குடியுரிமைக்கான அடையாளமின்மையும் பலவிடங்களில் வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்குவதால் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் படிப்பின் மீதான ஈடுபாட்டைக் குறைக்கின்றது.

பட்டப்படிப்பு முடித்த ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகளவில் இருக்கின்றது. இவர்களுக்கான வேலைவாய்ப்பு ”ஏதிலி” என்ற அடையாளங்களைத் தாண்டி கடவுச்சீட்டுச் சான்றுகள் தாண்டிப்பணி அனுமதிக்கான நுழைவுச் சான்றுகளின்றி வழங்கப்படுதலே திறமைக்கான அங்கீகாரம் ஆகும். நிறுவனங்களுக்கெனக் கொள்கைகள், வரைமுறைகள், விதிகள் இருக்கலாம் ஆனால் விதியால் வாழ்க்கையைத் தொலைத்தவர்களிடம் இந்த விதிமுறைகளைத் தளர்த்தலும் கொள்கைகள் தாண்டிய மனிதமே!

ஈழத் தமிழர் வாழ்வில் இந்தியத்தின் மனிதம் படரட்டும்!



# உலகில் தடைசெய்யப்பட்ட நூல்களால் யேர்மனியில் அமைத்த நினைவாலயம்







நூல்களை எரிப்பதும் நூலகங்களை எரிப்பதும் அறிவு ஜீவிகளை அழிப்பதும் தமக்குப் பாதகமானதெனக் கருதும் மாற்றுக் கருத்தை இல்லாமல் செய்வதற்கான வழிமுறை களாக உலகெங்கினும் உள்ள அரசியல் அதிகார வர்க்கங் களினால் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

மடாலயங்களில் சேகரித்து வைக்கப்பெற்ற நூல்களை எதிரிகள் அழித்தார்கள், அலெக்சாந்திரியா நூலகத்தை நிர்மூலமாக்கினார்கள் என்பதெல்லாம் நாம் அறிந்த வரலாறு. பப்பைரஸ் என்னும் பத்திரிகைத்தாளின் முன்னோடி அறியப்படாத அந்நாளில் இருந்த நூல் ஒரு பிரதியோ, சில பிரதிகளோ ஏடுகளிலும், களிமண் தகடுகளிலும் எழுதப்பட்டுப் பேணப்பட்டு வந்திருந்தன. அவற்றை அழிப்பதன் மூலம் அதிகார வர்க்கம் அதிலிருந்த கருத்துக்களை குழி தோண்டிப் புதைப்பதில் ஓரளவு வெற்றி கண்டிருக்கலாம். அன்று மட்டுமல்ல இன்று அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிற்காலத் திலும் இந்த நடைமுறையைக் கைக்கொள்வ தினால் இவர்கள் எதைச்சாதித்து விட்டார்கள்?

கி.மு. 213இல் புராதன சீனாவின் சக்கரவர்த்தி *Shih Huang-ti*.
ஒருங்கிணைக்கப்பட்ட பெருஞ்சீனப் பேரரசின் முதலாவது மன்னராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர். இவர் தான் சீனப்பெருஞ்சுவரைக் கட்டுவிப்பதில் முன்னோடி யாயிருந்தவர். தனது ஆட்சிக்காலத்தில் தான் சீன வரலாறு எழுதப்படவேண்டும் என்ற நோக்கில் விவசாயம், விஞ்ஞானம் மற்றும் எதிர்வு கூறும் சாத்திர நூல்களைத் தவிர்ந்த அனைத்து நூல்களையும் சீனாவில் எரித்துவிடும்படி உத்தர விட்டிருந்தார்.
மாய மந்திரக்கலைகளின் பாலிருந்த இவரது அதீத ஈடுபாட்டுக்கு கன்பூசிய கொள்கையாளர்களினால் தெரிவிக் கப்பட்ட மாற்றுக் கருத்தும் இந்த முடிவுக்குக் காரணம் என வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர்.
தடைசெய்யப்பட்ட நூல்கள் பற்றிக் கலந்துரையாடுவதே மரண தண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்தி யிருந்தார். இதன் மூலம் எதிர்பார்த்த நீடித்த ஆட்சி அவருக்குக் கிடைக்கவுமில்லை. பெருஞ்சீன வரலாறு திருத்தி எழுதப்படவுமில்லை. சீன உளவியல் கருத்துக்கள் உலகப் புகழ்பெறத் தவறவுமில்லை.



என்.செல்வராஜா
நூலகவியலாளர், லண்டன்

## தூண்கள் அனைத்தும் புத்தகங்களால் உருவாக்கப்பட்டுள்ளன

மாறாக, கி.மு.206 இன் பின் அவரது ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்களால் சீன இலக்கியம் செழிக்கவைக்கப்பட்டது. ஆவணக் காப்பகங்கள் உருவாகின. பழைய வரலாறு பேண வழிகோலப்பட்டது.

கிரேக்கத்தில் அலெக்சாந்திரியா நூலகம் கி.மு.283இல் பல்லாயிரம் ஆவணச் சேகரிப்புகளால் பெருமை பெற்றிருந்தது. ஏதென்சின் பலநூறு நாடகப்பிரதிகள் அங்கிருந்தன.
அரிஸ்டாட்டிலின் சொந்தச் சேர்க்கைகள் கிரேக்க இலக் கியங்கள் அனைத்தும் அந்த நூலகத்தில் பேணப்பட்டு வந்தன. நவீன பொது நூலகச் சிந்தனை இங்கு தோற்றம் பெற்றிருந்தது. பல்வேறு படையெடுப்புக்களால் இவை சேதமாக்கப்பட்ட போதும் கிரேக்க இலக்கியமோ அரிஸ் டாட்டிலின் தத்துவங்களோ மறைந்துவிடவில்லை என்பதை நாம் இன்று உணர்கின்றோம்.
தமிழகத்தில் சோழர்கால சாசன ஆவணங்களிலே அடிக்கடி இடம் பெறுகின்ற சரசுவதி பண்டாரங்கள் என்பது அக்காலத் தில் இருந்த நூலகங்களே என்பது வரலாற்றாய்வாளர் கூற்று.
இவை பின்னாளில் சரஸ்வதி மகாலயம் என்றும் குறிக்கப்பட்டு வந்துள்ளது. படையெடுப்புக்களால் நூலகங்கள் அழிந்த போதிலும் இங்கு பேணப்பட்டு வந்த தமிழ் இலக்கியங்கள், இந்து சமயத் திருமுறைகள் எவையும் அழியாமல் இன்றும் நிலை பெறுகின்றன.

தொடர்ச்சி 09ம் பக்கம்




Münster நகரில்...
Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika, China und Orient
Mo-Sa 9.00-20.30
தைப் பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
02.01.2020 முதல் 14.01.2020 வரை
பொங்கல் பொக்கிஷம்
பொங்கலுக்கு வேண்டிய அனைத்தும் பொங்கல் பானையில் உண்டு முந்துங்கள்!
அனைத்து பொருட்களும்
10 % விலைக்கழிவில்
மரக்கறி மலிவு விற்பனைக் காலத்தில் சிறப்பு விலையில் கிடைக்கும்!
அனைவருக்கும் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
பசுமையான மரக்கறிகள்,கடல் உணவுப்பொருட்கள்
மற்றும் மளிகைப் பொருட்கள்,
அனைத்தும்தரமாகவும், மலிவாகவும்,
என்றும் பெற நாடுங்கள்
Münster Hbf இருந்து 4 நிமிட நடைத்தூரம் மட்டுமே!
0179 2310 560
wolbecker Str.16 a
48155 Münster
(Eingang von Bremer Platz neben Parkhausausgang)

07ம் பக்கத் தொடர்ச்சி



(புகைப்படம்: பார்த்தெனன் (Parthenon) ஆலயம் கி.மு.447)

இந்தப் பின்னணியில் தான் ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக் காலகட்டத்தில் நாசி (Nazi) இயக்கத்தின் நூல் எரிப்புப் போராட்டத்தையும் பார்க்கவேண்டியுள்ளது. 19 மே 1933இல் ஜேர்மனியின் பல நகரங்களிலும் ஜெர்மனிய மாணவர் யூனியன் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கிவைத்த இந்த நூல் எரிப்புப் போராட்டத்தில் நாசிசத்திற்கு எதிரானதும், அவர்களது கொள்கைகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியவை என்று அவர்களால் சந்தேகிக்கப்படுபவையுமான சுமார் 2000 தடைசெய்யப்பட்ட நூல்களை அவர்கள் எரித்துத் தொலைத் தார்கள்.

அன்று ஹிட்லரின் நாசி ஆதரவாளர்களால் நூல்கள் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டும் சேகரித்தும் எரிப்பதற்காகப் பொது இடமொன்றில் மலையாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த அறிவியல் மற்றும் வரலாற்று நூல்களின் முன்னால் நின்று அன்றைய நூல் எரிப்பு வைபவத்தை சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி (எரித்து) வைத்துப் பேசும் போது ஜேர்மானிய கொள்கைத்திட்ட மந்திரி ஜோசப் கொயபெல்ஸ் (*Joseph Goebbels*) கூறிய வாசகங்கள் இவை.

"அடுத்த ஆயிரம் வருடங்களுக்கு ஜேர்மானிய வாழ்க்கை முறையே உலகெங்கும் விதந்து பேசப்படப்போகின்றது. இன்று கொழுந்து விட்டெரியப் போகும் இத்தீயின் சுவாலைகள் ஒரு பழைய சகாப்தத்தின் முடிவைத் தெரிவிப்பதுடன் புதிய சகாப்தத்தின் மலர்வுக்கும் ஒளியூட்டப் போகின்றது. வரலாறு திருத்தி எழுதப்படுகின்றது."

தமது அதிகார வலிமையால் ஜேர்மனியர்களின் பழைய வரலாற்றை இந்த நூல் எரிப்பால் ஜோசப் கொய பெல்ஸ்ஸாலும் அவரது அதிகாரவர்க்கத்தாலும் துடைத் தெறிய முடியவில்லை. மாறாக அந்த எரிப்பின் பின் எஞ்சிய சாம்பல் தான் அவர்களது முகங்களில் கரியாய் நிலைத்தது.

நாசிகளின் நூல் எரிப்பு ஒரே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் ஜெர்மனிய மாணவர் யூனியன் முன்னெடுத்த போதிலும், பெருமழை காரணமாக மத்திய ஜேர்மனியின் வடபகுதியில் உள்ள Hesse மாநிலத்தின் முக்கிய நகரமான கஸ்ஸெல் நகரில் மாத்திரம் அன்று நடைபெறவில்லை. பிறிதொரு தினத்தில் அது பெருமெடுப்பில் அங்கு மேற் கொள்ளப்பட்டது.

இன்று அதே கஸ்ஸெல் நகரத்தின் மையப்பகுதியில், கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் அமைந்திருந்த வரலாற்று முக்கியத்துவமான பார்த்தெனன் (Parthenon) என்ற ஆலயத்தின் மாதிரி வடிவமைப்பில் ஒரு தற்காலிக கட்டிடத்தை வடிவமைத்து நிர்மாணித்துள்ளார் ஆர்ஜென் ரீனியக் கலைஞரான மார்த்தா மினுஜின் (Marta Minujin). கட்டிடக் கட்டுமானப்பணிகளுக்குப் பயன்படுத் தப்படும் (Scaffolding) உலோகக் குழாய்களைப் பொருத்தி பார்த்தெனன் ஆலய வடிவமைப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பத்திரிகைத் தணிக்கை, எழுத்துச் சுதந்திரம் ஆகியவற்றை வலியுறுத்தி இந்தக் கலைப் படைப்பை இவர் 2017 Documenta 14 கலைத் திருவிழாவில் காட்சிப்படுத்தும் நோக்கில் உருவாக்கினார்கள்.

இக்கட்டிடப் படைப்பின் முக்கியத்துவம் என்னவென்றால், கட்டிடத்தின் சுவர்கள், தூண்கள் அனைத்தும் புத்தகங்களால் உருவாக்கப்பட்டுள்ளன என்பதாகும். அதுவும் வெறும் புத்தகங்கள் அல்ல. உலக நாடுகளில் பல்வேறு அரசாங்கங் களால் காலம் காலமாகத் தடைசெய்யப்பட்ட நூல்களைக் கொண்டே இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை பிரமிப்பூட்டு வதாயுள்ளது. அன்று ஜேர்மனியில் தடைசெய்யப்பட்ட, எரித்து மறைக்கப்பட்ட 2000க்கும் அதிகமான நூல்களுடன், இன்று இஸ்லாமிய உலகினால் தடைசெய்யப்பட்ட சல்மான் ருஷ்டி யின் நூல்கள் உள்ளிட்ட ஏராளமான நூல்கள் தேர்வு செய்யப்பட்டு இக்கட்டிடத்தில் பிளாஸ்டிக் பைகளில் பாதுகாப்பாக இடப்பட்டு கட்டிடத்தில் ஒவ்வொன்றாகப் பொருத் தப்பட்டுள்ளன.



ஆர்ஜென்ரீனியக் கலைஞர் மார்த்தா மினுஜினுக்கு இக்கலைப் படைப்பு புதியதொன்றல்ல. இதனையொத்த கலைப்படைப் பினை இதற்கு முன்னரும் இவர் துணிச்சலுடன் உருவாக்கியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது தாய்நாடான ஆர்ஜென்டீனாவில் 1976 முதல் 1983 வரை அமுலிலிருந்த சர்வாதிகார இராணுவ ஆட்சியின்போது தடைசெய்யப் பட்டிருந்த நூல்களைப் பயன்படுத்தி ஆர்ஜென்ரீனாவின் தலை நகரான புவனொஸ் அயர்ஸ் (BuenosAires) இல் பார்த்தெனன் ஆலயத்தின் மாதிரி வடிவமைப்பில் காட்சிப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. 19 டிசம்பர் 1983 அன்று, அந் நாட்டில் ஜனநாயக ஆட்சி மீளக்கொண்டுவரப்பட்ட ஒரு வாரத்திலேயே இக்கலைவடிவம் நிர்மாணிக்கப்பட்டுவிட்டது. மேலும், கண்காட்சியின் பின்னர் அங்கு பொருத்தப்பட்ட அனைத்து நூல்களையும் ஆர்ஜென்ரீ னியர்கள் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

தணிக்கை என்பது என்றுமே நிரந்தரமானதல்ல அவற்றை யாரோ ஒருவன் உலகின் எங்கோ ஒரு கோடியில் ஆவணப் படுத்தி வைத்திருக்கும் வரையில். இது ஈழத்தமிழர்களுக்கும் பொருந்தும்.

ஈழத்தமிழரின் போராட்டக் காலத்தில் வன்னியில் தோன்றிய நூல்கள் அனைத்தையும் இன்றைய அரசியல் சூழலில் சுதந்திரமாக காட்சிப்படுத்த முடியாதபோதும் எதிர்காலச் சந்ததியினருக்காக, பேணிப்பாதுகாக்கும் முயற்சியில் தமிழ்ப் பிரதேசத்தின் பிரதான நூலகங்கள் இணைந்து முன்வருவது பற்றிச் சிந்திப்பார்களா?



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund



நெடுந்தீவு முகிலனின்




எல்லாவற்றையும் தாங்குவதற்காக
ஒரு உறுதியான முடிவு எடு !
அந்த உறுதியான முடிவை
தவறாக எடுத்து விடாதே !

நீ தவறான முடிவை எடுத்துவிட்டால் ... அதுவே
உன்னை வீழ்த்திவிடும்.

நீ விழுந்து கிடக்கும் பொழுது .. யாரும் உனக்கு
கை கொடுத்து தூக்கிவிட மாட்டார்கள்.

உன்னை ஏறி மிதித்துக் கொண்டு
கடந்து செல்வார்கள்.

நீ நசுங்கி விடுவாய்.

நீ எழுவதற்கு முயற்சி செய்வாய்

வலிகளும் வேதனைகளும்
உன்னை முடக்கிவிடும்.

பின்பு நீ கண்ணீருக்கு அடிமையாவாய்

வாழ்க்கை உன்னை விட்டு தொலைதூரம்
போய் விடும்.

காலம் கடந்து கனவை அடைந்து விடலாம் என
நீ நினைப்பாய்

அப்போது உன் ஆயுளும் உன் வாழ் நாட்களும்
முடிந்துவிடும்

நீ தோல்வி அடைந்ததற்கு நீயே முழுக்காரணம்
ஆவாய்.

உலகம் பரந்த போர்க்களம்.
அதில் உனது இருப்பு தற்காலிகம்.

வாழ்க்கை ஒரு வெற்று கனவு
என நினைத்து சோர்ந்து விடாதே...

நீ வெற்றி பெற்றால் மரிணித்த பின்பும்
இதயங்களில் உயிரோடு இருப்பாய்.

தவறான முடிவுகளால் குழம்பாதே
உனது இலக்கினை உனது எஜமானாக மாற்று
கடந்த கால இனிமைகளை நினைத்து
நேரத்தை
வீணாக்காதே - உன் எதிர் காலம் இறந்து
விடும்.

எதிரிகளைளை வீழ்த்துவதற்கு நீ
பொறியை உருவாக்க தேவையில்லை...

நியாயமான வழியில் உழைத்து கொண்டு நீ
பொறுமையோடிருக்க கற்றுக் கொண்டாலே
போதும்

இழப்புகளை கடந்து செல்லு
அவற்றை உன் இருதயத்தில் அமர விடாதே

நீ புகழ் அடையும் போது
மற்றவர்களை மதிக்க தவறாதே

எல்லோருமே உன்னை போன்ற மனிதர்கள்
தான் என நீ உணர்ந்தாலே போதுமானது.

நீ நல்ல மனிதனாக இந்த உலகத்தில்
வாழ்ந்திருக்கிறாய் என பொருள் படும்.

4ம் பக்கத் தொடர்ச்சி

## ஆண்களின் கதி அதோகதியாகும்

சரி போகட்டும் விடுங்கள். ஆனால் செயற்கையும் ஆண்களுக்கு எதிராகவே இயங்கப் போவதைப் பற்றிச் சற்றே சிந்தியுங்கள். முளைவகையாக்கல் எனும் செயற்கை முறையால் இனப்பெருக்கம் செய்யலாம் என கண்டு பிடித்த அன்றே ஆண்களுக்கும் சனியன் பிடித்து விட்டது எனலாம்.

ஒரு பெண் ஆணினது உதவி இல்லாமலேயே குழந்தை ஒன்றினுக்கு முளைவகையாக்கல் மூலம் தாயாகலாம் தானே.

அவள் தனது முட்டை ஒன்றினை எடுத்து அதன் கருவினை அகற்றிய பின்னர் தனது உடற்கலத்தில் ஒன்றினை அதனுள்ளே செலுத்த அந்த முட்டை விருத்தியுற ஆரம்பிக்கும். உடனே அந்த முட்டையை தனது கருப்பையின் உள்ளே பதித்து கற்பதாரியாகி விடலாம். குழந்தை கருப்பையினுள்ளே விருத்தியுற்று முழுமையாக விருத்தியுற்றதும் பிறக்கிறது. உடற்கலம் தாயினதாக இருந்தால் குழந்தை அப்படியே அச்சொட்டாகத் தாயின் பிரதியாக இருக்கும். மாறாக தாய் இன்னொரு பெண்ணிது உடற்கலத்தினைப் உபயோகித்திருந்தால் குழந்தை அந்தப் பெண்ணினது பிரதியாக அமையும். இப்பொழுது 10 மில்லியன் வருடங்களின் பின்னர் நடைபெறப்போவதைப் பற்றிச் சிந்திகலாம்.


அப்போ ஆண்கள் இல்லாமல் போகும் வாய்ப்பு உள்ளது என்றேன். முற்றாக மனித இனமே அழிந்து விடக் கூடிய நிலையும் ஏற்படலாம் என்றேன். ஆனால் இந்த முளைவகையாக்கல் பெண் இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றப் போவதைப் பார்த்தால் 10 மில்லியன் வருடங்களின் பின்னர் உலகமே அவர்கள் கையில் தான் என்பது புலனாகும்.

அப்போ அக்காலத்தில் குடும்ப வாழ்க்கை என்பதே இருக்க மாட்டாதா? இதனை எதிர் பார்த்துத்தானோ என்னவோ கனடா உட்பட்ட சில நாடுகளின் அரசுகள் ஒத்த இன திருமணத்துக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளன. இந்த நாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிப்பதைக் காணலாம். பிரான்ஸ் நாடும் இப்பட்டியலில் சேரவுள்ளது. அந்நாட்டின் அதிபர் அங்கீகாரம் கொடுக்க முன்வந்துள்ளார். ஆகவே விரைவில் உலகம் பூராவுமே ஒத்த இனத்திருமணத் தம்பதிகளைக் காண முடிறுயும்.
அவர்கள் குடும்பமாக வாழ்வார்கள். தேவையான பொழுது முளை வகையாக்கல் மூலம் பிள்ளைகளைப் பெற்று வம்சத்தை விருத்தி செய்வார்கள். முளைவகையாக்கலை இரண்டு வகையாக வகுத்துள்ளார்கள். மருத்துவத்துக்கான முளைவகையாக்கல் (Therapeutic cloning என்பது ஒரு வகை மற்றையது இனப்பெருக்கத்துக்கான முளைவகையாக்கல் (reproductive cloning). இதில் முன்னையதை பல அரசாங்கங்கள் அங்கீகரித்துள்ளன.

நோயியலில் வைத்தியத்துற்கு அது மிகவும் உபயோககரமானது என்பதால் குறிப்பிட்ட ஒரு அளவுடனே விருத்தியை நிறுத்தி விடவேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. இரண்டாவது, அரசாங்கங்களினால் விலங்கு இனப்பெருக்கத்துக்கு மாத்திரம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மனித இனத்துக்கு மறுக்கப் பட்டுள்ளது. ஆனால் இது எத்தனை நளைக்கு என்பதே கேள்வி? இவை எல்லாம் இப்போ நடைபெற மாட்டாது ஆனால் எப்போ நடைபெறுகிறதோ அப்போ ஆண்களின் கதி. நினைக்கவே பயமாயுள்ளது. அப்போ நான் எங்கே?




G SYSTEMS Dreams Of Technology
+44 2035005944
+1 6467553014
+94 112364394
+1 6478461813
+61 283104289
+34 931807349
+41 315281679
+35 227862039
+32 28080901
+45 89878033
info@gsystem.co
www.gsystem.co



**Dr IN**

# மெதுவாக உண்ணுங்கள் மெல்லியராக மாறுங்கள்

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

”இவள் சரியான வேலைக் கள்ளி. கோப்பைகள் கழுவுகிற வேலை தன்ரை தலையிலைவிழுந்துவிடும் என்று மெல்ல மெல்லச் சாப்பிட்டு கடைசி ஆளாத்தான் எழும்புவாள்” எனஅம்மா மகளைப் பற்றிப் புறுபுறுத்தாள்.
”இவவோடை டினர் சாப்பிடப் போனால் கடைக்காரன் பூட்டப் போறன் என்றுஅவசரப்படுத்தி எழுப்பினால்தான் எழும்புவாள்” என்று நக்கல் அடித்தவர் ”வாய்நோகாமல் சாப்பிட்டு ஸ்டைல் காட்டுவா” என நீட்டி முடித்தார்.

மற்றவர்கள் தவறெனக் காரணம் காட்டிப் பேசினாலும் நக்கல் அடித்தாலும் சிலரால்தமது பழக்கத்தை மாற்ற முடியாது. இருந்தபோதும், சில பழக்கங்கள் நன்மையும்தரலாம். மெதுவாக உண்பவர்களில் பலர் மெல்லிய உடல் வாகினராக இருக்கிறார்கள்.

மாறாக இன்றைய உலகமானது அவசரமும் நேரநெருக்கடி மிக்கதாகவும் மாறிவிட்டது.பல்வேறு பாராக்குகளுக்கு குறிப்பிட்ட குறுகிய நேரத்திற்குள் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அதுவும் அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் இதன் தாக்கம் மிகஅதிகம். உணவின் சுவையை இரசிப்பதற்கோ, நன்கு மென்று தின்பதற்கோ நேரமின்றிவாயில் போடுவதும் விழுங்குவதுமாக அடித்துப் பிடித்து ஓடுகிறார்கள். இதனால்தானோஎன்னவோ அவர்கள் பெரும்பாலும் குண்டுப் பீப்பாக்கள் போலத் தோற்றமளிக்கிறார்கள்.

## மெதுவாக உண்ணல் ஆய்வுகள்

அண்மையில் செய்யப்பட்ட ஒரு ஆய்வானது, ஆறுதலாகச் சாப்பிடுவதானது உடல்நலத்திற்கு நன்மை பயக்கும் எனச் சொல்கிறது. 35 அதிக எடையுள்ளவர்களையும் 35சாதாரண எடை உள்ளவர்களையும் கொண்டு 2 நாட்களுக்கு மட்டும் செய்யப்பட்டஆய்வு பற்றிய தகவல் Journal of the Academy of Nutrition and Dietetics சஞ்சிகையின்ஜனவரி 2ம் திகதி இதழில் வெளியாகியுள்ளது.

அதன் பிரகாரம் சாதாரண எடை உள்ளவர்கள் ஆறுதலாகச் சாப்பிடும்போது வழமையைவிட 88 கலோரிகள் குறைவாகவே உள்ளெடுத்திருந்தனர். ஆனால் அதிகஎடையுள்ளவர்கள் 58 கலோரிகள் குறைவாக உள்ளெடுத் திருந்தனர். வேறுபாடுகள் இருந்தபோதும் உட்கொண்ட கலோரி வலுவில் குறைவு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. உணவின் அளவு கட்டுப்படுத்தப்படவில்லை. தங்கள் தேவைக்கு ஏற்பஉண்ட போதும் இது நடந்தது.

ஆறுதலாக சாப்பிடுவது என்பது சுமார் 22 நிமிடங்களை எடுத்தது. விரைவாகச்சாப்பிடுவது சுமார் 8 நிமிடங்களை எடுத்தது.ஆறுதலாகச் சாப்பிடும்போது அதீத எடையுள்ளவர்கள் வழமையை விட 33 சதவிகிதம்அதிகமாக நீர் அருந்தினார்களாம் எனவும் அந்த ஆய்வு கூறியது. அதே வேளைசாதாரண எடையுள்ளவர்களும் சற்றுக் குறைவாக அதாவது 27 சதவிகிதம் அதிகமாக நீர்அருந்தினார்களாம்.
சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது இடையில் நீர் அருந்தக் கூடாது என்ற நம்பிக்கைஎங்களில் பலரிடையே இருக்கிறது. உணவு சமிபாட்டு நொதியங்களை (enzymes)நீர்த்துப் போகச் செய்து சமிபாடடைவதைப் பாதிக்கும் என்பது தவறான கருத்தாகும்.

மாறாக உதவக் கூடும். உணவுத் துகள்களை சிறியதாக்கி கரையச் செய்வதால் சமிபாடுதுரிதமாக்கி விரைவில் உறிஞ்சச் செய்யும் என்பதே உண்மையாகும்.
இந்த இடத்தில் மற்றொரு விடயத்தையும் ஞாபகப்படுத்தலாம். ஒருவர் உணவு உட்கொள்கையில் வயிறு நிறைந்த உணர்வை அவர் பெறுவதற்கு உட்கொள்ளஆரம்பித்த நேரத்திலிருந்து சுமார் இருபது நிமிடங்கள் மூளைக்குத் தேவைப்படுகிறதுஎன்பதாகும்.

இதைத் தவிர ஜப்பானில் 1700 இளம் பெண்களிடையே செய்யப்பட்ட மற்றொரு ஆய்வும்ஆறுதலாகச் சாப்பிடுவதால் விரைவிலேயே வயிறு நிறைந்த உணவு ஏற்படுகிறது என்றும்அதனால் அவர்கள் உள்ளெடுக்கும் உணவின் கலோரி வலு குறைவாகவே இருக்கிறதுஎனவும் கூறியது.

University of Rhode Island செய்யப்பட்டமற்றொரு ஆய்வானது ஆறுதலாகஉண்பவர்கள் நிமிடத்திற்கு 28.4 கிராமைஉட்கொள்வதாகவும், இடைநடுவானவேகத்தில் உண்பவர்கள் நிமிடத்திற்கு 56.7கிராமை உட்கொள்வதாகவும், வேகமாகஉண்பவர்கள் நிமிடத்திற்கு 88 கிராமை உட்கொள்வதாகவும் கண்டறிந்தது. நன்மைகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டுஆறுதலாக உண்பதின் நன்மைகளை நாம்சுலபமாக ஊகித்து அறியலாம். ஆறுதலாகச்சாப்பிடும்போது குறைந்த அளவுகலோரிகளே உள்ளெடுக்கப்படுகிறது. இதுஏன்?விரைவாகச் சாப்பிடும்போது வயிறு நிறைந்த உணர்வு ஏற்படாது.

எனவே அதீதமாக உணவை உட்கொண்டுவிடுவார்கள். மாறாக ஆறுதலாகச் சாப்பிடும்போது கொஞ்சம் கொஞ்சமாகவே உணவுஉட்கொள்ளப்படுவதால் ஓரளவுஉண்ணும்போதே 20 நிமிடங்கள் கடந்துவிடும். அப்பொழுது வயிறுமுட்டிப்போச்சு என்பது தெரியவரும். மேலதிகமாக உட்கொள்ள நேராது.
ஆறுதலாகச் சாப்பிடும்போது நீர்அருந்துவதற்கான வாய்ப்பு அதிகம் கிடைப்பதால் உணவின் இடையே அருந்துவார்கள். இதுவும் வயிறு நிறைந்த உணர்வை கொடுத்து உணவின் அளவைக்குறைக்கச் செய்யும்.
நிதானமாகச் சாப்படும்போது நன்கு மென்று உண்ணக் கூடியதாக இருக்கும். மென்றுஉண்ணுவதால் உணவு சற்று அதிக நேரம்வாயிற்குள் இருக்கும். உணவுச் செரிமானம்எச்சிலில் ஆரம்பித்துவிடுகிறது. எனவேஆறுதலாகச்

**தொடர்ச்சி 12 ம் பக்கம்...**



11 ம் பக்கத் தொடர்ச்சி

**மெதுவாக உண்ணுங்கள் மெல்லியராக மாறுங்கள்....**



உணவை ஆறுதலாகச் சாப்பிடும்போது நாம்உண்ணும் அளவு குறையும். அதனால் எடைஅதிகரிப்பு தடுக்கப்படும் என்பதுஉண்மையே. ஆறுதலாக உண்ணும்போது சுவைகளைசப்புக்கொட்டி ரசிக்க முடிகிறது.

வாசனையை நன்கு நுகர முடிகிறது. உணவுதயாரிக்கப்பட்ட விதத்தையும் அதன்பதத்தையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.அதனால் மனத் திருப்தி ஏற்படுகிறது. இதனால் உணவு உண்ணும் செயற்பாடானதுமகிழ்ச்சிக் குரியதாக இருக்கும். உணவு வேளையை மேலும் மகிழ்ச்சியாக்க நாம் செய்ய வேண்டியது என்ன? இரசனையோடு உண்ணுங்கள்மென்மையான இசையை பின்னணியில் இசைக்க வையுங்கள். பளீரெனத் தெறிக்கும் ஒளிகளை அணைத்து மெல்லிய இதமான ஒளியை வையுங்கள். மெழுகு திரி ஒளியில் இரவு உணவு உண்பது அற்புதமான அனுபவமாக இருக்கும். வேறு சுவார்ஸமானவிடயங்களில் மனத்தைச் செலுத்தாதீர்கள். தொலைக்காட்சி பார்ப்பது, விவாதங்களில் ஈடுபடுவது போன்றவற்றைத் தவிருங்கள்.உணவில் மட்டுமே மனத்தைச் செலுத்துங்கள். நாக்கும் மூக்கும்உங்கள் சுயுணர்வை மிகைப்படுத்தி அரிய அனுபவத்தைக்கொடுக்கும். உணவின் சுவையும் பதமும் உள்ளத்தில் கிளர்ச்சியைஏற்படுத்தும். திருப்தி கிட்டும்.

மற்றவர் களுடன் சேர்ந்து உண்ணும்போது, இடையில் ஒரு சில நிமிடங்களுக்கு உண்பதைத்நிறுத்தி அவர்களுடன் சில வார்த்தைகள் பேசுங்கள். நேரம் கழியும். விரைவில் வயிறு நிறைந்த உணவு கிட்டிவிடும். ஆயினும் சுவார்ஸமான விடயங்களை ஆரம்பித்து அதில் மூழ்கி உண்ணும்அளவை மீறிவிடாதீர்கள்.

நன்கு சாப்பிட்டு வயிறு நிறைந்திருக்கும் தருணத்தில்தானேபொதுவாக ஈற்றுணவு (னநளளநசவ) வருகிறது. இருந்தபோதும் ஈற்றுணவின்இனிப்பும் நறுமணமும் நிறைந்த வயிறு நிறைந்ததை மறக்கவைக்கும். மீண்டும் அவற்றைச் சாப்பிடத் தூண்டும். எனவே உணவுமுறையில் ஒரு தலைகீழான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்.

முதலில் ஈற்றுணவை சுவையுங்கள். கேக் அல்லது புடிங் போன்ற எதுகிடைத்தாலும் சிறுகக் கடியுங்கள. அதன் சுவையில் நனைந்த பின்னர்முக்கிய உணவிற்கு செல்லுங்கள். தேவையற்ற கலோரிகளை உள்ளெடுப்பதை இதனால் தடுக்க முடியும்.

பழங்களும் காய்கறிகளும் நிறைந்த உணவுகளைத் தேர்ந்தெடுங்கள். இவற்றைச் சப்பிச் சாப்பிட கூடிய நேரம் தேவைப்படுவதால் நீங்கள் ஆறுதலாகவே சாப்பிட முடியும். அது முற்கூறிய நன்மைகளைத்தரும். உணவு உட்கொள்ளும் பாத்திரத்தை சிறிதாகத்தேர்ந்தெடுங்கள். இதனால் நீங்கள் உங்கள் கோப்பையில் பகிரும்உணவு மட்டுப்பட்டிருக்கும். அதனால் உண்ணும் அளவு குறையும்.

மெதுவாகச் சாப்பிடுங்கள் என்பது சொல்வதற்கு சுலபம் ஆனால்மும்மரமான வேலையில் இருக்கும் போது ஆற அமர இருந்துசாப்படுவது கஷ்டம்தான். ஆனால் உணவு நேரங்களைஒழுங்குமுறையில் கடைப்பிடித்து நேரம் தவறாது உண்ணுங்கள்.

ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்தால் நேரம் ஒதுக்குவதில்சிரமமிருக்காது. ஒவ்வொரு உணவு வேளைக்கும் குறைந்தது 20நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரை ஒதுக்குங்கள்.அத்துடன் ஒரு நேர உணவிற்கும் அடுத்த உணவிற்கும் இடையேநீண்ட இடைவெளி இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுஅவசியமாகும்.






# உடலோடு உள்முகப்பயணம்

## 10 வாயுக்களும், 96 தத்துவங்களும்



இந்தப்பிரபஞ்சம் மனிதன் எனும் மகத்தான சக்திக்கொள்கலனாக தன்னுள் தானே இப்புவியில் பரிணமித்திருக்கின்றது. ஆம் நிச்சயமாக அப்படித்தான் நிகழ்ந்திருக்கின்றது. பரிணாமத்தின் அற்புதமான பிரசவிப்பு. எப்படி இது நேர்த்தியாக நிகழக்கூடும் எனும் ஆராய்ச்சியில் ஆழமான மர்ம முடிச்சுகள் சிலவற்றை பகுத்தறிவிற்குற்பட்டும் அதற்கப்பால் சென்றும் திரைவிலக்கி பார்ப்போம்.

மனிதனை ஆராயமுற்படும் முன்னர் 96 தத்துவங்களிலான மனித உடலைப்புரிந்துகொள்ள வேண்டும். அதிலும் மிக முக்கியமான மனித உடலை செம்மையாக வழிநடத்தும் தசவாயுக்களை பற்றிய அறிவு மிக முக்கியமானதாகும். அகத்தியப்பெருமான் கூற்றிற்கிணங்க தசவாயுவை உணர்ந்து தெளிந்து அவற்றை பிராணனுள் ஒடுக்கியவனே உண்மையான நிலைமாறா சிவயோக நிலையை அடைந்த சித்தனாவான். அவனாலே இப்புவியில் எதுவும் சாத்தியம். சமப்பிராணாயாமம் எனும் தசவாயுப் பயிற்சிமூலம் அண்டத்தை பிண்டத்துடன் இணைத்திருப்பான். இது எப்படி சாத்தியம். மானிடராக உருமாறிய அத்தனை ஜீவனாலும் முயற்சித்து பார்க்கவேண்டிய அற்புதமான யோகமே இது.

எல்லாப்பொருட்களின் ஆரம்பமும் முடிவும் சூன்யமாக இருக்கின்றது. அதாவது ஒன்றுமேயில்லாத நிலைதான் சூன்யம்.இல்லாத ஒன்றிலிருந்துதான் எல்லாமே தோன்றியிருக்கின்றது. நவீன விஞ்ஞானத்தின் உச்சகட்ட ஆராய்ச்சி முடிவும் இதுதான். சூன்யத்தில் இருந்து முதலில் ஆகாச சக்தி பிறக்கின்றது.
சூன்யத்திலிருந்து பிறந்த பஞ்சபூத சக்தியில் ஒன்றான ஆகாசம் ஏனைய பஞ்சபூதசக்திகள் தோன்ற காரணமாயிருக்கின்றது. முறையே ஆகாசத் திலிருந்து காற்றும் காற்றிலிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரிலிருந்து நிலமும் தோன்றி இறுதியாக மாபெரும் படைப்புக்களை நிகழ்த்தும் பஞ்சபூத சக்திகளாக சூன்யத்தலிருந்து பிறப்பெடுக்கின்றன. இந்த பஞ்சபூதங்களே பஞ்சீகரணம் எனும் செயல்முறையூடாக 96 தத்துவங்கள் தோன்ற காரணமாயிருக்கின்றன.

சூன்யவெளி ஒரு புள்ளித்திணிவை உருவாக்கி பஞ்சபூத சக்திகள் ஊடாக இப்பரந்து விரிந்த மகா அண்டத்தை உருவாக்கியுள்ளது. எமது கண்ணுக்கெட்டாத தூரம் வரை பரந்து விரிந்து பல கோடி ஒளியாண்டுகளால் நீளும் இப்பிரபஞ்சம் ஒரு அணு அளவிலான புள்ளியில் இருந்து தோன்றியது என்றால் நம்ப முடிகின்றதா?. ஆம் விஞ்ஞானம் அதை ஒத்துக்கொள்கின்றது.

பெற்றோரின் இயல்புகள் பிள்ளைகளை சென்றடைவது போல சூன்யத்திலிருந்து பிறந்த பிரபஞ்சம் முழுவதும் சூன்யதன்மை ஊடுருவி நிற்கின்றது. இந்த சூன்ய தன்மைதான் பிராணசக்தியின் மூலம் பஞ்சபூதங்களுக்கிடையே சமநிலையை ஏற்படுத்தி அண்டத்தின் சமநிலையையும் உயிர்ப் பிண்டத்தின் ஜீவசமநிலைகளினையும் பேணுகின்றது. எமது ஒவ்வொரு அசைவிலும் செயலிலும் அந்த சூன்யம் மறைந்து ஊடுருவி நிற்கின்றது. அந்த சூன்ய நிலையினை உணர்ந்து உணர்ந்து உணர்வு கரைந்து சூன்யமாகவே உருவெடுக்கும் நிலைதான் முக்தி. அதனை எப்படி சிறப்பாக செயற்படுத்துவதென நம் முன்னோர்களான யோகிகளும் மகாஞானிகளும் சித்தர் பெருமக்களும் தெளிவான தடங்களை விட்டுச்சென்றிருக்கின்றார்கள். அவற்றில் முக்கியமான ஒன்றுதான் இந்த 96 தத்துவ தெளிதலில் மிக முக்கியமானது இந்த தசவாயுக்கள்.



கரிணி

ஆகவே இந்த முழு உண்மையை நாம் சந்தேகத்திற்கிடமின்றி தெளிந்து கொள்ளவேண்டும்.
மனித உடலில் உயிர் வலிமை பெற பஞ்சபூத சமநிலை மிக முக்கியமானது. பஞ்சபூத சமநிலை மனித உடலில் நிலைபெற தசவாயு சமநிலை முக்கியமானது. தசவாயு சமநிலையைப் பேண பிராணசக்தி அவசியம். பிராண சக்தியைத் பெற தச வாயுக்களின் தலையாய வாயுவாகிய பிராணவாயுவின் இயக்கம் முக்கியமானது. பிராண வாயு இயங்க வேண்டுமெனில் நுரையீரல் சுவாசிக்க வேண்டும். நுரையீரல் சுவாசிக்க வேண்டுமெனில் பூரகம்(உட்சுவாசம்), ரேசகம்(வெளிச்சுவாசம்) நிகழவேண்டும். பூரகம் மற்றும் ரேசகம் நிகழ்வதற்கு தச நாடிகளில் ஒன்றினால் சக்தி நுரையீரலிற்கு கடத்தப்பட்டு நுரையீரல் தசைகள் இயங்க வேண்டும். நாடிகள் தமக்கான சக்தியை பிரதானமாக ஏழு சக்தி மையங்களான ஏழு சக்கரங்களிலிருந்து பெறுகின்றன. பிராண வாயு இயக்கத்தினை ஏற்படுத்தும் நாடி தனக்கான சக்தியை நெற்றிப் பொட்டாகிய ஆக்கினை சக்கரத்திலிருந்து கிரகிக்கின்றது. ஆக்கினை சக்கர மையம் தலையுச்சியாகிய பிரம்மரந்திர சக்கரத்திலிருந்தும் பிரம்மரந்திரமானது வெட்டவெளி சூன்யத்திலிருந்தும் சக்தியை கிரகித்துக்கொண்டிருக்கும்.
இப்படியாக சுவாசம் நிகழ்ந்து 96 தத்துவங்களும் உடலில் நிலைபெறுகின்றன. சிறிது மூச்சை நிறுத்தினால் கூட இந்த 96 தத்துவங்களும் ஸ்தம்பித்துப் போகும். யோகிகளிடையே மூச்சை நிறுத்தும் கும்பகப் பயிற்சி இதனாலேயே சிறப்புற்றிருக்கின்றது. பிராண இயக்கத்தினை நிகழ்த்தும் சூன்யத்தை காற்றின் மூலம் பிடிக்கும் கலையை திருமூலர் மிகத்தெளிவாக விளக்கியிருக்கின்றார்.

சுவாசம் மூலம் உயிர்க்காற்றான பிராணன் உயிர்ப்பொருட்களில் அசைகின்றது. உயிரற்ற ஜடப்பொருட்களில் பிராணன் உறைநிலையில் செயற்படாது இருக்கின்றது. உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் ஆரம்பத்தில் பிராண வாயு மாத்திரம் உயிர் நிலைத்தலிற்கு போதுமானதாக இருந்தது. படிப்படியாக பரிணாமத்தில் உயிரின் இயக்கமும் தேவையும் சிக்கல் தன்மையும் அதிகரிக்க உயிர்களின் உடல் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையினை இயற்கை உருவாக்கியது. அதுவரை உயிரின் நிலைத்திருப்பை மாத்திரம் உறுதிசெய்த பிராணன் உயிரின் அசைவுகள் தொழிற்பாடுகள் போன்றவற்றிற்கு ஏற்றாற்போல் தனது செயற்பாடுகளினையும் மாற்றிக்கொண்டது. காரணம் உயிரின் சிக்கல் நிலைக்கேற்றாற்போல் பிராணன் தன்னை மாற்றிக்கொள்ளாது விடின் உயிர்விசை தடைப்படும். உயிர் அசைய ஆரம்பிக்கும் போது அதற்கான சத்தியை கொடுக்கும் அளவிற்கு பிராணன் விரிவடையவில்லை எனவே உயிரானது தனக்கான சக்தியாக புறப்பொருட்களை உணவாக உண்டு அவற்றில் உள்ள பிராணசக்தியைக் கொண்டு தனது தொழிற்பாடுகளை மேம்படுத்தி பிராண இயக்கத்தின் உச்சமான சிக்கல் நிறைந்த மனித உடலாக தன்னை செதுக்கிக்கொண்டது.

புல் பூண்டு செடி கொடி தாவரம் விலங்கு என அத்தனை வகைகளிலும் இந்த வாயுக்களின் இயக்கங்களினை அவற்றின் தன்மை செயற்பாடு என்பவற்றிற்கேற்ப சிறப்பாக விளக்கமுடியும். ஆனாலும் மனித உடலில் இவற்றின் சிறப்புக்களை ஆராய்தல் மிகுந்த பயனுடையதாக இருக்கும்.

இதனை அடுத்த இதழில் காண்போம்.



டோட்மூண்ட் நகரில்...



# K.K.L

**Textilien Schmuck Haushaltsware**

**11.01.2020 சனிக்கிழமை**

**3 ம் ஆண்டு நிறைவையும் தைப் பொங்கலையும் முன்னிட்டு**

## 50% முதல் 70 % வரை

விலைக்கழிவில்
(சாறி, சாறி பிளவுஸ் பஞ்சாபி
சேட் குர்தா சிறுவர் ஆடை
அனைத்து ஆடைகளுக்கும்)

https://m.Facebook.com
kkl.textillenschmuck

## சிறப்பு மலிவு விற்பனை!

இமிற்றேஷன் நகைகள்
அனைத்தும் கழிவு விலையில்

100 € மேல் கொள்வனவு செய்யும்
ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
நிச்சயம் பரிசுப் பொருட்கள் உண்டு

**சேலைகளுக்கு பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும்.**

அனைத்துவகை ஆடைகளும்
புத்தம் புது டிசைன்களில் கிடைக்கும்

**அனைவருக்கும்
எங்கள் இனிய தைப்
பொங்கல் வாழ்த்துக்கள்**

Rheinische str.56 - 44137 Dortmund Tel: 0231 96 98 6610

# யேர்மனியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா







கடந்த 04.12.2019அன்று ஜேர்மனி ஸ்ருட்காட் நகரில் உள்ள லிண்டன் அருங்காட்சியகத்தில் தமிழ் மரபு அறக்கட்டளையின் ஜேர்மன் கிளையினரும் மேற்படி அருங்காட்சியகத்தின் செயல்பாட்டாளர்களும் இணைந்து இரு திருவள்ளுவர் சிலைகளை திறந்து வைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வினைச் செய்திருந்தனர்.

இச்செயல்பாட்டுக்கு மூலவேராக இருந்தவர் ஜேர்மனிய ஐடி துறையின் அதிகாரியும்,முனைவருமான சுபாசினி அவர்கள்.
இச்சிலையை நிறுவ வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மாமல்லபுரத்தில் இச்சிலையை,சிற்பி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் அதனை வடித்து தமிழக அரசின் அமைச்சர் மா.பா.பாண்டியராஜன் அதனை விதந்துரைத்து ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கும் வரையும் முனைவர் சுபாசினியுடன் இணைந்து பலர் கடுமையாக உழைத்தனர்.

இவ்விழாவிற்கு ஓய்வுபெற்ற இந்திய நிர்வாக சேவை அதிகாரி பாலச்சந்திரன் அவர்கள், ஈழத்தைச் சேர்ந்த கனடாவில் வசிப்பவருமாகிய சேரன் அவர்கள்,திருவள்ளுவர் யார்? என்ற நூலை எழுதிய கௌதம சன்னா, தமிழகத்தைச் சேர்ந்த ,ந்திய மத்திய அரசின் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன்,இன்னும் பல தமிழகப் படைப்பாளிகளும், ஈழப்படைப்பாளிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அருங்காட்சியகத்தின் இயக்குனரான Prof. Dr. Indes de Castro, director, Linden-Museum வரவேற்புரை நிகழ்த்தினார்.

Dr. Georg Noack> Curator Linden-Museum யார் இந்த திருவள்ளுவர் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார் இந்தியத் தூதரான Mr. Sugandh Rajaram (Consulate-General of India, Munich), நூல் வெளியீட்டினை செய்தார் தமிழ் மரபு அறக்கட்டளை நிறுவனர் Dr. K. Subhashini ஐரோப்பா/ஜெர்மனியில் திருக்குறளின் தாக்கம் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார் மேலும் இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை விளக்கி உரை நிகழ்த்தினார்.

கனடாவிலிருந்து வருகை தந்திருந்த ஊடகவியல் மானிடவியல் குற்றவியல் பேராசிரியர் திரு.சேரன் உருத்திரமூர்த்தி அவர்கள் திருக்குறளை ஒரு புதிய பார்வையுடன் ஆய்வு ரீதியாக உரை யாற்றினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும், இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான திரு மிகு தொல். திருமாவளவன், சாதி, இனம், மதம் கடந்த ஒரு பொது மறையான திருக்குறள் தமிழ் உலகின் பெருமை என்பதை வலியுறுத்தி சிறப்புரை ஆற்றினார்.

திரு கவுதம சன்னா இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்தியும், "திருவள்ளுவர் யார் - கட்டுக்கதைகளைக் கட்டுடைக்கும் திருவள்ளுவர்" என்கிற தன் நூலில் உள்ள சிறப்பம்சங்களை விளக்கி கூறினார்.

திரு பாலச்சந்திரன் IAS (ஓய்வு) திருக்குறள் தொன்மையான இலக்கணமாக இருப்பினும் எக்காலத்திற்கும் பொருந்துமாறு வள்ளுவன் வடித்த சிந்தனைகள் பலவற்றை மேற்கொள் காட்டி, இந்த சிலைகளை இங்கு நிறுவுவதன் வாயிலாக தமிழர் சிந்தனை உலகறியச்செய்வதில் ஒரு முக்கிய பங்காற்றும் என வாழ்த்தினர்.அத்துடன் இலங்கைத்தமிழர்கள் சார்பாக திரு.பொ.சிறீயீவகன் (வள்ளுவர் தமிழப் பாடசாலை) திருமதி.பொன் தெய்வெந்திரம் (சமூக ஆர்வலர் தமிழ்மொழி ஆசிரியை) திரு ஏலையா க.முருகதாசன் (தலைவர் பன்னாட்டு புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்) திரு.த.இரவீந்திரன் (இயக்குனர் ஐரோப்பிய தமிழ் வாகனாலி பிரதம ஆசிரியர் அகரம் சஞ்சிகை அகரதீபம் சஞ்சிகை) திரு.வி.சபேசன் (எழுத்தாளர் தமிழ் அரங்கம்) திரு.குமரன் (எழுத்தாளர் பேச்சாளர்) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழகத்தில் இருந்து சிறப்பு விருந்தனர் இந்நிகழ்விற்காக ஜெர்மனி வந்து இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

ஐரோப்பாவில் பிரான்ஸ், ஸ்வீடன், டென்மார்க், நோர்வே மற்றும் பல நாடுகளில் இருந்தும் வெவ்வேறு தமிழ் அமைப்புகளை சேர்ந்தவர்களும், தமிழ் ஆர்வலர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.பொதுவாக இலங்கைத்தமிழர்களின் விழாக்களில் தமிழகத் தமிழர்கள் மிக அரிதாகவே கலந்து கொள்வார்கள்.அது போல தமிழகத் தமிழர்களின் விழாக்களிலும் இலங்கைத் தமிழர்கள் அரிதாகவே கலந்து கொள்கார்கள்.ஆனால் இந்த விலாவில் மட்டுமே தமிழகத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் சரிக்குச் சரியாக கலந்து கொண்ட பெருமையை தேடிக் கொடுத்தவர் முனைவர் சுபாசினி அவர்களே.

தகவல் : **ஏலையா க.முருகதாசன்**



Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de


Frankfurt நகரில்....
Jaffna Bazar
Jaffna Bazar
அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
தங்க நகைகள் தரமானவை மட்டும்
என்றும் எம்மிடம் கிடைக்கும்
உங்கள் பழைய
நகைகளைத் தந்து
புதிய டிசைன்
நகைகளைப்
பெறுங்கள்!
KADHIR
Laila
Basmati Rice
Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்

# THE WITNESS





Lathesha Balamuraly
Neuroscience Undergraduate at Kings College London

*Learn to discipline your emotions because if you don't, your enemies will use them against you- Bruce Lee.*

Emotions are what makes us all humans. It is an integral part of our nature, but again it is a concept that has to be taken in moderation. Too little and we close ourselves off and too much makes us push people away. Through spirituality, one must realise that everyone is one and the same. Everyone has their own load of troubles. And everyone is suffering in their own way. Through this we should transform ourselves from having selfish and personal interests to being universal.
The Vedanta states how emotions can overpower oneself; victimise you to the point of destruction. We are no longer the master but a slave to our feelings.
Especially those moments when you just breakdown and leave everyone shocked And this is because you let other people's words hurt you, even though they have not lived a second of your life. You know yourself better.
For instance, many of us allow certain people to take over our thoughts to the point we lack in sleep, forgetting about our own health. Or when we are so consumed in fear and anxiety, that our minds go blank and we no longer have control over our body.
But, emotions should be taken in proper doses like medicine: you can have emotions, but don't become emotional. Have sentiment towards others but don't become sentimental. Instead, let your intellect guide your actions not your impulsive mind.
Yes, all of us have anger but when we are consumed by it, we speak with no thoughts and hurt others unintentionally. We scream at each other and bringing out the worst in one another. And the absolute stupid things we fight over -_-

I have been in this situation when anger has gotten the best of me. And the amount of regrets one has after the fight, is embarrassing and shocking.
So here's my advice. Whenever someone confronts you, even if they are wrong, sit back and let them air it out. Let them scream it out, and use up their energy to be spiteful. You just sit back and watch them go from a rational to an irrational manic person.

Once they are completely void of any energy left, and say I understand where you are coming from but this is what I did/said/thought. If they still interrupt you or give you no room for an answer, that's when you should realise that they don't care what you feel or think. They just want to dominate you and hurt you. At that point, you should leave.
Don't waste your energy on people who don't even give the time for you to respond. And trust me, you will be glad to not waste your time in conflicts. The energy that we waste in fighting or gossiping, we could use on investing in ourselves.
Like I mentioned before, fire is an element that burns within ourselves (the will) and is also present in the world for warmth and food. But when it burns with no control, it destroys without mercy. And that is how our anger is like. We either learn to discipline it or else we let it control us and cause chaos.

Remember, there are people out there who will test your anger, and who cause you a lot of trouble. They hate your success or they copy everything you do to the point it aggravates you.
But you have to prove yourselves to them. Don't give up! And don't become like them. Be the calm spiritually evolved person, who takes no negative energy and only emits positive vibes!

03ம் பக்கத் தொடர்ச்சி

## ஜெனீவா“வை எதிர்கொள்வதற்காக........

அதாவது, படையினருக்கு ”நற்சான்றிதழ்” வழங்குவது தான் இந்தக் குழுவின் பணியாக அமைந்திருந்தது.

இந்த அறிக்கை குறித்து மனித உரிமை அமைப்புக்கள் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்த நியாயமான காரணங்கள் இருந்தன. ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படவில்லை என்பது முதலாவது. அதனைவிட சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. சர்வதேச தராதரங்களுக்கு இணைவானதாக விசாரணைகள் இருக்கவில்லை. ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணை வரையறுக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. இந்தக் காரணங்களால் ஐ.நா. நிபுணர் குழு உட்பட மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தும் இந்த அறிக்கையை முற்றாக நிராகரித்திருந்தன.

இந்த அறிக்கையின் பரிந்துரைகள் படிப்படியாக நிறைவேற்றப்படுவதாகச் சொல்லியே மகிந்த ராஜபக்ஷஅரசாங்கம் 2015 வரையில் காலத்தைக் கடத்தியது. அதனைப் பயன்படுத்தி சர்வதேச அழுத்தங்களைச் சமாளித்தது. 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய சிரேஷ்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க, ““ஏற்கனவே 99 வீதமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு அமுல்படுத்தியுள்ளதுடன், இதனைக் கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள அமெரிக்க ஆதரவு பிரேணைக்கு முகம்கொடுப்பதற்கு தயாராகிக்கொண்டிருக்கிறோம்““ எனத் தெரிவித்திருந்தார். ஜெனீவா விவகாரத்தைக் கையாள்வதற்கான பொறுப்பு அப்போது மகிந்த சமரசிங்கவிடம் கையளிக்கப்பட்டிருந்தது என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆக, ஆணைக்குழுவின் அறிக்கை சர்வதேசததைச் சமாளிப்பதற்கான ஒரு உபாயமாகத்தான் அரசாங்கத்தினால், பயன்படுத்தப்பட்டுள்ளதே தவிர, உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பயன்படுத்தப்படவில்லை. ஆனால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சர்வதேசம் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. அதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவும் இல்லை. தம்மால் நியமிக்கப்பட்டு, தமக்கு சாதகமான பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்ட போதிலும் அதனை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வரவில்லை. அதனால்தான் 2015 இலும் பின்னர் 2017 இலும் இரண்டு தீர்மானங்கள் ஜெனீவாவில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இரண்டாவது தடவையாக வழங்கப்பட்ட கால அவகாசம் வரும் மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது. மகிந்த ராஜபக்ஷவும் அந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைத் தூசி தட்டி எடுத்திருப்பது இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஒரு முயற்சியாகத்தான். மகிந்தவைச் சந்தித்த ஐ.நா. குழுவினர் இதற்கான தமது பிரதிபலிப்பை உடனடியாக வெளிப்படுத்தவில்லை. ஆனால், ஜெனீவாவை எதிர்கொள்வதற்காக ராஜபக்ஷக்கள் எவ்வாறான உபாயங்களுடன் சிந்திக்கின்றார்கள் என்பதை இது அவர்களுக்கு உணர்த்தியிருக்கும். மனித உரிமைகள் அமைப்புக்களால் நிராகரிக்கப்பட்ட, படையினரைப் பாதுகாக்கும் வகையிலான பரிந்துரைகளை கைகளில் வைத்துக்கொண்டு சர்வதேசத்தை சமாளிக்க ராஜபக்ஷக்கள் முன்னெடுக்கும் முயற்சிகள் வெற்றிபெறுமா?









1.பேராசிரியர்.சோ.சந்திரசேகரம்.
2.கவிஞர்.சோ.பத்மநாதன்.
3.மூத்த எழுத்தாளர்.திருமதி.கோகிலா மகேந்திரன்.
4.நாதஸ்வர வித்துவான்.வி.கே.பஞ்சமூர்த்தி.
5.வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் ஓவியர்.கலாநிதி.மு.க.சு.சிவகுமாரன்.ஜேர்மனி

**அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பிறந்த நாள் அறக்கொடை விழாவில் (07.01.2020) அன்று தாயகத்தில் 2020 ஆண்டுக்கான சிவத்தமிழ் விருது பெறும் சான்றோர் விபரம்**

**கனடாவில்**

## "சேவையாளர் விருதுகள்"



விருது பெற்றவர்கள் டாக்டர் கதிர் துரைசிங்கம்
மற்றும் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் ஆகியோருடன்
உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்கள்

கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகம் ( National Ethnic Press and Media Council of Canada )என்னும் பத்திரிகையாளர்களை பிரநிதித்துவம் செய்யும் மிகப்பெரிய அமைப்பின் சார்பில் வருடா வருடம் நடத்தப்பெறும் "சேவையாளர் விருதுகள்" வழங்கும் வைபவம் 15.11.2019 வெள்ளி மாலை கனடாவின் ரொரன்ரோ மாநகர சபா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விருது விழாவில் ரொரன்ரோ மாநகரத்தின் முதல்வர் ஜோன் ரோரி மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் சுற்றுலாத்துறை மற்றும் கலாச்சார அமைச்சர் (Hon Lisa MacLeod, the Minister of Heritage, Sport, Tourism and Culture) திருமதி லீசா மெக்லியட் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

தமிழ் பேசும் அன்பர்களான டாக்டர் கதிர் துரைசிங்கம் (வெற்றிமணி பத்திரிகையில் தொடர்ந்து பல வருடங்கள் காதோடு காதக எனும் சிந்தனையூட்டும் நகைச்சுவை துணுக்குகள் எழுதியவர்) மற்றும் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் ஆகியோருக்கு பல்லின சமூகங்களுக்கு சேவையாற்றியோர் ('For Services rendered to Cultural Communities of Canada') என்ற வகைக்குள் அடங்கும் சிறப்பு விருதுகள் வழங்கப் பெற்றன." கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்" அமைப்பின் சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவரான கனடா உதயன் பிரதம ஆசிரியர் திரு ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் இவ்விருதுக்கு மேற்குறிப்பிட்ட தமிழ் அன்பர்களைப் பரிந்துரை செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.






# யார் கடவுள்?

**சிவ வினோபன்**

இந்த உலகின் மிகப் பெரிய கேள்வி, அதேநேரத்தில் பதிலே இல்லாமல் நம்பப்படும் மிகப் பெரிய விடயம் தான் கடவுள். ஆகவே இப்போது சொல்லுங்கள் யார் கடவுள்? I am talking about the Real God!

நீங்கள் எப்போதுதாவது உங்கள் அப்பா அம்மா சொன்னதை அப்படியே நம்பாமல் ஆசிரியர் சொன்னதை அப்படியே நம்பாமல் சொந்தமாக சிந்தித்துப் பார்த்ததுண்டா? யார் கடவுள் என்று? ஒவ்வொரு மதமும் ஒவ்வொன்று சொல்லுகின்றது! ஆனால் மீண்டும் அதே கேள்வி கேட்கின்றேன்! நீங்கள் எப்போதாவது சொந்தமாக சிந்தித்துப் பார்த்ததுண்டா யார் கடவுள் என்று? நீங்கள் ஏன் இந்த உலகில் வாழ்க்கின்றீர்கள் என்பதன் அர்த்தம் புரிந்தால் உண்மையான கடவுளைப் புரிந்து கொள்ள முடியும். நீங்கள் எங்கு வாழ்கின்றீர்கள் ஏன் வாழ்கின்றீர்கள்? சற்று சிந்துத்துப் பாருங்கள். பொதுவாக இந்த உலகில் உள்ள உயிர் உள்ள பொருட்கள் அனைத்தினதும் ஒரே ஒரு கடமை தங்கள் நேரத்தைக் கடத்துவது.
அனைத்து மதமும் சொல்கின்றது, கடவுள் உருவம் அற்றவர். கடவுள் எங்கும் உள்ளார். கடவுள் எப்போதும் உள்ளார். நேரத்திற்கு உருவம் இல்லை, எங்கும் உண்டு எப்போதும் உண்டு. நேரம் கடவுளா? புரியவில்லையே என்ன சொல்லுறீங்க சிவவினோபன் என்று கேட்டால். நான் சொல்வதையும் நீங்கள் நம்பவேண்டாம். நீங்கள் சற்று சொந்தமாகச் சிந்தியுங்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இன்று வரை ஒரு உலகைப் பார்த்துள்ளீர்கள். இன்னொரு உலகைப் படித்துத் தெரிந்துளீர்கள். இந்த இரண்டு உலகை மட்டும் தான் உங்களுக்குத் தெரியும். இந்த இரண்டு உலகும் எத்தனை காலம் இருக்கும் என்று சிந்தியுங்கள். நீங்க கண்களை மூடிய பின்பும் இதே உலகம் தான் இருக்கின்றதா? அல்லது ஒரு மனிதன் பொதுவாகச் சிந்திக்கும் ஒரு சிந்தனை என் மரணத்தின் பின் எனக்கு என்ன நடக்கும் என்று சிந்திப்பான் ஆனால் எப்போதாவது சிந்தித்துள்ளீர்களா? என் மரணத்தின் பின் என் உலகிற்கு என்ன நடக்கும் என்று சிந்தித்ததுண்டா? நான் இறந்த பின்பும் இந்த உலகம் இருக்குமா? எப்படி இருக்கும் என்று சிந்தித்ததுண்டா?
இந்த உலகில் பல லட்சம் கோடிக்கணக்கில் உயிர்கள் உள்ளன அதில் நீங்களும் ஒருவர். இதை எப்படி உவமிக்கலாம் என்றால், ஒரு தாயின் கருவில் சென்று சேரும் விந்துக்களில் பத்துக் கோடிக்கு அதிகமான உயிரணுக்கள் உள்ளதாம், ஆனால் அதில் இருந்து ஒரே ஒரு நீங்கள் தான் வெளியில் வருகின்றீர்கள். அதே போல இந்த உலகில் கோடிக்கணக்கில் உயிர்கள் இருந்தாலும் ஒரே ஒரு நீங்கள் தான் உள்ளீர்கள். நீங்கள் இருவர் இல்லை, நீங்கள் ஒருவர் மட்டுமே, உங்கள் வாழ்க்கையை நீங்கள் மட்டுமே வாழ முடியும். அப்படி வாழும் வாழ்க்கையும் வெறும் நேரத்தைக் கடத்துவதாக மட்டும் என்றால் என்ன இது வாழ்க்கை என்று ஒரு எண்ணம் தோன்றிவிடாதா?

ஆனால் அது தான் உண்மை. நீங்கள் இந்த உலகில் பிறந்தது நேரத்தைக் கடத்துவதற்கு. நேரம் தான் அந்த கடவுள். இப்போது அட்டமா சித்தி, மரணம் இல்லாத வாழக்கை, 64 கலை என்று அனைத்தையும் பற்றி சிந்தித்துப் பாருங்கள் அனைத்தும் நேரத்தோடு தொடர்புடையது. ஒரே நேரத்தில் பல இடங்களில் இருத்தல், ஒரே நேரத்தில் பல வடிவம் பெறுதல், ஒரே நேரத்தில் பெரிதாகுதல், சிறிதாகுதல், காலத்தைக் கடத்தல்.... என்று அனைத்தும் நேரத்தோடு தொடர்புடையதே. கணிதம் விஞ்ஞானம் மெஞ்ஞானம் தத்துவம் எல்லாமே நேரம் தான். அப்படி என்றால் நேரம் தான் கடவுளா என்றால் இல்லை. கடவுள் என்பது வாழ்க்கை. நேரத்தை சாதாரணமாகக் கடத்துவது உங்களோடு இந்த மாயையில் சிக்கி இருக்கும் உங்கள் அருகில் இருப்பவர்கள் செய்யும் சாதாரன செயல். அது அவர்களின் வாழ்க்கை. ஆனால் நீங்கள் சாதாரண நபர் இல்லை. நீங்கள் ஒரு புதுமை. Yes! you are Special. ஆம் உங்கள் வாழ்க்கை தான் கடவுள். உங்கள் நேரத்தை உங்களிற்குள் கடத்தல். அமைதியாக இருந்து சிந்தியுங்கள். இதுவரை நீங்கள் பார்த்த பூமி, அது எப்படி இயங்குகின்றது? என் வாழ்க்கையில் இதுவரை என்ன நடந்தது என்று ஒவ்வொன்றாக உங்களிற்குள் கடவுங்கள். கட + உள் = கடவுள்.
கற்றதில் ஒன்று, பெற்றதில் ஒன்று, மற்றது என்றும் மாயையுள் உண்டு, தேடிடு கண்டு.






# தை பிறந்தால் வழி பிறக்கும்.
# சிந்“தை“ பிறந்தால் வழி பிறக்கும்.




சேவியர்



## தங்கத்தில் அமைந்த அம்பு வெற்றியைத் தருவதில்லை!

இருளின் கானகப் பாதையில் பயணிப்பவர்களின் கனவெல்லாம் தரைக்கு எப்போது வெளிச்ச விழுதுகள் இறங்கி வரும் என்பது தான். அந்த வெளிச்சப் புள்ளிகளின் ஒற்றையடிப் பாதை போதுமானதாய் இருக்கிறது கானகப் பயணத்தைக் கடக்க. கும்மிருட்டின் கோரப் பிடியில் கிடப்பவர்களுக்கு ஒரு மின்மினியின் வெளிச்சப் பொட்டே, மாபெரும் விடுதலையின் கொடியாகத் தெரியும்.

இந்தத் தை, உங்கள் மீதிருக்கும் நிந்தை தனை அழித்து, விந்தை தனைப் பொழிந்து வாழ்வில் வசந்தத்தைத் தர வாழ்த்துகிறேன்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதை நாம் பல வேளைகளில் தவறாகப் புரிந்து கொள்கிறோம். சாவி இருந்தால் கதவு திறக்கும் என்பதைப் போல. உண்மையில் சாவி இருந்தால் கதவு திறப்பதில்லை, சாவியைப் பயன்படுத்த வேண்டிய விதத்தில் பயன்படுத்தினால் தான் கதவு திறக்கும் என்பதே உண்மை. அதே போல தான் பாதைகளும்.

நமக்கான பாதைகளை எந்த வானதூதரும் கோரைப் பாயைப் போல சுருட்டி எடுத்து வந்து, நம் முன்னால் உதறி விரிப்பதில்லை. நமக்கான பாதைகளை யாரோ தயாராக்கி வைத்து விட்டு நம்மை ஆரத்தி எடுத்து வரவேற்பதும் இல்லை. எப்படி நமக்கான சுவாசம் நம்மிடம் இருக்கிறதோ, அப்படியே நமக்கான பாதைகளும் நம்மிடமிருந்தே புறப்படுகின்றன.

வரப்புகளில் தலை சாய்த்திருக்கும் கதிர்களின் அறுவடை தை மாதத்துக்கு முன்பே முடிந்து விடும். தை வரும்போது வரப்புகளில் நடக்க வழி பிறக்கும் ! தை மாதத்தில் அறுவடையின் நிகழ்ச்சிகள் முடிந்து விட்டிருக்கும். மக்களின் தேவைக்கான தானியங்கள் களஞ்சியங்களில் இருக்கும். உழைப் பாளர்களுக்கான கூலி அவரவர் கைகளில் வந்து சேரும். தை பிறக்கும்போது அவர்களது வாழ்வுக்கான வழி பிறக்கும். இவையெல்லாம் விவசாயத்தின் விரல்பிடித்து நடந்த நம் மூதாதையர்களின் வாழ்வியல் விளக்கங்கள்.


ஆனால், விதையில்லாமல் எந்தத் தையும் முளைப்பதில்லை. விதைக்கும் காலத்தில் தூங்கி விட்டு அறுவடைக் காலத்தில் அரிவாளோடு அலைவது எவ்வளவு முட்டாள் தனமோ, அப்படித்தான் வாழ்வில் வழி பிறக்க எதுவும் செய்யாமல், மாதம் பிறந்ததும் நம் சோகம் இறந்து விடும் என நம்புவதும்.

கல்லும் முள்ளுமான கரடு முரடு பிரதேசங்களில் எப்படி ஒற்றையடிப் பாதைகள் தோன்றின ? அவையெல்லாம் ஏதோ பாதங்கள் அந்த முட்களின் முனைகளைத் தாண்டியும், கற்களின் கூர்களைத் தாண்டியும் நடந்து திரிந்த வலிகளின் வழிகள். அந்த ஒற்றையடிப் பாதைகளில் குருதியின் அம்சங்கள் இன்னும் ஒளிந்திருக்கலாம். அந்தப் பாதைகளில் அலறலில் அழுகுரல்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கலாம்.

அப்படித் தான் நமது வாழ்க்கையும். வாழவேண்டும், முன்னேற வேண்டும் எனும் சிந்தை முதலில் மனதில் முளைக்க வேண்டும். அந்த சிந்தனையை நீரூற்றி வளர்க்க வேண்டும். அதைக் கறை படாமல் காக்க வேண்டும். அதற்குத் தேவையான ஊட்டச்சத்துகளை வழங்க வேண்டும். அதன் பின்னர் அதனிடம் கனிகளை எதிர்பார்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் ஒரு காலம் இருக்கிறது, அந்த காலத்தின் கண்சிமிட்டலுக்கான தயாரிப்பு நம்மிடம் இருக்கிறது.

நல்ல விதைகளை, நல்ல நிலத்தில், நல்ல பருவத்தில் விதைப்பது விளைச்சலின் தரத்தை நிர்ணயிக்கும். முள்ளிடையே விதைத்தால் அவை முட்களினால் கிழிக்கப்படும். பாறைகளில் விதைத்தால் அவை வேர்விடாமல் கரிந்து விடும். வழியோரம் விதைத்தால் அவை பறவைகளால் களவாடப்படும். நல்ல நிலத்தில் விதைத்தால் மட்டுமே அவை மிகுந்த விளைச்சலைக் கொடுக்கும்.

நமது வாழ்வில் நமது அன்பை எங்கெல்லாம் விதைக்கிறோம். அந்த அன்பு காய்ந்து விடாமல் அடிக்கடி கவனித்துக் கொள்கிறோமா ? அந்த அன்பைக் கெடுக்க நினைக்கின்ற களைகளாம் சிந்தனைகளைக் களைகின்றோமா ? அந்த அன்புக்குத் தேவையான ஊக்க உரங்களை அளிக்கின்றோமா ? அப்படிச் செய்தால் அந்த அன்பு மிகப்பெரிய மகிழ்ச்சியைக் கொடுக்கும். உரசாத தீக்குச்சி எரிவதில்லை, உணராத மனம் விரிவதில்லை. அன்பை விதைக்கத் துவங்குவோம் ஆனந்தத்தை அறுவடை செய்வோம்.



சோம்பலில் சுற்றப்பட்டுக் கிடப்பவர்களின் சன்னலின் சூரியன் உதிப்பதில்லை. அவர்களுடைய படுக்கைகளின் வெற்றிகளின் கோப்பைகள் துயில்வதும் இல்லை. அவர்கள் கனவுகளில் போர் புரிந்து, நிஜங்களில் தோற்றுப் போகிறார்கள். முதல் சுவடை எடுத்து வைக்காமல் எந்தப் பயணமும் துவங்குவதில்லை. தை பிறக்க வேண்டுமெனில் நாம் நமது உற்சாகத்தைப் பிறப்பிக்க வேண்டும்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்

TKS BEST FOODS

அனைவருக்கும் இனிய
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

தாயகத்திலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்து தரமான
முறையிலே துண்டு துண்டுகளாக்கி
சுத்தம் செய்து தருகின்றோம்..!



0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137, Dortmund Germany

# தை பிறந்தால் வழி பிறக்கும். சிந்“தை“ பிறந்தால் வழி பிறக்கும்.



களத்தில் நுளையாமல் வெற்றிகளைப் பெறுவதும், களத்து மேட்டில் நுழையாமல் விளைச்சலைப் பெறுவதும் பகல் கனவின் பரிதாபங்கள். நமது வாழ்க்கை அட்சய பாத்திரங்களின் அணிவகுப்பல்ல, உழைப்பு வியர்வையின் ஈரக் கோடுகள். தேடல் இல்லாமல் எதையும் கண்டடைய முடியாது. முயற்சிகளின் முனை ஒடிந்து போனால், வாழ்வின் ஊசிகளால் வெற்றி ஆடைகளைத் தைக்கமுடியாது.

உற்சாகமான மனம், நல்ல சிந்தனைகளின் இருப்பிடம். உடலை வலுவாக வைத்திருக்கும் வாய்ப்பை சுறுசுறுப்பான சிந்தனை தான் தருகிறது. உடல் வலுவாக, உற்சாகமாக இருந்தால் தான் மனமும் உற்சாகமாக இருக்கும். ”திறந்திடு சீசே” என்றவுடன் திறக்கின்ற புதையல் குகைகள் இங்கே இல்லை. திறக்க வேண்டுமெனில் அதற்கான உழைப்பைச் செலுத்த வேண்டும். கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டுகின்ற தெய்வங்களுக்கு இப்போது தட்டுப்பாடு. நிலத்தைப் பிய்த்து வளத்தைப் பெற்றுக் கொள்ள ஊக்குவிக்கின்ற கடவுள்களே காணப்படுகின்றனர்.

ராஜராஜன் காலத்தில் தை மாதத்தில் தான தர்மங்கள் கொடுப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தார். ஏழைகளுக்கு உதவுவதற்காக, வறிவர்களின் வயிறுகளை நிறைப்பதற்காக அவர் தை மாதத்தில் களஞ்சியங்களைத் திறப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தார். அந்தத் தை மாதம் எத்தனையோ மக்களுடைய வாழ்வில் தீபத்தை ஏற்றி வைத்தது. சோகத்தை மாற்றி வைத்தது. நமது மனதையும் அத்தகைய பிறர்நலப் பணிகளுக்காய் தயாராக்கி வைப்போம்.
இந்தத் தை மாதம் நமக்கு நல்ல வரத்தைத் தரட்டும். நல்ல வளத்தைத் தரட்டும். அதற்கான தயாரிப்புகளை நாம் செய்வோம். பறவையின் எச்சமே ஒரு மரமாய் உருமாறும் போது, மனிதனின் செயல்கள் எப்படிப் பட்ட வசீகரங்களை உருவாக்க முடியும் ? அவை கற்பனைகளுக்கு அப்பாற்பட்டவை. அதற்காக திட்டமிடுவோம், சவால்களை சந்திப்போம், புதுமைகளை உருவாக்குவோம், செயல்படுவோம்.

தங்கத்திலே செய்த அம்பாய் இருந்தால் கூட எய்தால் தான் இலக்கை அடையும். நவீனத்தின் உச்சத்தில் இருக்கும் துப்பாக்கியானால் கூட விசையை இழுத்தால் தான் இலக்கைச் சுட முடியும். நாம் எவ்வளவு திறமை சாலிகள் என்பதல்ல, நாம் எவ்வளவு செயல்படுகிறோம் என்பதும் முக்கியம். நம் மீது நாம் எவ்வளவு நம்பிக்கை வைக்கிறோம் என்பதும் முக்கியம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது போல, தை துறந்தாலும் நமது வாழ்வில் வழி பிறக்கும். பல தைகள் நமது வாழ்க்கையின் கொண்டாட்டத்தைப் புதைத்துக் கொண்டிருக்கின்றன. அத்தகைய தைகளை நாம் பிடுங்கி எறிய வேண்டும். நமது அமைதியைக் கெடுக்கும் கோபத்தை ! அன்பை விலக்கும் விரோதத்தை ! உறவை உடைக்கும் வன்மத்தை ! தாழ்மை கெடுக்கும் கர்வத்தை ! சுயநலம் கொடுக்கும் ஆணவத்தை ! இப்படி பல்வேறு ”தை”களை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். இந்தத் தைகள் இருந்தால் மனிதத்தை விளைவிக்க முடியாமல் போய்விடும்.

எனவே அன்பு நெஞ்சங்களே, இந்தத் தை, உங்கள் இதயத்தில் மனிதத்தை, ஈரத்தை, நேசத்தை, இன்பத்தை நிறைக்கட்டும் என வாழ்த்துகிறேன்.

**சேவியர்**

## கால் நூற்றாண்டு வெற்றிச் சுவடுகள்




யுரேக்கா...

என ஆர்கிமிடிஸ் கத்தியதைப் போல கத்தத் தோன்றியது, வெற்றிமணி இதழின் கால் நூற்றாண்டு மலரைக் கைகளில் ஏந்திப் புரட்டிப் பார்த்தபோது. எடுத்த உடனே மனதில் பசை போட்டு ஒட்டிக்கொண்ட விஷயம், அதன் வடிவமைப்பும், வண்ண வண்ண பக்கங்களும். வெற்றிமணியை வண்ணப் புத்தகமாகத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கும் ஆசிரியர், மைல் கல் மலரையும் வண்ணத்தில் தந்திருப்பதில் வியப்பில்லை.

ஒரு ஆழியை இழுத்து வந்து குடுவைக்குள் அடைத்தது போல, கால் நூற்றாண்டு விஷயங்களை 116 பக்கங்களுக்குள் அடக்கியிருக்கிறார் அருமைத் தந்தை டாக்டர் எம்.கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள். பல நூறு இதழ்களிலுள்ள விஷயங்களை வடித்தெடுத்து கொடுப்பது, கடற்கரை மணலில் குன்றிமணி தேடுவது போல கடினமானது. ஆனால் அதை கன கட்சிதமாய்ச் செய்திருப்பதில் அவரது பத்திரிகை அனுபவமும், இலக்கியத் தேடலும் பளிச் என விளங்குகிறது.

வரலாற்றுப் பதிவுகள், கலைப்பதிவுகள், இலக்கியப் பதிவுகள், அறிவியல் பதிவுகள், அனுபவப் பதிவுகள், அரசியல் பதிவுகள், காட்சிப் பதிவுகள், கலைப்பதிவுகள் என தேடித் தேடி அவர் செய்திருக்கும் தொகுப்பு வேலையை நினைத்தால் மலைப்பாய் இருக்கிறது. இந்த அனுமரால் மட்டும் எப்படி இந்த இலக்கியச் சஞ்சீவி மலையை ஒரு பத்திரிகைக்குள் திணிக்க முடிந்தது என வியக்காமல் இருக்க முடியவில்லை.

சிரிப்பும், சிலிர்ப்பும், வீரமும், ஈரமும், அழுகையும், புன்னகையும் என ஒவ்வொரு பக்கமும் உணர்வுகளின் பந்தியை மொழியினால் பரிமாறுகிறது. முன் அட்டை முதல் பின் அட்டை வரை திகட்டத் திகட்ட தமிழ்ப்பந்தி வைத்திருக்கும் ஆசிரியரை பணிவுடன் வணங்குகிறேன்.

அரை நூற்றாண்டு இதழையும், நூற்றாண்டு இதழையும் அவரே தொகுக்க வேண்டும். அதுவரை நலமும் வளமும் அவரை விட்டு விலகாதிருக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறேன்.

அன்புடன்
சேவியர்







அன்னையை வணங்குவோம்! பெண்மையைப் போற்றுவோம்!!

# மகளிர் தினம் பங்குனி 08

08.03.2020 Sunday




# புதுமைப் பெண்கள் 2020

**Women's Day**
**08.March.2020**
**Sunday 14.30 - 20.30**

**சொல்லுங்கள்! வெல்லுங்கள்!!**
**முன்னணியும் பின்னணியும் கண்மணிகள்**
**ஆடுவோம் பாடுவோம் கொண்டாடுவோம்**

PALAZIO | KASINOSTR. 25 42103 WUPPERTAL

பிரவேசம்:
இலவசம்

**பெண்மையைப் போற்றிடும் பெருவிழாவிற்கு அனுசரனை தர முந்துங்கள்**

02ம் பக்கத் தொடர்ச்சி

# மகாத்மா காந்தியின் கடைசி நாள்....

இந்த மாதம் (ஜனவரி) 20ம் தேதி, காந்தியைக் கொல்ல முயற்சி நடந்ததால் அதிர்ச்சி அடைந்த நேரு மற்றும் படேல், 30 பேர் கொண்ட போலீஸ் படையை காந்தியின் காவலுக்கு அனுப்ப உத்தரவிடுகின்றனர். ஆனால், இறைவணக்கம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களை போலீசார் சோதனையிடக்கூடாது என்று நிபந்தனை விதிக்கிறார். மாலை 5 மணி. பிர்லா மந்திர் உள்ளே கோட்சே கும்பல் நுழைந்துவிட்டது. சீருடை மற்றும் சீருடை அணியாத போலீசார் ஏராளமானோர் அங்கே இருக்கின்றனர். எனினும், யாரும் யாரையும் சோதனையிடவில்லை. திருப்தி அடைந்த அந்த கும்பல், இறைவணக்கத்திற்காக கூடியிருப்பவர்களுடன் கலந்துவிட்டது. மாலை 5 மணிதான் இறைவணக்கத்திற்கான நேரம். வழக்கமாக காலம் தவறாத காந்தி. அன்று 5.10 மணியாகியும், சர்தார் படேலுடன்தான் பேசிக் கொண்டிருந்தார். இறைவணக்கத்திற்கு நேரமாகிவிட்டது என்பதை உணர்ந்த மனு, கடிகாரத்தை காண்பிக்கிறார். புரிந்து கொண்ட காந்திஜி, 'நான் உங்களிடமிருந்து இப்போது விடைபெறுகிறேன்' என்று கூறியபடி, கதகதப்பிற்காக ஷால் ஒன்றை போர்த்திக் கொண்டு வெளியே வருகிறார். காந்தியின் இருபுறமும் மனு மற்றும் அபா. அவர்கள் தோளின் மீது தன் இரு கைகளையும் போட்டவாறு நடந்து வருகிறார். அவர்களுக்குப் பின்னால், செயலாளர் பிரிஜ் கிருஷ்ணா, கத்தியவாத்திலிருந்து வந்திருந்த இருவர், பின் சற்று தொலைவில் காந்தியின் தனிச்செயலாளர் கல்யாண் மற்றும் பிர்லா குடும்பத்தினர் மற்றும் சிலர் வந்தனர். சமீபத்தில் அவரின் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட போலீஸ்காரர் குருபச்சன் சிங், காந்திக்கு சற்று அப்புறமாக நடந்து வருகிறார்.



பிரார்த்தனை நடக்கும் பகுதிக்கு காந்தி நடந்து சென்று கொண்டிருக்கிறார். 200 அடி தூரம்தான் இருக்கிறது. அவர் இனிமேல் நடக்க இருப்பது இந்த தூரம்தான். இத்தனை வயதில் எத்தனை தூரம் நடந்திருப்பார். எவ்வளவு இடங்களைச் சுற்றியிருப்பார். இப்போது 200 அடி இறுதி தூரத்தில் நடந்து கொண்டிருக்கிறார்.
போர்பந்தரில் துவங்கிய அவரின் பயணம் அப்படியே, பாம்பே, டர்பன், பீட்டர்மரிட்ஸ்பெர்க், ஜோகன்னஸ்பர்க், பீனிக்ஸ் செட்டில்மென்ட், டால்ஸ்டாய் பார்ம், சாம்பரான், சபர்மதி, எரவாடா, தண்டி, கின்ஸ்லே ஹால், செயின்ட் தாமஸ் அரண்மனை, சேவாகிராமம், ஆகாகான் அரண்மனை, நோகாலி, கல்கத்தா, டில்லி, இப்போது டில்லியில் உள்ள பிர்லா ஹவுசில் அவரின் பயணம் நிறைவடையப் போகிறது.

பேத்திகளுடன் சிரித்துப் பேசியபடி நடந்து வந்து கொண்டிருந்த காந்திஜி, பிரார்த்தனை கூடம் நெருங்கிவிட்டது. பேத்திகளைப் பார்த்து, வாயை மூடுங்கள் என்று சிரித்தபடி சொல்லியவாறு, பிரார்த்தனை மையத்திற்குள் நுழைகிறார்.. அந்தத் தொலைவில் அவர் வரவை எதிர்நோக்கி ஏராளமானோர் அவர் பாதையைப் பார்த்திருக்க, அவர்களை நோக்கி கைகளை கூப்பியபடி நடந்து செல்கிறார் காந்தி.

### நாதுராம் விநாயக் கோட்சே. 37 வயது இந்து தீவிரவாதி.

திடீரென அவர் எதிரில் தோன்றுகிறான் கோட்சே. காந்தியை தூரத்திலிருந்து சுடப் போவதாகத்தான் திட்டம். அதை கடைசி நேரத்தில் மாற்றிக் கொண்ட கோட்சே, காந்திக்கு எதிராக வருகிறான். அவனுக்கும் காந்திக்கும் இடையே ஒன்றிரண்டு அடி தூரம்தான் இருந்தது. காந்தியின் காலைத் தொடுவது போல கீழே குனிந்து, நமஸ்தே காந்திஜி என்கிறான். பதிலுக்கு கைகளைக்கூப்பி நமஸ்தே என்று சொல்கிறார். பேத்தி மனு, கோட்சேவை, தூரச் செல்லுங்கள். ஏற்கனவே காந்திக்கு நேரமாகிவிட்டது என்று கோட்சே தோளைப் பிடித்து தள்ளுகிறாள். குனிந்து எழுந்த கோட்சேயின் கைகளில் இத்தாலி தயாரிப்பான பெரெட்டா பிஸ்டல். என்ன நடக்கிறது என்று யாரும் அறிவதற்கு முன்னதாக, துப்பாக்கியின் விசையை அழுத்தி, மார்பு மற்றும் அடிவயிற்றில் குண்டுகளைப் பாய்ச்சுகிறான். மூன்று குண்டுகளைத் தாங்கிக் கொண்டு, ஹே ராம், ஹே ராம் என்கிறார். ரத்தம் பீறிட்டு அடிக்கிறது. நின்றவாறே ஒன்றிரண்டு வினாடிகளில் இறந்துவிட்டார். உயிரற்ற காந்தி மடாரென கீழே விழுகிறார். ரத்தம் பீறிட்டு பாய்கிறது. இந்த தேசத்தின் தந்தை, இறந்துவிட்டார். அவர் தலையை தங்கள் மடியில் கிடத்தியபடி பேத்திகள் இருவரும் கதறுகின்றனர். கதை முடிந்துவிட்டது. உலகம் முழுவதும் ஏராளமான நண்பர்களைப் பெற்றிருந்த காந்திக்கு, ஒரு எதிரியும் இருந்திருக்கிறான்.

காந்தி சுடப்பட்டார் என்ற தகவல், உடனடியாக காட்டுத்தீ போல பரவுகிறது. எனினும், உலக ஜோதி அணைந்துவிட்டது.






# தைமாதம் முதல் நாம் சரியாக நடக்கவேண்டும் என பலரும் நினைப்போம்.

## நடக்குமா நடக்க என்ன செய்யலாம்?



றஜினா தருமராஜா




புது வருடம் பிறக்கும் பொழுது நாம் அனைவரும் நினைப்பது என்ன? இந்த வருடமாவது நினைத்த விடயங்களை நிறைவேற்ற வேண்டும் என்று. ஆனால் அப்படி எவரும் முழுமையாக நிறைவு செய்வதில்லை.

கூடுதலாக நாங்கள் நினைத்ததை ஆறு மாதங்களுக்குப் பிறகு விட்டுவிடுவோம். களைப்பு வந்துவிடும்.
அதற்கு காரணம் என்ன? சிந்தித்துப் பாருங்கள்.
தொடர்ந்து செய்வது எப்படி?

முதலில் நாங்கள் எடுத்த விடயத்தில் உறுதியாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் எல்லா முயற்சிகளும் சோர்வடைந்து விடும்.

நாங்கள் ஆரம்ப மாதத்தில் மட்டும் அல்ல ஒவ்வொரு நாளுமே மனவுறுதியுடன் நாளைத் தொடங்க வேண்டும். முக்கியமாக எங்களைச் சுற்றி இருப்பவர்களும் எங்களை ஊக்கப் படுத்த வேண்டும்.
அவர்கள் செய்யா விடின் நாங்கள் மீண்டும் கீழே விழுந்து விடுவோம்.

கல்வி, உடற்பயிற்சி, வேலை விடயங்கள் மற்றும் தீய பழக்கங்களில் இருந்து விடைபெறுதல் போன்றவற்றை நிறைவேற்ற முடிவு செய்தால் அம்முடிவை மாற்றவே வேண்டாம்.

நாம் ஒவ்வொருவரும் அடுத்த வருடம் செய்ய நினைப்பதை ஒரு தாளில் எழுதுங்கள். பின்பு ஒவ்வொரு நாளும் நாங்கள் அதற்காக என்ன செய்தோம் என்பதையும் எழுதி வந்தோம் என்றால் நாங்கள் நினைப்பதை சாதிக்கலாம்.

ஆகவே நாமும் எங்களைச் சுற்றி இருப்பவர்களும் நன்றாக வாழ வேண்டும்! புதிய வருடம் நன்றாக அமையட்டும்!

நீங்கள் ஒவ்வொரு வருடமும் கண்ட கனவு நிறைவு பெறவில்லை என்றால் சோர்வடைந்து விடக்கூடாது. விடாமுயற்சி என்பது கட்டாயம் பலன் தரும்.

அன்பு காட்ட தவறியிருந்தால் அன்பு காட்டுங்கள்.
கல்வி கற்கவில்லை என்றால் கற்றுக் கொள்ளுங்கள்.

வேலை செய்யவில்லை என்றால் வேலை செய்து பணம் சேமியுங்கள். மற்றும் செலவும் செய்யுங்கள்.

ஆகவே நான் கூற வருவது என்னவென்றால், நண்பர்களே, நீங்கள் செய்ய நினைப்பதை சாதித்துக் காட்டி சாதனையாளர் ஆகுங்கள்!

## தாயகத்தில் சிவத்தமிழ் விருது பெறும் கல்வி, கலை, எழுத்துலகப் படைப்பாளிகள்.







துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அறக்கொடை விழாவான 7.01.2020 அன்று இரு மகாஜன்கள் ஊட்பட ஐந்து கல்வி,கலை,எழத்தலகப் படைப்பாளிகளான பேராசிரியர். சோ.சந்திரசேகரம், கவிஞர் சோ.பத்மநாதன், மூத்த எழுத்தாளர் திருமதி.கோகிலா மகேந்திரன்,நாயன வித்துவான் திரு.வி.கே.பஞ்சமூர்த்தி, ஜேர்மனியிலிருந்து வெளிவரும் வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் ஆன்மீகச் சஞ்சிகை ஆகியவற்றின் ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் ஆகியோரின் தொடர்ச்சியான சேவையை கவனத்தில் கொண்டு வாழும் போதே கௌரவித்தல் என்ற மரபுக்கமைய "சிவத்தமிழ்" விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர.் இப்பெருமைமிகு கெரவிப்பின முன்னெடுத்திருக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபைக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் தாயகத் தமிழர்கள் சார்பாகவும் புலம்பெயர் தமிழர்கள் சார்பாகவும் விருது பெறும் ஐவருக்கும் பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவிக்கிறோம்.

**தகவல்: ஏலையா க.முருகதாசன்**




## அறம் எனப்படுவது வழியை உருவாக்கி கொடுத்தல்

அறம் எனப்படுவது வழியை உருவாக்கி கொடுத்தல், ஒளியைப் பகிர்தல், மன்னுயிர்க் கேண்மை எனலாம். இதற்காகவே உயரிய சிறந்த விருதினை உயரிய பெண்மணி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை விழாவினரால் 2020 ஆண்டிற்கான "சிவத்தமிழ்" விருது பெறும் வெற்றிமணி, சிவத்தமிழ் பிரதம ஆசிரியர், ஓவியர் கலாநிதி.. திரு மு.க.சு.சிவகுமாரன் அவர்களை உளமார வாழ்த்துகின்றேன்.

**- கரிணி**



# திசையறியா உணர்வுகள்




## தலைமுறைகள் இடையே தொடரும் இடைவெளி எதனால்?



என்னைப் போன்ற ஜேர்மனியில் (பிறந்து) வளரும் இளைஞர்கள் எமது பெற்றோரிடம் எதிர்பார்ப்பது புரிந்துணர்வு. எமது அன்றாட வாழ்க்கையில் நடக்கும் இன்பமான, அல்லது மிகத் துன்பமான கதைகளைச் சொன்னால் அவர்களிடம் இருந்து வரும் பதில் நாம் எதிர்பாராத வண்ணம், புரிந்துணர்வு இல்லாததாகவே உள்ளது. "சரி சரி ஆ" என்ற கருத்துடன், எமது கணக்கை முடித்துவிடுகிறார்கள். இது இளையவர், பெற்றோர் தலைமுறைகளிடையே. புரிந்துணர்வு இல்லாது காணும் இந்த நடவடிக்கையால், பெற்றோர் இளைய சமுதாயம் இடையே உள்ள இடைவெளி மிகக்கூடுகிறது. பெற்றோரிடையே ஏன் இந்த மனப்பாங்கு? இவர்களின் மேல் பழிசுமத்துவது நியாயமா? இளையவன் என் பதிலிற்கான தேடல் இவ்வண்ணம் இக்கேள்விக்கான பதில் உளவியலிலேயே இருக்கும் என்னும் நோக்குடன் என் ஆராய்வு தொடங்கியது. போர், பட்டினி ஆகியவை மக்களின் மனங்களை மிகவும் பாதிக்கக் கூடியவை.

அதிக மக்கள் புகலிடம் கோரி வருவதற்கு காரணம் போரும், பொருளாதாரமும் என்பதற்கு சாட்சிகள் பல. எந்த வாழ்வுநிலையும், நிரந்தரம் அல்லாத ஒரு நாட்டில் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான முக்கியத்துவம் இல்லை.
கண்முன்னே என்னுடன் பேசிக் கொள்பவரை எந்த நொடியும் குண்டுச்சூட்டில் பறிகொடுக்கலாம், வம்சாவழியாகச் சேர்த்த சொத்துகள் கண்மூடித்திறக்க முன் சாம்பல் ஆகிடும். நாம் Bunker களுக்குள் உறையுள் தேட, பிணங்கள் தலை வேறு உடல் வேறாகக் கிடக்கும் ஒரு மனித வாழ்க்கையில் காணக்கூடாத மிகக்கடினமான காட்சிகளை இம்மக்கள் கண்டு வருகின்றனர். இவை உள்ளங்களில் காயமாக நீடித்து மன நிலைகளிற்கு பெரும்பாதிப்பை கொடுப்பது மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது . PTSD எனப்படும் Posttraumatic-Stress-Disorder (அதிர்ச்சிக்குப் பிறகான மன அழுத்தப் பாதிப்பு) அதிக மக்களை சார்கிறது.

என் தாய் தந்தையர் புலம்பெயர்ந்த காலங்களிலே புகலிடம் கோரி வரும் மக்களுக்கு எந்தவித மன நிலை ஆலோசனை வசதிகளும் இருக்கவில்லை. இன்று இங்கு ஒரு வீடு எரியும் போதே அங்கே அவசர மனநிலை வைத்தியர் வந்து, மக்களுக்கு ஆலோசனைகளும் ஆறுதல்களும் வழங்குகிறார். போரில் தனது உறையுள்ளில் இருந்து உற்றார் உறவினர் வரை அனைத்தையும் இழந்த மக்களின் மனநிலைக்கு அத்தகைய மதிப்பு இருக்கவில்லை. உளவியல் தாக்கத்தில் அவதானம் அண்மைய காலத்திலேயே கருத்தில் கொள்ளப்படுகிறது. இன்றுவரை அகதிகளுக்கு மன நிலை அலோசனை அரிதாகவே வழங்கப்படுத்தப்படுகிறது. போர்க்காலத்தில் நடந்த சம்பவங்களை சீரான முறையில் பரிமாறி மனநிலையை ஒருமுகப்படுத்தும் வழி இன்றுவரை இல்லை. உளவியல் மருத்துவம் பெற்றுக்கொள்ள முடியும் என்றாலும் மொழியியல் எல்லைகளும், மன நிலை மருத்துவத்தின் மேல் உள்ள தவறான அபிப்பிராயமும் அதற்கு தடையாக உள்ளது .



ராம் பரமானந்தன்

சமூகவலைகளில் பிரபல ஈழத்தமிழ் முகங்கள் உளவியலிலும் மன நோய்களிலும் உள்ள தவறான அபிப்பிராயங்களை சிறந்த எடுத்துக்க ாட்டுக்கள் மூலம் நீக்குகின்றன. இப்படி உளவியல் வியாதிகளின் மேல் அவதானம் செலுத்திக் கொண்டு இருக்கும் இளைய தமிழ்(இசை)க்கலைஞன் Julian Fernando, வேலன் ஜோவுடன் நேர்காணலில் சொல்கிறார் "எனக்கு ஒரு உடல்ரீதியான காயம் இருந்தால், அதாவது எனக்கு காலுடைந்து இருந்தாலோ, கையுடைந்து இருந்தாலோ அதைக்கண்டு நீங்கள் பரிதாபம், புரிந்துணர்வு கொள்ளலாம்,

ஆனால் எனக்கு மனச்சோர்வு நோய் இருந்தால், நான் உங்களை சிரிக்கும் முகத்துடன் பார்த்தாலும் உங்களுக்கு என் உள்மனதில் நினைப்பது தேரியாது.

என் மனதை கடக்கும் யோசனைகள், இரவிலேயோ, விழித்ததுமோ எனக்குள் இருக்கும் யோசனைகள் நீங்கள் அறியமுடியாது!". வெளிப்படையான தோற்றாம் இல்லாததால் உளவியல் நோய்களுக்கு அவதானம் கிடைப்ப தில்லை என்பதை இவர் எடுத்துக்காட்டுகிறார்.

"இதெல்லாம் ஒரு பிரச்சனையா? எனும் தவறான கேள்வியை எதிர்த்து இளையவர்கள் நிற்கின்றனர்.

போரானது மக்களின் உள்ளங்களை மந்தமாக்குகிறது. தான் கண்ட சிக்கல்களை விட எதுவும் பெரிதில்லை என நினைக்கத்தூண்டும். தமது மனநிலைக்கும் அடுத்தவருடைய மனநிலைக்கும் வேறுபாடு உண்டென எண்ணாமல் உழைப்பதொன்றே இலக்காகிறது.

உள்கட்டமைப்பு இல்லாத நாட்டிலிருந்து வந்து, கடிவாளம் கட்டிய குதிரைகள் போல எமது மக்கள் பொருளாதார நிரந்தரத்தை நோக்கிச் செல்கின்றனர். சவாரிக்கு இடையூறாக வரும் எதுவும் கண்டுகொள்ளப்படுவதில்லை. கடுமையான உழைப்பினால் மட்டுமே, உயர்வை அடையலாம் என்னும் நோக்கம் இருக்க, அவ்வழியே சேதங்கள் வந்தால் அவற்றை சீர் செய்யவேண்டும் என்பதற்கு கவனம் இருப்பது அரிதான காட்சி. இதனால் மன நிலைக்கான அவதானம் மங்குகிறது, சேதமடைந்த மன நிலைகளுடன் தொடர்ந்து "சம்பள அடிமைகளாக" எம்மவர் உலாவுகின்றனர். குடி, ஆக்கிரோசம், பொறுமையின்மை போன்ற வழிகளில் மாசடைந்த உளநிலையை ஏமாற்றிய வண்ணம் உள்ளோம். தாய்நாட்டில் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த ஒருவர் தன் தொழில், உற்றார், உறவினர் தாய் நாட்டை இழந்து ஜேர்மனியில் மலசல கூடங்களை சுத்தம் செய்பவரானால், அவர் மன நிலைக்கு பாதிப்பு இருக்காதா?

பெற்றோர் தலைமுறையிடையே உள்ள மனப்பாங்குகளுக்கு, அவர்கள் வரலாறுகள் காரணமாக இருக்கலாம், என்ற எண்ணத்தை நாம் ஏற்றுக்கொண்டு, அவர்கள் தனிப்பட்ட வரலாறுகளை பகிரவைக்கவேண்டும். இவர்களது Trauma க்களை (அதிர்ச்சிகளை) நாம் இவர்களுடன் பகிர்ந்து, அதை வெளியுலகிடையே கொண்டு செல்ல வேண்டும்.

இளைய தமிழ் அரசியற்துறைவியலாளர் ஒருவர் கூறுவது, "இங்கனம் நாம் எமது பெற்றோர்களை Instagram, Facebook, Tokening" செய்கிறோம். அதாவது சொந்த சமூகவலை வெற்றிகளுக்கு அவர்களை கொஞ்சிக்குலாவி பகிர்ந்துகொள்கிறோம்.
ஆனால் அவர்களுடைய கதைகள், வரலாறுகள் பகிரப்படுவதில்லை. அவர்கள் துன்பத்துக்கு அங்கீகாரம் இல்லை. அவர்களது கதைகளை நாம் எடுத்துசெல்லாவிடின், அவை முடங்கிப் போய்விடும். நிச்சயம் எம்மவர் வரலாற்றுக்கு மேற்கத்தேய நாடுகளில் பிரதிநிதித்துவம் வேண்டும்" பிரதிநிதித்துவம் மூலம் மக்களுக்கு அங்கீகாரம் கிடைத்து, முடிந்தவரையில் அவர்கள் மன நிலைகளை சீர் செய்வதாக இருந்தால், இரு பங்கினர் உணர்வுகளும் ஆரோக்கியமான வழியில் பரிமாறக்கூடும்.




# Thushi -Deko









உங்கள் தெரிவுகள் அனைத்தும்
எங்கள் கையிருப்பில்.....

**Christal mandapa Set round**
**Rada Krishna Stage**
**and Raja Gopuram**

**Tel:02305 - 85945 - 0176 608 108 13** **Thushiyanthan.Thiruselvam**

# ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்தல்



ஒருவர் ஒரு கடையில் ஒரு பொருளை வாங்கி வந்து பாவனை செய்கின்ற போது அப்பொருளின் சிறப்பை நோக்கித் தனக்குத் தேவையானவர்களுக்கு இக்கடையில் இப்பொருள் விற்கின்றது அதற்குச் செல்லும் வழி இதுவே. அங்கே சென்று இப்பொருளை வாங்கிப் பாவித்துப் பாருங்கள். நிச்சயமாக உங்களுக்குப் பிடிக்கும் என்று வழி காட்டிவிடுகின்றார். இங்கு பொருளின் பயன் பெற்றவர் நல்ல நோக்கத்துடன் மற்றையவருக்கும் இப்பலன் கிடைக்கட்டுமே என்னும் நல்லெண்ணத்துடன் வழி காட்டுகின்றார். இதுவும் ஒரு வகையில் ஆற்றுப்படையே. இதுபோலவே எம்மை அறியாமலே நாம் எத்தனை ஆற்றுப்படைகளைச் செய்கின்றோம். என்பதை அறிவதற்கு முதலில் ஆற்றுப்படை என்றால் என்னவென்ற சிறு விளக்கத்தைப் பார்ப்போம்.

ஆற்றுப்படை என்றால், வழிப்படுத்தல் என்ற பொருளில் அமைந்திருக்கின்றது. பதினெண்மேற்கணக்கு நூல் என்று சொல்லப்படுகின்ற சங்ககால எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்னும் நூல்களில் பத்துப்பாட்டில் இவ் ஆற்றுப்படைகள் அமைந்திருக்கின்றன. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை போன்றவை ஆற்றுப்படை நூல்களாகின்றன. வறுமையில் வாடுகின்ற புலவர்கள், இசைக்கருவிகளை வாசித்துப் பாடல்கள் பாடுகின்ற பாணர்கள், கூத்துக்கலையைக் கொண்ட நடனமாடும் கூத்தர்கள் போன்றவர்களை அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்காக மன்னர்களிடம் வள்ளல்களிடம் சென்று வறுமையைத் தீர்க்கும் வண்ணம் செல்லுகின்ற பாதைகளை வழிப்படுத்தி அனுப்பும் வகையில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. மிக அற்புதமான பாடல்கள். அவர்கள் செல்கின்ற பாதையை ஆசிரியர்கள் வர்ணித்திருக்கின்ற அழகே தனி அழகு. அவ்வாறு வர்ணிக்கப்பட்ட வழிகளில் செல்கின்றபோது பரிசில்கள் பெற்று வருபவர்களை வழியிலே காண்பார்கள். பரிசில்கள் பெற்று வருகின்ற புலவர்கள் வள்ளல்கள் பெருமையைப் பாடுவார்கள். இங்கு பாட்டுடைத் தலைவர்களாக மன்னர்கள், வள்ளல்கள் அமைந்திருப்பார்கள்.
திருமுருகாற்றுப்படை என்பது முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு வீடுபேறடைந்த ஒருவன் வீடுபேறடையும் பக்குவப்பட்ட ஒருவனை வழிப்படுத்துவதாக அமைந்திருந்தது. வரலாறு கூட ஒரு ஆற்றுப் படையேயாகும்.

ஒரு பெண்ணின் மனதில் இடம்பிடிக்கத் துடிக்கும் ஒரு இளைஞனுக்கு அவனுடைய நண்பன் தூதுவனாகின்றான். அவள் மனதுக்குள் நுழைவதற்கு தேவையான வழிமுறைகளைக் காட்டிவிடுகின்றான். மனதை ஆற்றுப்படுத்த மனதின் வலிமைகளை வர்ணிக்கின்றான். வெற்றி காணுகின்றான். திருமண பந்தத்தில் அறிமுகம் இல்லாத இருவர் சந்திக்கும் பட்சத்தில் இரு குடும்பத்தினரையும் ஒருவர் ஆற்றுப்படுத்தி விடுகின்றார். அழகான குடும்பம் ஒன்று உருவாகின்றது. எனவே ஆற்றுப்படுத்தல் என்பது இலக்கியத்திற்கும், வாழ்க்கைக்கும் இன்றியமையாததாக அமைகின்றது. அதுவே அசைக்க முடியாத உறவுகளையும், உணர்வுகளையும் மனங்களுக்கிடையே ஏற்படுத்துகின்றது.

வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டலையும் ஏற்படுத்தி விடுகின்றது.


கௌசி

கலைஞர்கள் தமது கலைக்கு ஒத்த ஒருவரை தரமான ஒரு இடத்திற்கு ஒப்படைப்பதும், அந்த இடத்திற்குச் செல்வதற்கு எவ்வாறான தகுதிகள் இருக்க வேண்டும் என்று வழிமுறைகளைக் காட்டிவிடுவதும், அங்கு சென்றால், உனக்கு இவ்வாறான தகுதிகள் கிடைக்கும் என்று காட்டி விடுவதும் ஆற்றுப்படையாகவே அமைகின்றன. கோவூர் கிழார் பாணனிடம் கூறுகின்றார்.

"செல்லை ஆகில் செல்லை ஆகுவை" சென்றாயானால், பெருஞ் செல்வத்தைப் பெற்றவராவாய்
"வண்டுகள் மொய்க்காத தாமரைப்பூவைப் பரிசாகப் பெறுவாய்" தங்கத் தாமரைப் பூ பரிசாகப் பெறுவாய் என்கிறார். வறுமை தீர்க்கும் மருந்து வள்ளல்களிடமே இருக்கின்றது. அதுபோல் எழுத்தாளர்களின் அங்கீகாரம் என்னும் வறுமை தீர்க்கும் மருந்து ஊடகவியலாளர்களிடமே இருக்கின்றது.
இவ்வாறு ஒருவரை ஒரு நல்ல விடயத்தை அறிமுகப்படுத்துவதற்கான வழியைக் காட்டிவிடுவதற்கு நல்ல மனம் என்ற ஒன்று இருந்தால் மட்டுமே போதுமானது. இது பலரின் வாழ்வுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது போல் எமக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி பிறருக்கும் கிடைக்கட்டுமே என்ற உயரிய பண்பே இந்த ஆற்றுப்படையாக அமைகின்றது. இவ்வாறு ஆற்றுப்படுத்தும் போது எம்மையறியாமலே எமக்கு அதற்குரிய பலன் தேடிவருகின்றது. இதனை அதிர்ஸ்டம் என்று சொல்வாரும் உண்டு. அதிர்ஸ்டம் என்பது இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை என்று பலர் கருதுகின்றார்கள். ஆனால், அது உண்மையல்ல. ஏனென்றால், நாம் செய்கின்ற காரியங்களுக்கே எமக்குரிய பலன் வேறு வடிவத்தில் கிடைக்கின்றது என்று கருதுகின்றேன். மனதமது செம்மையானால் மந்திரங்கள் செபிக்கத் தேவையில்லை. கிடைக்கும் பரிசில்கள் உழைப்புக்குக் கிடைக்கும் பரிசாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு எங்கே இருந்து கடவுள் வருகின்றார். இதற்குக் கோயில் குளமெல்லாம் சுற்றத் தேவையில்லை. அர்ப்பணிப்பும், அக்கறையும், அடையாளப்படுத்தலுமே போதுமானது.

எழுத்தாளர்களை ஏளனம் செய்யும் உலகம் என்னும் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். தம்முடைய நேரம், அறிவு போன்றவற்றை எழுத்துக்காக ஒப்படைக்கும் போது அந்த எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படவில்லை என்றால், அவர்கள் மனதால் ஏழையாகி விடுகின்றார்கள். சிறப்பாக எழுதுபவர்களுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றால், அவர்கள் மனம் உடைந்து போகும். எழுத்தாளர்களை கௌரவிப்பவர்கள் எம்மிடையே உள்ளார்கள். ஆனால், அக்கௌரவத்தைப் பெற வேண்டுமானால், எம்முடைய எழுத்தின் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியத்திலும் அவசியம்.

"அரம்போழ் கல்லா மரம்படு தீங்கனி'' என்னும் பதிற்றுப்பத்து ஆற்றுப்படையிலே வாளால் கூட பிளக்க முடியாத வன்மையான மரத்தில் கூட இனிமையான கனி இருக்கின்றது எனப் பாடப்படுகின்றது. இம்மனிதர் எல்லோருடைய எழுத்தையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார் என்னும் எழுத்தாளர்கள் கூட வாளால் பிளக்க முடியாத வலிமை பொருந்திய மரம் போல் இறுக்கமான மனமானாலும் அங்கு இனிய தீங்கனி போன்ற சுவைமிக்க உணர்வையும் காணலாம். அம்மருந்து எழுத்தாளர்களின் எழுத்து வன்மையினால் நிரூபிக்கப்படுகின்றது.

செல்பவர்கள் செல்லும் இடத்தை செயலிழக்க வைக்காமல் தம் பெருமையை வெளிக்கொண்டு வந்துவிட்டு அவ்விடத்தின் பெருமையை சொல்லாமல் இருப்பது நன்றி மறந்த செயலாகவே படுகின்றது. அதனாலேயே புலவர்கள் அவ்வள்ளல்கள் பெயரை வாயாரப் புகழ்ந்து பாடுகின்றார்கள். தம்மைப்போல் பலருக்கும் வழியைக் காட்டிவிடுகின்றார்கள். ஔவையாரும்

"இனியது கேட்கின் தனிநெடுவேலோய் இனிது இனிது அறிவினர் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளாரைக் கனவிலும் நனவிலும் காண்பதுதானே"
என்கிறார்.




# ரோமாபுரியும் தமிழ் கூறும் நல்லுலகும்




மேற்குலகத்தின் வரலாறு கண்டிப்பாக கிரேக்கமும் ரோமாபுரியும் ஆரம்பித்துவைத்தது தான். குறிப்பாக ரோமாபுரி அன்றும் இன்றும் என்றும் நிலைத்திருக்கும் "நிரந்தர நகரம்" என வருணிக்கப்பெறுகிறது. ரோமா ஏழுமலைகள் மீது கட்டியெழுப்பப்பட்ட நகரம். ஆற்றில் வீசப்பட்ட இரட்டை குழந்தைகளான ரோமுலசும் ரீமசும் பெண் ஓநாய் பால் கொடுத்து வளர்த்த அவர்கள் உருவாக்கிய நகர் ஆதலின் இந்நகர் அவர் பெயராலேயே ரோமா என்று விளிக்கப்படுகிறது.

உலகின் அதிசயங்களில் ஒன்றான கொலோசியம் இந்நகரின் மத்தியில் தான் அமைந்துள்ளது.
அக்காலத்தில் இந்த அரங்கம், 50,000 முதல் 80,000 மக்கள்வரை இருந்து பார்க்கக்கூடிய அளவு இடவசதியைக் கொண்டிருந்ததாகக் கணக்கிட்டுள்ளார் கள். எனினும் இதில் சராசரியாக சுமார் 65,000 பார்வையாளர்களைக் கொண்டுருக்கலாம் கொலோசியமானது தொழில்முறைப் போர்வீரர்கள், தங்களுக்குள்ளும், விலங்குகளுடனும், பயங்கரமான குற்றவாளிகளுடனும், சண்டையிடுவதற்காகக் கட்டப்பட்ட ஒரு அரங்கம் ஆகும்.

அதுமட்டுமின்றி உலக கத்தோலிக்கர்களின் தலைமை இடமான வத்திக்கான் ரோமா நகருக்குள்ளேயே அமைந்துள்ளது. வத்திக்கான் ஒரு தனி நாடு. நகருக்குள் ஓர் நாடென விளங்குகிறது வத்திக்கான்.

புகழ்பெற்ற கட்டிடங்களும் பெரிய சாம்ராஜ்யங்களும் நிலைத்த இடம் ரோமாபுரி. எங்கோ மேற்கில் இருக்கும் ரோமாபுரிக்கும் கிழக்கில் இருக்கும் தமிழகத்துக்கும் பண்டே வணிகத்தொடர்பு இருந்து வந்துள்ளது.

மதுரை:

கிரேக்க உரோமானியர் ஒரு காலத்தில் மதுரை நகரில் பாண்டியன் அரண்மனையில் காவலுக்கு இருந்தனர், பாண்டிய தூதர்கள் உரோமா புரியிலும், உரோமாபுரி தூதர்கள் மதுரையிலும் இருந்தனர்.

யவனர்கள் பாண்டிய மன்னனின் அரண்மனையில் காவல் மிக்க கோட்டை வாசலைக் கொலைவாள் ஏந்திக் காவல் காத்து நின்றதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்

(சிலம்பு, ஊர்காண் காதை: 65-66)



தனசேகர் .பிரபாகரன்

முசிறி:

மிளகு - ஒரு காலத்தே மேற்கத்திய நாட்டவரின் விருப்பப் பொருளாக இருந்தது, உரோம சாம்ராஜ்யம் எகிப்து வரை நீண்டிருந்த போது மலையாளக் கரையில் யவனர்கள் காற்றின் காலமறிந்து வந்து வணிகம் செய்தனர் !

யவனர் தங்கத்தை கொடுத்து மிளகு வாங்கிச்சென்ற செய்தி சங்க இலக்கியம் அகநானூற்றில் காணக்கிடைக்கிறது !

கள்ளி அம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமான் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
(அகநானூறு, 149: எருக்காட்டுத் தாயங்கண்ணனார்)

அரிக்கமேடு:

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையோரம் பண்டைக்காலத்தில் பல வணிகத்தளங்கள் இருந்தன. அவற்றுள் மாமல்லபுரம், எயில்பட்டினம் (மரக்காணம்), அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் அரிக்கமேட்டில் அகழாய்வு செய்த போது ரோமானியர்களோடு தொடர்புடைய பல பொருட்கள் கிடைத்தன.

பண்டைக்காலத்தில் மணிகளை உருக்கி, காய்ச்சி, துளையிட்டு, தூய்மை செய்து மணிகளை உருவாக்கியுள்ளனர். இங்கு நீலமணி, பச்சைமணி, ஊதாமணி, கருப்பு மணி மிகுதியாகக் கிடைத்தன.
கூர்முனை சாடிகளில் பழச்சாறு தயாரித்து மண்ணில் புதைத்து உண்டுள்ளனர். பழங்காலத்தில் அயல்நாட்டினரை (ரோமானியர்) யவனர் என்றழைத்தனர். இவர்கள் மது அருந்தும் இயல்பு உடையவர்கள். இந்த யவனர் கள் மிகுதியாக இப்பகுதியில் தங்கியிருந்தமைக்குக் கூர்முனைச் சாடிகள் சான்றுகளாக உள்ளன.

உரோமானிய விளக்கு, மரச்சாமான்கள், வடகயிறு, மரச்சுத்தி முதலான மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் அரிக்கமேட்டு அகழாய்வில் கிடைத்துள்ளன.

ரோமப் பேரரசன் அகஸ்டஸ் தலை பொறித்த காசு அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது. அவன் வாழ்ந்த காலம் கி,மு. இருபத்து மூன்று முதல் கி.பி. பதினான்கு வரை. அக்காலத்தில் அரிக்கமேடு சிறந்த வாணிபத்தலமாக விளங்கியது. அரிக்கமேட்டில் கிடைத்த மணிகள், மட்பாண்ட ஓடுகள் ஆகியவற்றைக் கொண்டு அவ்விடம் 2000 ஆண்டுகாலப் பழைமையுடையது எனக் கருதுகின்றனர். அரிக்கமேட்டில் கிரேக்க ரோமானியர்கள் வந்து தங்கி ஏற்றுமதி, இறக்குமதி செய்தனர். துணி நெய்தல், மட்பாண்டம் செய்தல், மணிவகைகள் செய்தல், சங்கு வளையல் செய்தல், உருக்கு மணி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

இது போல கரூர், கொங்கு நாட்டுப்பகுதிகள் வணிகத்தொடர்பில் இருந்து வந்துள்ளன. தமிழக இலங்கை ஊர்ப் பெயர்கள் ரோம நூட்களிலும் குறிப்புகளிலும் காணக்கிடைக்கின்றன.

“எல்லா சாலைகளும் ரோமை நோக்கியே“, “இறப்பதற்கு முன் ரோமை பார்க்க வேண்டும்“ என்னும் வாக்கியங்கள் ரோமாவின் சிறப்பை இன்றைக்கும் பறைசாற்றும் வரிகள். ரோமாபுரி கண்டிப்பாக ஒரு முறையேனும் பார்க்க வேண்டிய இடம் தான்.



# ரோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா 09-11-2019



நெதர்லாந்து, ரோர்மொண்டில் இயங்கும் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்தும் ரோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா 09-11-2019 இல் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் ரோர்மொண்ட் நகராட்சி மன்ற உபதலைவர் திரு. ட்ரே பீட்டர்ஸ் (Dre Peters) அவர்கள்

பிரதம விருந்தினராகவும், ரோர்மொண்ட் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தக் குருக்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.இவ்வருடம் நடைபெற்ற அனைத்துலக தமிழ்ப் பொதுத் தேர்வில் சித்தி அடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், அதி திறன், மிகு திறனில் சித்தி அடைந்தவர்களுக்குப் பரிசுக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன. மாணவர்களின் பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.





தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் அனைத்துலகத் தமிழ் மொழித் தேர்வு - 2015 ல் இருந்து 2019 வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் (Excellent) அதிதிறனில் சித்தி பெற்ற நெதர்லாந்து, ரோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவி செல்வி தருணீ கோடீஸ்வரநாதன் 09.11.2019 ல் நடந்த வாணி விழாவில் திரு, திருமதி சிவரஞ்சன்-மகேஸ்வரி தம்பதிகளால் நினைவுக் கிண்ணம் வழங்கி கௌரவிக் கப்பட்டார். இவரை, ரோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் களும், மாணவர்களும் வாழ்த்துகிறார்கள்.





2018- 2019 கல்வியாண்டில் நடைபெற்ற அனைத்துலக தமிழ்ப் பொதுத்தேர்வில் வளர்நிலை பன்னிரண்டடை (12) பூர்த்தி செய்த, தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்தும் ரோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவன் செல்வன் வரேந்திரன் துவாரகன் 09-11-2019 இல் நடைபெற்ற வாணி விழாவில் இவரை தொடர்ந்து ஐந்து வருடங்கள் படிப்பித்த ஆசிரியர் திருமதி பாமா பாஸ்கரன் அவர்களால் கௌரவிக்கப்பட்டார். இவரை, ரோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் வாழ்த்துகிறார்கள்.











# முடியை பாதுகாக்க முடியுமா!

ஆணுக்கும் சரி பெண்ணிற்கும் சரி இருவருக்குமே பொதுவான ஒரு பிரச்சனையானது அவர்களது தலைமுடி உதிர்வதும் தலை முடி ஆரோக்கியமான தென்படாமல் இருப்பதுமேயாகும். எமது அன்றாட வாழ்க்கை முறையும் நாம் உண்ணும் உணவுமேயாகும்.
தலை முடி உதிர்வதை எப்படி நாம் ஓரளவாவது தடுக்கலாம்? அது ஆரோக்கியாமாக காட்சி அளிப்பதற்கு என்ன செய்யலாம்?

பலர் ஒவ்வொரு நாளும் தலையில் குளித்தால் தான் நல்லது எனக் கருதி ஒவ்வொரு நாளும் தலையில் குளிக்கிறார்கள் அதுவம் shower ரால். இது நல்லதே இல்லை. ஒரு கிழமையில் அதிக பட்ஷம் 2 அல்லது 3 தடவையே அளவானதாகும்.

இன்னுமொரு கவனிக்க வேண்டிய விடையம் என்னவென்றால் தலையில் shampoo போடும் போது தலை முடியில் படலாம் ஆனால் முடியின் வேரில் படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். Hair dryer பாவிக்கும் போது குறைந்தளவு சூடு பாவிக்க வேண்டும்.

ஈரத்துடன் தலைமுடி வாருவததென்றால் சீப்பை பாவிக்கவும். Hair brush கூடாது. ஒரு நாளைக்கு 2 அல்லது 3 தடவை தலை வாரவும். ஆர்பன் ஒயில் (Argan oil) அல்லது தேங்காய் எண்ணெயும் நல்லது. ஆல்லது 2 மேசக் கரண்டி தேன் அத்தோடு 1 மேசக் கரண்டி ஒலிவ் ஒயிலும் 1மேசக் கரண்டி apple cider vinegar ரையும் சேர்த்து தலையில் ஈரம் படுவதற்கு முன்னர் பூசி 30-60 நிமிடங்கள் ஊர விட்டபின் தலைமுடியை கழுவவும்.

சுரி இனி நாம் என்ன உண்டால் அது எமது தலைமுடிக்கு நன்மை தரும் என்பதனை கவனிப்போம்.

சமன் Salmon: இதில் நிறைய protein & vitamin D உள்ளது. இவை உங்களுடைய உச்சந்தலையை (scalp) நீரழப்பு இல்லாமல் இருக்க உதவும். ஆகையால் உங்களுக்கு வலுவான முடியமையும்.
சுமன உங்களுக்கு உண்ணுவது விருப்பமில்லாவிடின் sardines, mackerel அல்லது Avacado ஆகியவற்றையும் உண்ணலாம்.

வாதுமை கொட்டை வகை (Walnut): இதில் omega -3 fatty acids, Biotin & Vitamin E ஆகியன உள்ளது. அது DNA வால் ஒரு சேதமும் வராமல் பாதுகாக்க நன்கு உதவுகிறது. ஆதனால் முடி உதிர்வு குறைவாகினடறது.

முட்டை: இவை (hair follicles) மயிர்க்கால்களிற்கு ஆக்ஸ்சியனை கொண்டு செல்ல உதவுகிறது.

கீரை: இதில் இரும்புச் சத்து நன்கு உண்டு அது மட்டுமல்லாமல் vitamin C யும் உள்ளது, இவை மயிர்க்கால்களையும் உச்சந்தலையையும் ஆரோக்கியமாக வைத் திருக்க உதவுகிறது.

மாமிசம்: இதிலும் இரும்புச் சத்து. புரதச் சத்து, zinc and vitamin C ஆகியவை உள்ளதென்பதால் தலைமுடி பலமாக இருக்கும்.

sweet potatoes: இவை உச்சந்தலையை பாதுகாக்க உதவுகிறது.



சிவஜெனனி

நம்மால் முடிந்தளவிற்கு எமது முடியை பாதுகாத்துத் தான் பார்ப்போமே!






# பூச்சிகளுக்கு வலி தெரியுமா?




## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

நடந்து திரியும் போது சும்மா காலில் அடிபட்டாலே நமக்கு வலிக்கும். அதாவது நமது உடலுக்கு எப்போதெல்லாம் பாதிப்பு ஏற்படுகின்றதோ, அப்போது நமது மூளை வலி எனும் உணர்வைத் தருகிறது. இது மனிதர்களுக்கு மட்டும் உள்ள உணர்வில்லை, விலங்குகளும் கூட வலி எனும் உணர்வை அனுபவிக்கக்கூடும். இது ஒரு பக்கம் இருக்க, உதாரணத்திற்கு ஒரு கொசு நம்மைச் சுற்றி சுற்றி வந்து தொந்தரவு பண்ணுகிறது என்று எடுத்துக்கொள்வோம். நம்மில் பலர் உடனடியாகச் செய்வது அதை ஒரே ஒரு அடியுடன் கொன்றுவிடுவது தான். இப்படி அந்தக் கொசுவை கொல்கிறோமே, அந்தக் கொசுவுக்கு வலிக்காதா? கொசு என்ன, மனிதர்கள் மற்றும் பல்வேறு விலங்குகள் உணரக்கூடிய வலி எனும் உணர்வு பொதுவாகப் பூச்சிகளுக்கும் உள்ளதா?

இதைக் கண்டுபிடிப்பதற்காகவே பல்வேறு பரிசோதனைகள் நடாத்தப் பட்டுள்ளன. அதாவது நம் உடலில் வலிக்கு ஏற்படும் எதிர்விளைவுகளைப் போல் பிற உயிர்களிடம் வலியுணர்வின் தாக்கம் எந்த அளவில் உள்ளது என சோதனை செய்யப்பட்டது. உதாரணமாக ஒரு நாயினை ஊசியால் குத்தும்போது அது வலிக்குப் பயந்து ஓடிவிடும் அல்லது எதிர்விளைவுகளைச் செய்யும். அது போல் பூச்சிகளும் ஏதும் எதிர்விளைவைக் காட்டுமா என்று பார்த்தார்கள்.

இதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கு முன்பு, முதலில் வலி என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். வலியை நாம் உணர்வதற்கு Nociceptor என்று அழைக்கப்படும் ஒரு வகையான நரம்பணு தான் காரணம். இந்த நரம்பணுக்களைப் பற்றி புரிவதற்குக் குறிப்பாக நாசிசெப்டிவ் வலி அதாவது nociceptive pain ஐ பற்றி அறிய வேண்டும். இந்த நாசிசெப்டிவ் வலிகளை உடற்தீங்கு தூண்டுதலைப் பொறுத்து வகைப்படுத்த முடியும். எனவே இவற்றை முதலாவதாக "வெப்ப வலி" அதாவது வெப்பம் அல்லது குளிர்ச்சி சம்மந்தப்பட்ட வலி, இரண்டாவதாக "எந்திரவியல்" சம்மந்தப்பட்ட வலி, அதாவது உடலில் ஏற்படும் கிழிதல் போன்றவற்றால் ஏற்படும் வலி மற்றும் மூன்றாவதாக "வேதியியல்" வலி, அதாவது உதாரணமாக கண்களில் மிளகாய்ப் பொடி படும் போது ஏற்படும் வலி, ஆகிய மூன்று விதமான வலிகள் மிகவும் பொதுவான வகைகளாகும். எனவே, இந்த nociceptors இருப்பதால் தான் நம்மால் வலியை உணர முடிகின்றது.

இதில் உள்ள சுவாரசியம் என்ன தெரியுமா? பெரும்பாலான பூச்சிகளுக்கு இந்த nociceptors கிடையாது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். கவனிக்கவும், பெரும்பாலான பூச்சிகளுக்கு என்று தான் கூறப்பட்டுள்ளது. இந்த உலகில் உள்ள அனைத்துப் பூச்சிகளையும் விஞ்ஞானிகள் பரிசோதனை செய்து பார்க்கவில்லை, ஆனால் அவர்களின் கணிப்புப் படி பெரும்பாலான பூச்சிகளுக்கு nociceptors இல்லாத காரணத்தால் அந்த பூச்சிகளால் வலியை உணர முடியாது என்று கூறப்படுகின்றது.

நண்பர்களே, பூச்சிகளை கொல்லுங்கள் அல்லது சித்திரவதை செய்யுங்கள் என்று நான் சொல்லவரவில்லை. அறிவியல் ரீதியாகப் பார்த்தால், பூச்சிகளுக்கு வலி எனும் உணர்வு கிடையாது என்று தான் சொல்லியிருக்கிறேன். இதை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள்.

சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள்? இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரியுமா? இதற்குரிய பதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh)



## இன்றும் நிலைத்திருக்கும் சிரித்திரனின் கருத்தோவியம்





## மங்கல இசை



உங்கள் மங்கலகரமான வைபவங்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்

ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி
தவில் லயஞானச் சுடரொளி

கே.பி.செல்வநாயகம்
0049 157 388 27 634
0049 0178 666 44 26
0202 2713 698



Cinematic Storytelling

KIRI VIDEO
Professional Filming & Production Service
FOLLOW US ON facebook
KIRI VIDEO
Mob.: 01786709612
01777076958
Home: 02171 948036

# பெண் கொலை ஆணாதிக்கத்தின் உச்சம்







சிறீரஞ்சனி

பல்வேறு கனவுகளுடன் திருமணபந்தத்தில் இணைபவர்கள் தங்களின் கனவுகளுக்கேற்ற வாழ்க்கை ஒன்று அமையாதபோது அதைச் சகித்துவாழக் கற்றுக்கொள்கிறார்கள் அல்லது ஒருவரை ஒருவர் இம்சிக்காமல் பிரிந்துகொள்கிறார்கள். இதுதான் சகமனித நேசிப்பு இருப்பவர்களின் செயலாக இருக்கிறது. ஆனால், சுயநலமிக்கவர்களோ தாம் அழிந்தாலும் பரவாயில்லை, கூடவாழவந்தவர் அழியவேண்டுமென்ற தன்முனைப்புடன் செயற்படுகிறார்கள். உலகளவில், கொலைசெய்யப்பட்ட பெண்களில் சுமார் 40 சதவீதமானோர் அவர்களது முன்னாள் அல்லது தற்போதைய துணைவரினாலேயே கொல்லப்படுகிறார்கள் என்கிறது ஆய்வு. இப்படி நிகழ்த்தப்படும் இந்தப் படுகொலைகளில் பெரும்பாலானவை அந்தப் பந்தத்தைப் பெண் உடைக்கும்போது அல்லது அவ்வாறு செய்வதற்கான தனது விருப்பத்தை அறிவிக்கும்போதே நிகழ்கின்றன, என்கிறார் Aaron Ben-Zeév Ph.D.

பெண்களின் கொலைகளுக்கு பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் அவை இரண்டு பொதுவான அனுமானங்களைப் பகிர்ந்து கொள்கின்றன:

(1) பெண் தன்னுடைய உடைமையென கருதும் ஆணின் மனப்பாங்கு. அதனால் பெண் மீது பாலியல்ரீதியான பொறாமையும் கோபமும் அந்த ஆணுக்கு உருவாகிறது.

(2) பெண்ணின் மீது ஏற்கனவே ஆண் நடாத்திய வன்முறைகளின் உச்சக்கட்டமாக கொலை நிகழ்கிறது

மீண்டும் சேர்தலுக்கான வழி இல்லையென்று உணரும்போது அந்தப் பெண் மீதான ஆணின் கோபமும் பொறாமையும் மிகவும் தீவிரமடைகின்றன, கொலைசெய்யும் திட்டம் உருவாகிறது. தெளிவாகத் திட்டமிட்டே அந்த ஆண்கள் இந்தக் கொலைகளைச் செய்கின்றார்கள். இப்படியான கொலைகளுக்கு முன்பாக அத்தனை பெண்களும் அந்த ஆண்களால் பின் தொடரப்பட்டிருக்கிறார்கள், விரும்பத்தகாத செய்திகளை அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள், உடமைகளை இழந்திருக்கிறார்கள் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இந்தக் கொலைகளை எதிர்பாராத செயல்கள் எனக் கூறமுடியாது. ஆண் கட்டுப்பாட்டை இழப்பதால் அல்லது ஆணின் மனநிலை பாதிக்கப்படுவதால்தான் இவை நடக்கின்றன என்றும் கூறமுடியாது. இந்தக் கொலைகளில் பெரும்பாலானவை நன்கு திட்டமிடப்பட்டு, வேண்டுமென்றே செய்யப்படுகின்றன. தன்னை அழித்தாலும் பரவாயில்லை மற்றவரை அழிக்கவேண்டுமென்ற மனநிலையையின் உக்கிரமே இங்கு காணப்படுகிறது என்ற ஆய்வை நிரூபிக்கும் ஒரு கொலையாளியின் வாக்குமூலத்தை நான் நேரடியாகவே கேட்டிருக்கிறேன்.

எனவே, இவ்வகையான கொலைகளுக்கான ஆபத்துக்களை அடையாளம் காணலும், அவற்றைத் தூண்டக்கூடிய தூண்டிகளை இனம்காணலும், அதிலிருந்து தப்பும் பாதுகாப்பு வழிகளை அறிதலும் மிகவும் அவசியமானது. பின்வரும் கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள்.

உங்களின் துணைவர் அல்லது முன்னைய துணைவர்:

1.அவரது முஷ்டியால் அல்லது உங்களை காயப்படுத்தக்கூடிய எதாவது ஒரு பொருளால் உங்களைத் தாக்கினாரா?
2.உங்களைக் காயப்படுத்தக்கூடிய ஏதாவது பொருளை உங்கள் மீது எறிந்தாரா?
3.உங்களுக்கு வலிக்கச்செய்யும் வகையில் சுவருடன் மோதுமாறு உங்களைத் தள்ளினாரா?
4. உங்களை அடித்தாரா / உதைத்தாரா?
5. உங்களின் கழுத்தை நெரித்தாரா?
6. துப்பாக்கியை அல்லது கத்தியைக் காட்டி உங்களை அச்சுறுத்தினாரா?
7. உங்களை மிரட்டுவதன் மூலமோ அல்லது உங்களைத் துன்புறுத்துவதன் மூலமோ பாலியல்ரீதியான செயல்பாடுகளைச் செய்யும்படி உங்களைக் கட்டாயப்படுத்துகிறாரா?

மேலுள்ள கேள்விகளுக்கு உங்கள் பதில் ஆம் என இருந்தால், இத்தகைய செயல்களை எவை தூண்டுகின்றன, எப்படி இவற்றிலிருந்து உங்களைப் பாதுகாப்பது என முன்கூட்டியே திட்டமிடுங்கள். உங்கள் துணைவர்தானே, உங்களைக் கொல்லமாட்டார் என ஒருபோதும் நம்பாதீர்கள்! முரண்பாடுகளின்போது வன்முறையைக் காட்டும் பதிலளிப்பு, பச்சாத்தாபம் மற்றும் இரக்கமற்ற தன்மை, இலகுவில் ஆத்திரப்படல், அதிகப்படியான கட்டுப்பாடுகள் போன்ற நடத்தைகளைக் காட்டும் துணைவர்களுடன் வாழும் பெண்களுக்குக் கொலைக்கு உட்படும் ஆபத்து இருக்கலாம்.

பிரிவினையை ஏற்காதபோது, வெறித்தனமான பொறாமையைக் காட்டும்போது, வன்முறையின் தீவிரம் அதிகரிக்கும்போது, வீட்டிலிருக்கும் செல்லப் பிராணிகளுக்கு எதிராக கொடுமைசெய்யும்போது, பின்தொடரும்போது, ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தும்போது, முக்கியமாக நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றாதபோது இந்த ஆபத்து மோசமடைகிறது என உணருங்கள்.


இப்படியான நிலைமைகள் இருந்தும் சமூக, பொருளாதாரக் காரணங்களினால் சேர்ந்துவாழ வேண்டிய பெண்களும் சரி, விட்டுவிலகும் பெண்களும் சரி கொலைசெய்யப்படுவதை நாங்கள் பார்க்கிறோம். டிசம்பர் 2017இல், ஸ்காபோரோவில் ஒரு தமிழ்ப் பெண் வன்முறையின் பாதிப்புக்குள் வாழ்ந்து மடிந்தாள், செப்ரெம்பர் 2019இல், இதே ஸ்காபோரோவில் ஒரு தமிழ் பெண் வன்முறையை விட்டு வெளியேறி மடிந்தாள்.

திருமணம் என்பது ஒரு அந்தஸ்சு ஆகப் பார்க்கப்படும் நிலை, உடைவு ஏற்பட்டதும் குறித்த மனிதரைத் தோல்வி அடைந்த ஒரு மனிதராக உணரவைக்கிறது. மேலாக ஆண் என்ற ஆணவமும் அகம்பாவமும் மனைவி விட்டுவிட்டுப் போவதை ஏற்கவிடுவதில்லை. இது தமிழ் சமூகத்தில் மட்டுமன்றி எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவான பிரச்சினையாகவே உள்ளது. எனவே சமூக மாற்றம்தான் அவசியமானது.

கொலைசெய்யப்பட்டது எத்தனை மோசமான ஒரு கோரச் செயல் எனப் பார்க்காமல் அதைச் செய்வதற்கு அந்த ஆணைத் தூண்டியது என்னவோ எனப் பெண் மேல் தவறு சுமத்தும் சமூகம் முதலில் திருந்த வேண்டும். ஆண் பிள்ளைகள் உள்ள தாய்மார் எல்லோரும் பெண்கள் இரண்டாம்தர மனிதரல்ல என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஆண்கள் அவர்களின் ஆணாதிக்க மனோபாவத்தை இனம்கண்டு அதை மாற்றுவதற்கான வழிவகைகள் ஏதாவது செய்யவேண்டும்.

இனியும் இப்படியான கொலைகள் நிகழாமல் இருப்பதற்காக வன்முறைக் கலாசாரத்தை அழிப்பதற்கு அனைவரும் இணைந்து செயற்படுவோம் என உறுதியெடுப்போம்.





# திருமந்திரமும் வாழ்வியலும் 46

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## அட்டமா சித்தி (எட்டு வகைச் சித்திகள்) - (பாகம் 1)

அட்டமா சித்தி பெற்ற திருமூலநாயனார் உட்பட பல முனிவர்கள், ரிசிகள் எமக்கு வழி காட்டியாக இருந்திருக்கின்றார்கள். நாங்கள் நினைப்பதை நினைத்தபடி செயலாக்கும் வல்லமையைத் தரும் எட்டுவகைச் சித்திகள் பற்றி (அட்டமா சித்திகள்) திருமந்திரத்தில் திருமூலநாயனார் பல பாடல்கள் மூலம் விளக்கியுள்ளார். இந்த எட்டுவகைச் சித்திகள் எவை எனக் கூறும் பாடல் எண் 668

“அணிமாதி சித்திகள் ஆனவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் நேர்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்
அணுவத்தனை ஒக்கும் தானால் எட்டே”

அணிமா முதலான எட்டுவகைச் சித்திகள் என்ன என்ன என்று கூற வேண்டுமானால், அவை அணுவை விடச் சிறிதாகும் (அணிமா). பெரிதாக உள்ள எதையும் விடப் பெரிதாக இருக்கிற தன்மை (மகிமா). அசைக்க இயலாத கனமுடையதாக இருக்கிற தன்மை (கரிமா). புகை போல இலேசாகுதல் (இலகிமா). பூமியில் இருந்துகொண்டே ஆகாயத்தைத் தொடுதல் (பிராத்தி). விண், மண், நீர், நெருப்பு, காற்று என எங்கும் செல்லுதலான (பிராகாமியம்). உயிர்களைப் படைக்கின்ற சக்தியான (ஈசத்துவம்). எதையும் வசிப்படுத்தும் (வசித்துவம்). ஆகிய சக்திகளே (மனம் நினைத்ததைச் செயலாக்குவது) அந்த எட்டுச் சித்திகளாகும்.
இந்த அட்டமா சித்திகள் அருளும் பலனை கூறும் பாடல் எண் 669

“எட்டாகிய சித்தி ஓரெட்டி யோகத்தால்
கிட்டாப் பிராணனே செய்தால் கிடைத்திடும்
ஒட்டா நடுநாடி மூலத்து அனல்பானு
விட்டான் மதிஉண்ண வும்வரும் மேலதே”

அட்டமா சித்திகளும், அட்டாங்க யோகத்தால் கிடைத்ததற்கு அரியதான பிராண வாயுவை அடக்கி முறைப்படுத்தினால் கிடைக்கும். இதனால், மூலாதாரத்தில் குண்டலினி மூலாக்கினி சுழுமுனை வழியாகச் சென்று சூரிய மண்டலமாகிய மனத் தாமரையில் சிந்தையை நிறுத்திச் செபித்தால், நெற்றிப் புருவ மத்தியில் ஆனந்தத் தேன் பருகும் மேலான நிலை அடையலாம். அட்டமா சித்திகள் சித்தி பெற சக்தி துணையாவாள் எனக் கூறும் பாடல் எண் 670

“சித்திகள் எட்டன்றிச் சேரெட்டி யோகத்தால்
புத்திகள் ஆனவை எல்லாம் புலப்படும்
சித்திகள் எண்சித்தி தானாம் திரிபுரைச்
சத்தி அருள்தரத் தான்உள வாகுமே”

முன்னம் கூறப்பட்ட எட்டுவகைச் சித்திகளைத் தவிர அட்டாங்க யோகத்தால் எல்லா வகை அறிவும் கிட்டும். இந்த எட்டுவகைச் சித்திகள் எல்லாம், திரிபுரையாகித் தேவி சக்தி அருள் செய்யத் தானடையக் கைகூடுவதாகும்.
அட்டமா சித்திகள் பெற்றவர் தங்கள் உள்ளத்திற்குள்ளே சிவனைக் காண்பார்கள் எனக் கூறும் பாடல் எண் 671

“எட்டிவை தன்னோடு எழிற்பரம் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகம் சேர்தலால்
இட்டமது உள்ளே இருக்கல் பரகாட்சி
எட்டு வரப்பு இடந்தான்நின்று எட்டுமே”

முன்னே சொல்லப்பட்ட எட்டுச் சித்திகளுடன், உயர்வான பரஞானம் கைகூடப் பெற்றவர்களே சித்தர்கள் எனப்படுபவர்கள். இவர்கள் பரலோகமாகிய சிவலோகம் அடைய, தாங்கள் விரும்பும் தங்களின் இஷ்ட தெய்வமான சிவப்பரம்பொருளைத் தங்கள் உள்ளத்துக்குள்ளே காணுகின்ற பரம்பொருள் காட்சியில் ஊறித் திளைத்திருப்பர். எட்டு என்ற அளவை எல்லையாக உடைய இந்தச் சித்திகள் எல்லாம் இவர்களைத் தாமே வந்தடையும் நிலை அதுவாகும். எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான அணிமா (உடலை அணுவைப் போல நுண்ணியதாகச் செய்து கொள்ளும் சித்தி) பற்றிய பாடல் எண் 672

“மந்திர மேறு மதிபானுவை மாற்றிக்
கந்தாய்க் குழியில் கசடற வல்லார்க்குத்
தந்தின்றி நற்காமிய லோகம் சார்வாகும்
அந்த உலகம் அணிமாதி ஆமே”

மந்திர உச்சாடனம் ஏறுகின்ற புருவ மத்தியில், இடகலை, பிங்கலை வழியாகச் செல்லுகின்ற பிராணனை, வலம் இடமாகவும், இடம் வலமாகவும் மாற்றி, முளை அடித்துக் கட்டியது போல, மூலாதாரத்தில் முறையாக நிறுத்தும் பயிற்சியில் தேறியவர்களுக்கு, நாடி நரம்பு இல்லாத ஒளி உடல் பெற்று தாங்கள் விரும்பும் உலகத்தைச் சேர்தல் கைகூடும். இப்படி விரும்பிய உலகத்தை அடைவது அணிமா சித்தியாகும். அணிமா சித்தி பெற பன்னிரண்டு ஆண்டுகள் பயிற்சி செய்யவேண்டும் எனக் கூறும் பாடல் எண் 673

“முடித்திட்டு வைத்து முயங்கில் ஓர் ஆண்டில்
அணிந்த அணிமாகை தானாம் இவனும்
தணிந்த அப்பஞ்சினும் தான்நொய்ய தாகி
மெலிந்துஅங்கு இருந்திடும் வெல்லஒண் ணாதே”

புலனடக்கி யோகப் பயிற்சியை ஓராண்டு (பன்னிரண்டு ஆண்டு காலமான வியாழ வட்டம்) காலம் முறையாக மேற்கொண்டால், அடைய விரும்பும் அணிமா சித்தி கை கூடும். இந்தப் பயிற்சியால் சித்திபெற்றவர் பஞ்சைக் காட்டிலும் மிகவும் மென்மையான உடல் பெற்றவராக, காற்றைப் போலத் திரியும் வல்லமை பெற்றவராவார். இத்தகைய அரிய சித்தியைப் பெற்றவர்களை எவராலும் வெல்ல இயலாது. எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான மகிமா (பெரிதாக இருக்கும் எதையும் விடப் பெரிதாக இருக்கிற தன்மை) பற்றிய பாடல் எண் 676

“மெய்ப்பொருள் சொல்லிய மெல்லியலாள் உடன்
தற்பொருள் ஆகிய தத்துவம் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடும் ஓராண்டின்
மைப்பொருள் ஆகும் மகிமா அதாகுமே”

உண்மைப் பொருளான, உயர்வான ஞானத்தை உபதேசித்த அருட்சக்தியுடன், “தத்” என்னும் சிவதத்துவம் சேர, கைக்குக் கிட்டிய சாதனையாக ஓராண்டில் கிட்டும், மறைந்த ஆற்றலான மகிமா (மிகப் பெரிதான உடல் பெறும்) என்னும்சித்தியாகும். .... தொடரும்













**Frankfurt நகரில்...**



# இன்னும், வயலோடு வாழ்கிறேன்!



அருவி வெட்டியாச்சோ? என்று ஊரிலிருந்து ரெலிபோன் எடுத்த மருமகளைக் கேட்டேன்."அருவிவெட்டி சூடும் அடிச்சு நெல்லும் வித்தாச்சு"என்று சிரிச்சபடி பதில் தந்தாள். என்னால் நம்ப முடியவில்லை. எல்லாம் இவ்வளவு கெதியாகவோ? என்றேன்.

"மாமா உங்கிட காலம் போல இல்லை மாமா இப்ப, இங்க எல்லாத்திற்கும் மெசின்தான். காடு வெட்டி,வரம்பு வெட்டி,அரிவி வெட்டி சூடடிச்சு எல்லாமே ஒருநாளில் முடிஞ்சிடும் .எனக்கு சிரிப்புத்தான் வந்தது .நாங்கள் வாழ்ந்த காலத்தில் இதற்காக எத்தனை நாள் செலவளிக்க வேணும். யுத்தம் முடிவுக்கு வந்தபின்பு மரங்கள் முளைத்து காடாக இருந்த வயல் எல்லாம் சென்ற வருடம்தான் காடுவெட்டி விதைக்கத் தொடங்கியிருந்தார்கள். நல்ல விளைச்சல் என்று அக்காவும் புழுகித்தள்ளினா?

பல வருடங்கள் வயல் விதைக்காததால் தேக்கி வைத்த நிலப்பசளையே ,தன் காரணமாக இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டேன். இன்னும் ஒருமுக்கிய மான கதை ஒன்றும் சொன்னா"தம்பி இஞ்ச சனத்திற்கெல்லாம் சலரோகம் தம்பி"

வராமல் என்ன செய்யும் என்றேன் நான்."ஏனையா அப்படிச்சொல்லிறாய்" என்று கேட்டா அக்கா..வயலில வேலை செய்யிற குப்பனுக்கும், சுப்பனுக்கும் இந்த வருத்தம் வராதென்று ஒரு புத்தகத்தில படிச்சனான்˙.இப்ப பார்த்தால் யாரும் வயல்வேலை செய்வது போல் தெரியவில்லை அப்படியென்றால் வருத்தம் வராமல் என்ன செய்யுமென்றேன்.

அன்றிரவு எனக்கு நித்திரை வரவில்லை. விதைப்பு, அறுவடை, சூடடிப்பு என்று எத்தனை நாட்கள் உடல் உழைப்பு. கடினம்தான் என்றாலும் அதில் ஒரு சந்தோசம் இருந்தது. இந்த காலம் எமக்குப் பெருத்த ஆரவாரம்தான். இந்த ஆரவாரங்கள் யாவும் எங்களின்ர காலத்துடன் முடிந்து விட்டது போல.. நினைவுகளை அந்தக்காலத்தோடு விரித்து வைக்கிறேன். உங்களையும் என்னோடு அழைத்துச்செல்ல ஆசை.
ஊர் வயல்களைவிட எங்களுக்கு தண்ணிமுறிப்பில் ஒரு வயல் இருந்தது. காடும் களனியுமாய், ஆறும், வண்டலுமாய், கனியும், பூக்களுமாய் எழில் கொஞ்சும் பசுமை நிலமிது. இதன் தன்மையும், தண்மையும், வன்மையும், வரட்சியும் நான் அனுபவித்தவை: இந்தப்பிரதேசமே பல குடும்பங்களின் அட்சய பாத்திரம். எங்களுக்கும் இங்கே தான் அந்தப்பாத்திரம் இருந்தது.

சில வருடத்தில் இரண்டு போகப்பயிர்ச்செய்கை உழவுநேரம் விதைப்புக் காலம், அரிவு வெட்டு, சூடடிப்பு என்று அங்கு சிலநாட்கள் தங்கி நின்று வேலை செய்வோம். வாய்க்காலில் மேவிப்பாயும் தண்ணிமுறிப்புக்குள நீர் சுமந்து வரும் காட்டுமலர்கள் கொள்ளை அழகு.
வேலை முடிந்து நீந்தி விளையாடும்போது களைப்பை மறந்து விடுவோம். குடிலுக்குள் நுழைந்து கொதிக்கக்கொதிக்க அம்மா ஆத்தித்தரும் தேநீரை செதுக்கி இருக்கும் சிரட்டையில் விட்டுக்குடிக்கும் சுவை. அந்தப்பிரதேசத்திற்குரியது. இரவு அம்மா வைக்கும் கருவாட்டுக்குழம்பு அதன் சுவை எப்போதும் நினைவில் நிற்கும். இப்போதும்தான்.



பொன்.புத்திசிகாமணி.யேர்மனி.

விதைப்புக் காலத்தில் நிலம் ஈரலிப்பாக இருக்கும். படுக்கைக்கு ஏற்றவாறு கிடுகுகளைப்பரப்பி, அதன்மேல் சாக்கை விரித்து, இடுப்புவரை சாக்குக்குள் கால்கள் இரண்டையும் விட்டு படுக்கின்ற சுகம் அலாதியானது.
நுளம்பிற்காகவும், பனிக்குளிருக்காகவும் மூட்டிவிட்ட வீரம் விறகு எரியும் நெருப்பு கதகதப்பாக இருக்கும். நாங்கள் திரும்பும்வரை .இது தொடர்ந்து எரிஞ்சு கொண்டே இருக்கும்.
புதிதாகக் காடு வெட்டியகாலங்களில் காட்டு மிருகங்களுக்குப்பயந்து,தடி பரப்பி களி மண்ணால் மெழுகி மேல் மாடி அமைப்பதுண்டு. கீழே மூட்டிவிட்ட நெருப்பின் கதகதப்பில் அமைதியான தூக்கம் வரும். இரவுவேளைகளில் ஆற்றுக்குள் விழுந்து அழும் மறிக்கரடிகளின் சத்தம் குழந்தைகள் அழுவதுபோல் கேட்கும்:
சிறுத்தைகளின் உறுமல் பயத்தை ஏற்படுத்தும். இரவு பெய்யும் கடும்பனியும், அதிகாலை பனிப்புகாரை விலக்கி வெளிவரும் சூரியனின் கதிர் வீச்சின் அழகும் தண்ணிமுறிப்பின் சிறப்புகளில் ஒன்றாகும்.

எங்கள் ஊரில் ,ருந்து பதினாறு மைல் இந்த வயல் பிரதேசம்.இடைப்பட்ட காலங்களில் தண்ணீர் பாய்ச்ச சைக்கிளில் வருவதுண்டு. அதிகாலை எழுந்து அம்மா சாப்பாடு சமைச்சுக் கட்டித்தருவா, சிவத்தப்பச்சை அரிசிச் சோறு, வெங்காயம் பச்சைமிளகாய் கலந்து நெய்யில் பொரிச்ச முட்டைப்பொரியல், பருப்புக்கறி, வாட்டிய வாழை இலையில் கட்டும்போது வாசம் மூக்கைத் துழைக்கும்.. செத்தல் தேங்காயில் சமைத்த றால் குழம்பு கோர்லிக்ஸ் போத்தலில் விட்டுத் தருவா, .எண்ணெய் பிறந்து பார்க்கவே வாயூறும்.

சைக்கிளில் வரும்போதே சாப்பாட்டின் வாசம் மூக்கைத் துளைக்கும். எப்படா சாப்பிடுவோம் என்றிருக்கும். சைக்கிளை குடிலுக்குள் சாத்திவிட்டு மண்வெட்டியுடன் வாய்க்கால் நீரை வயலுக்குள் திருப்பி விட்டு. வரப்பு வழியே சென்று நண்டு உமைகளைப்பார்த்து சரி செய்துவிட்டு,குடிலுக்குள் வந்து சாப்பாட்டை பிரித்து அரைவாசிக்குமேல் சாப்பிட்டு விட்டால் கொஞ்சம் சரிந்து கொள்ள ஆசைவரும்.

சோவென்று காற்றுக்கு ஆடும் அழகு பார்ப்பதற்கு சந்தோசமாக ,ருக்கும். தாலாட்டும் காற்றின் சலசலப்போடு சுமந்து வரும் மூலிகைச் செடிகளின் வாசம் சுகத்தைத் தரும்.சுகமான தூக்கம் வரும்.வெயிலின் கொடுமை தாளாது கானல் குருவிகள் கத்தும் சகிக்க முடியாத கதறல்,அடிக்கடி கேட்கும். மயில் அகவும் சத்தம்,மான்கள் கூச்சலிடும் சத்தம், ஆள்காட்டி குருவி கத்தும் சத்தம் தலையில் அடித்தது போல் கேட்கும்.
உழவு பலகையடித்தல்,அரிவு வெட்டுதல்,சூடடித்தல், தண்ணிபாய்ச்சுதல் என்று எல்லாமே கஸ்ரமயாயினும் ,நெற்கதிர்களைப் பார்க்கும் போது எல்லாமே மறந்து விடும். இந்த இன்ப வடுக்களைச்சுமந்து இன்னும் வயலோடு வாழுகிறேன். அதிகமாக எழுத ஆசை பத்திரிகைப் பக்கம் போதாதென ஆசிரியர் கடுப்பாயிடுவார். மீண்டும் இந்த வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க மனம் கிடந்து துடிக்கிறது. முடியும். என்றே நினைக்கிறேன்.
**வாசித்து முடிய நான் இங்கு இல்லை. இது வாசித்த எனது கருத்து**




உங்கள் அபிமான வியாபார
ஸ்தாபனங்களில் கிடைக்கும்
NEW ARRIVAL
AGAM
Healthy and tasty Foods
அ.க.ம்
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
HAPPY
PONGAL
StaR-Impex
www.star-impex.de



# இயக்குநர் சிகரம்
# கே.பாலசந்தர்
## வாழ்வும் படைப்பும்

**வெற்றி மைந்தன்**

நடிகர் திலகம் சிவாஜி கணேசனோடு பாலசந்தர் பணியாற்றிய முதல் திடைப்படம் நீலவானம். இந்தப் படமும் 1965ம் ஆண்டு வெளியானது.கே பாலசந்தரின் இந்தி பிரவேசமும் அந்த ஆண்டு நிகழ்ந்தது.

"ஊன்சே லோக்" எனும் இந்தி திரைப்படத்துக்கான கதையை இவர் எழுதினார். இது அவருடைய புகழ்பெற்ற மேஜர் சந்திரகாந்த் எனும் நாடகத்தின் இந்தி வடிவம். இந்தியில் அந்த ஆண்டு வெளியான சிறந்த படங்களுக்கான தேசிய விருதில் இந்தப் படம் இரண்டாவது பரிசைப் பெற்று புகழ் சேர்த்தது.

அதே ஆண்டு பாலசந்தர் இன்னொரு படத்தையும் இயக்கினார். அந்தப் படத்தின் பெயர் நாணல்.முத்துராமன், கே.ஆர்.விஜயா ஆகியோருடன் மேஜர் சுந்தர்ராஜன் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்தார். அப்போது அவரது பெயருக்கு முன்னால் "மேஜர்" இல்லை. வெறும் சுந்தர்ராஜன் தான்.
நீர்க்குமிழி, நாணல் இரண்டு படங்களும் அவருக்கு நல்ல பெயரையும் திரையுலகில் வலுவான ஒரு அடித்தளத்தையும் பெற்றுத் தந்தது.

### மேஜர் சந்திரகாந்த்

1965ம் ஆண்டு வெளியான மேஜர் சந்திரகாந்த், கே.பாலசந்தரின் இயக்கத்தில் வெளியான மூன்றாவது திரைப்படம். திரைப்படங்கள் இயக்குவதற்கு முன்பே மேஜர் சந்திரகாந்த் நாடகம் பிரபலமாகியிருந்தது.
தனது நாடகத்தின் கதையையே எடுத்து மேஜர் சந்திரகாந்த் எனும் திரைப்படமாக கே.பாலசந்தர் உருவாக்கினார். கடந்த ஆண்டு ஊங்கே லோக் என இதை இந்தியில் எடுத்திருந்தார்கள். அசோக் குமார், ராஜ் குமார், ஃபெரோஸ் கான் என நடிகர் பட்டாளம் இருந்தது. அந்தப் படம் தேசிய விருதுகளிலும் கவனிக்கப்பட்டது.தமிழில் இந்தப் படம் உருவானபோது மேஜர் சந்திரகாந்த் வேடத்தில் நடித்த நடிகர் சுந்தர்ராஜன். அந்தக் கதாபாத்திரத்தின் வலிமை அதன் பின் அவரை "மேஜர் சுந்தர்ராஜன்" என்று எல்லோராலும் அழைக்க வைத்தது.
இந்த திரைப்படத்தில் நடித்த ஒரு நடிகை பிற்காலத்தில் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் அதிகார சக்தியாக மாறினார். அவர் தான் ஜெயலலிதா.
மோகன் தனது தங்கை விமலாவுடன் வசித்து வருகிறான். சின்ன வயதிலேயே இருவரும் தான் ஒருவருக்கு ஒருவர் துணை. மோகன் டெய்லரிங் தொழில் செய்து வாழ்க்கையை ஓட்டி வருகிறான். இவர்களுக்கு இடையே வில்லனாக வருகிறார் ரஜினிகாந்த். விமலாவைக் காதலிப்பது போல நடித்து ஏமாற்றி விடுகிறான் வில்லன். அவமானம் தாங்க முடியாத தங்கை தற்கொலை செய்து கொள்ள, அதிர்ச்சியடையும் மோகன் பழிவாங்கும் மனநிலைக்குச் செல்கிறான்.
மேஜர் சந்திரகாந்த் பார்வையில்லாதவர். அவருடைய இளைய மகன் தான் ரஜினிகாந்த். குற்றவாளி. மேஜரின் மூத்த மகன் ஸ்ரீகாந்த் இன்ஸ்பெக்டர். மோகன் குற்றவாளியைப் பழிவாங்க துடிக்கிறான், தந்தை காப்பாற்ற முயல்கிறார். கடைசியில் மேஜர் சந்திரகாந்தின் ஒரு மகன் இன்னொரு மகனைக் கைது செய்கிறான்.

இந்தப் படம் வெளியாகி மிகப்பெரிய வெற்றியை அடைந்தது. மேஜர் சுந்தர்ராஜன், நாகேஷ், ஜெயலலிதா, முத்துராமன், ஏவிஎம் ராஜன் என எல்லோருமே கவனிக்கப்பட்டார்கள்.

கே.பாலசந்தர் தனது இயக்கத் திறமையை மீண்டும் ஒருமுறை வலிமையாய் நிலை நாட்டினார்.

தொடர்ச்சி 38 ம் பக்கம்



37 ம் பக்கத் தொடர்ச்சி



மேஜர் சந்திரகாந்த்–ஜெயலலிதா –நாகேஷ்

பாலசந்தர் பிற்காலத்தில் பெண்களை மையப்படுத்தும் கதைகளையே எடுத்தாலும், துவக்க காலத்தில் அவருடைய திரைப்படங்கள் ஆண்களை மையப்படுத்தியே இருந்தது. நீர்க்குமிழி, மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம் போன்ற துவக்க காலப் படங்களை உதாரணமாகச் சொல்லலாம். அந்தக் காலகட்டத்தில் அவருடைய படங்களில் நாடகத்தின் நேரடிப்பாதிப்பும் கலந்திருந்தது குறிப்பிடத் தக்கது.





மேஜர் சந்திரகாந்த்–ஏ.வி.எம்.ராஜன்,சுந்தரராஜன்,முத்துராமன் ஜெயலலிதா

அதன் பிறகு அவர் ஹீரோயின் களை மையப்படுத்தும் கதை சொல்ல ஆரம்பித்தார். அதற்கு அவர் சொன்ன காரணங்கள் இரண்டு.

ஒன்று, ஹீரோக்களின் கால்ஷீட் எப்போதும் கிடைப்பதில்லை. பிரபலமான ஹீரோக்களை வைத்துப் படம் பண்ணுவதில் அதிக ஈடுபாடும், வசதியும் இருந்ததில்லை. குறிப்பாக நடுத்தர வர்க்க மக்களுடைய வாழ்க்கையைப் பேசும் திரைப்படக் கதாநாயகர்கள் கிடைப்பதே அரிதாய் இருந்தார்கள். நாகேஷ் போன்ற சிலர் விதி விலக்கு. ஆனால் நாகேஷ் அப்போது பிரபல நகைச்சுவை நடிகர். எல்லா படங்களிலும் அவரையே நடிக்க வைக்கவும் முடியாது. இது முதல் காரணம்.

இரண்டாவது காரணம், நாடகத்தில் பெண்களை நடிக்க வைக்க அந்தக் காலத்தில் ரொம்ப சிரமப்பட வேண்டியிருந்தது. மேடையேறி நடிக்க பெண்கள் தயங்கினார்கள். தொடர்ந்த நாடகங்களுக்கு அவர்கள் வருவதிலும் பெரும் சிக்கல்கள் இருந்தன. குடும்ப சூழல்கள் பெரும்பாலும் அவர்களுடைய மேடையேறுதலுக்கு முட்டுக் கட்டை போட்டன. ஆனால் சினிமாவில் அந்த சிக்கல் இல்லை. ஒரு முறை நடித்து விட்டால் போதுமல்லவா.

இந்த இரண்டு காரணங்களையும் தான் பாலசந்தர் தனது கதாபாத்திரத் தேர்வுக்கான காரணமாகக் கூறுகிறார்.

பாமா விஜயம் – மனோரம்மா ,நாகேஷ் , சௌக்கார் ஜானகி



தனது பாணியிலிருந்து கொஞ்சம் விலகி முழுக்க முழுக்க நகைச்சுவையை மையப்படுத்தி ஒரு திரைப்படம் எடுக்க வேண்டுமென பாலசந்தர் நினைத்ததன் விளைவு தான் 1967ம் ஆண்டு வெளியான பாமா விஜயம்.

நாகேஷ், ராஜஸ்ரீ, டி.எஸ்.பாலையா, காஞ்சனா, மேஜர் சுந்தர்ராஜன், ஆர்.முத்துராமன் என நட்சத்திரப் பட்டாளம் அணிவகுத்து நின்றது.

இதே பெயரில் 1934ம் ஆண்டு இன்னொரு திரைப்படமும் வந்து வசூலில் சாதனை படைத்திருந்தது. ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் தயாராகி பத்து இலட்சம் ரூபாய் சம்பாதித்தது அந்தத் திரைப்படம். ஹாலிவுட்டில் பயிற்சி பெற்ற இயக்குனர் லால் டான்டன் அவர்களுடைய இயக்கம் பெரிதும் பேசப்பட்டது. தலைப்பு பிரபலமாக இருந்ததால் அந்தப் படமே பாலசந்தரின் அடுத்த படத்துக்கான தலைப்பாக மாறிப்போனது.

கண்டிப்பான தந்தைக்கு மூன்று மகன்கள். திருமணமாகி குழந்தை குட்டிகளோடு வாழ்ந்து வருகிறார்கள். பெரிய பங்களாவின் மூன்று போர்ஷன்களின் மூன்று பேரின் குடும்பமும் இருக்கிறது. மகன்கள் தந்தையிடம் தங்கள் வருமானத்தைக் கொடுத்து கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய வீட்டுக்கு அருகில் ஒரு சினிமா நடிகை, பாமா குடியேறுகிறார். அவரோடு நட்பை உருவாக்கிக் கொள்ள வீட்டிலுள்ள பெண்களுக்கெல்லாம் ஆசை. நடிகையும் வீட்டுக்கு வருவதற்கு ஒத்துக் கொள்கிறார். அவரை வரவேற்க தங்களிடம் இல்லாதவற்றையெல்லாம் இருப்பது போலவும், இருப்பதையெல்லாம் இல்லாதது போலவும், பணக்கார குடும்பம் போலவும் காட்டிக்கொள்ள அவர்கள் செய்யும் வேலைகள் சிரிப்பின் உச்சிக்கு பார்வையாளர்களைக் கொண்டு செல்கிறது.

கே.பாலசந்தர்,நாகேஷ்



இவர்களுடைய பந்தா நடிப்பும், அதனால் உருவாகும் சிக்கல்களும் கடைசியில் எல்லாம் சுபம் என முடிவதுமாய் திரைப்படம் ஒரு முழுக்க முழுக்க நகைச்சுவை மசாலாவாய் உருவாகி வெற்றியடைந்தது ”பாமா விஜயம் போல இன்னொரு திரைப்படம் வராது” என பிற்காலத்தில் ”கிரேஸி மோகன்” ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.நாகேஷ், மேஜர் சுந்தர்ராஜன், சௌகார் ஜானகி, காஞ்சனா, சச்சு, ஸ்ரீகாந்த்,பாலையா,ஜெயந்தி, முத்துராமன் என வலிமையான நடிப்பு படை படத்தில் இருந்தது. எம்.எஸ். விஸ்வநாதன் இசையமைத்திருந்தார்.”

தொடரும்....



# ரஜினி இதுவரை சொல்ல மறந்த கதை!






"தர்பார்" படத்திற்கு டப்பிங் பேசும் ரஜினி

லைகா புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில், சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் 'தர்பார்' படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவ்விழாவில் லைகா நிறுவனத்தின் தலைவர் சுபாஸ்கரன், சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், நடிகை நிவேதா தோமஸ், இயக்குனர் ஏ ஆர் முருகதாஸ், ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன், இசையமைப்பாளர் அனிருத், கவிஞர் விவேக், இயக்குனர் ஷங்கர், நடிகர்கள் விவேக், யோகிபாபு மற்றும் படக்குழுவினர் பங்குபற்றினர்.
இவ் விழாவில் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பேசியபோது....
"இதுவரைக்கும் யாருக்கும் தெரியாத இரண்டு விடயங்களை இந்த விழாவில் சொல்கிறேன். முதல் விடயம் நான் சென்னைக்கு வந்தது பற்றி.... நான் பெங்களூரில் கன்னட மீடியத்தில் படித்துக்கொண்டிருந்த போது, நல்ல மாணவனாக நன்றாக படிக்கும் மாணவனாக இருந்தேன். ஆனால் என்னை திடீரென்று பத்தாம் வகுப்பில் ( O/L) ஆங்கில மீடியம் பள்ளியில் சேர்த்துவிட்டார்கள். அதனால் நான் கொஞ்சம் திணறிப்போய் பத்தாம் வகுப்பில் தோல்வி அடைந்தேன். அதன்பின் அடுத்த வருடம் மீண்டும் தேர்வு எழுதி நான் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றேன். அதன் பின்னர் நான் எனது அண்ணன்களிடம்,' என்னை ஏதாவது வேலையில் சேர்த்து விடுங்கள். எனக்கு படிப்பு எல்லாம் சரியாக வராது.' என்று சொன்னேன். ஆனால் எனது அண்ணனோ,' இல்லையில்லை. நீ கண்டிப்பாக படித்தேயாக வேண்டும். நம் வீட்டில் யாரும் படிக்கவில்லை. அதனால் நீ ஒரு வைத்தியர் அல்லது ஐபிஎஸ் போன்ற பெரிய படிப்பு படிக்க வேண்டும்." என்று முடிவு செய்து, என்னுடைய விருப்பத்திற்கு மாறாக என்னை பெரிய பணக்காரர்கள் படிக்கும் பள்ளியில் சேர்த்து விட்டனர்.

அந்த பள்ளியில் படிக்கும்போது எனக்கு சுத்தமாக படிப்பில் நாட்டமே இல்லை. பணக்கார நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு ஊரை சுற்றுவது, திரைப்படங்கள் பார்ப்பது... என்று நான் சுற்றிக் கொண்டிருந்தேன். அப்போது தேர்வு வந்தது. தேர்வு கட்டணமாக 170 ரூபாயை எனது சகோதரர் மிகவும் கஷ்டப்பட்டு கடன் வாங்கி என்னிடம் கொடுத்து கட்ட சொன்னார். அந்த பணத்தை கட்டி, தேர்வு எழுதினால் நிச்சயம் தேர்வில் தோல்வியடைந்து விடுவோம் என்று எனக்கு நன்றாக தெரியும். அதனால் நான் ஒரு முடிவு செய்தேன். அன்று இரவு யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறி பெங்களூர் ரயில் நிலையம் வந்தேன். அங்கு நின்று கொண்டிருந்த ஒரு ரயில் எங்கே செல்கிறது? என்று கேட்டேன். 'அது தமிழ்நாட்டுக்கு போகுது' என்றார்கள். உடனே அந்த ரயிலில் டிக்கெட் எடுத்து, ஏறி படுத்து தூங்கிவிட்டேன்.
காலையில் விழித்துப் பார்க்கும் பொழுது நான் இந்த சென்னையில் இருந்தேன். சென்னை ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி நான் வெளியே செல்ல முயன்றேன். அப்போது டிக்கெட் கலெக்டர் என்னிடம் டிக்கெட் கேட்டார். அப்போது என்னிடம் டிக்கெட் இல்லை. எங்கேயோ தொலைத்து விட்டேன்."டிக்கெட்டை தொலைத்து விட்டேன் ஆனால் நான் கண்டிப்பாக டிக்கெட் எடுத்தேன்" என்று டிக்கெட் சேகரிப்பாளரிடம் கூறினேன். அவர் என்னை ஒரு ஓரமாக நிற்க வைத்துவிட்டு. மற்ற பயணிகள் அனைவரும் சென்ற பிறகு என்னிடம் திரும்பவும் விசாரித்தார். 'நீ டிக்கெட் வாங்கவே இல்லை. பொய் சொல்கிறாய்.' என்றார். அவர் அதற்கு நான் உறுதியாக, 'நான் பொய் சொல்லவில்லை. டிக்கெட் வாங்கினேன். ஆனால் தொலைந்துவிட்டது.' என்று கூறினேன். அதை அவர் ஏற்றுக் கொள்ளாமல் அபராதம் கட்டினால் தான், உன்னை விடுவேன் என்றார்.

அப்போது அங்கு வந்த கூலித் தொழிலாளிகள் டிக்கெட் கலெக்டரிடம், 'அந்தப் பையனின் முகத்தை பாருங்கள். அவன் பொய் சொல்றவன் மாதிரியா.. இருக்கிறான்? அவனை அபராதம் கட்ட சொல்கிறீர்களே.. இது நியாயமா?' என்று கேட்டு, அவர்கள் தங்களிடம் இருந்த காசை எடுத்து, எனக்காக அந்த அபராதத் தொகையை கட்டினார்கள். அப்போதே நான் முடிவு செய்துவிட்டேன்.. இதுதான் என் ஊர் என்று...
இப்படி முதல் முதலாக நான் தமிழகம் வந்த போது டிக்கெட் கலெக்டரும், ரயில்வே ஸ்டேஷன் கூலித் தொழிலாளர்களும் என் பெயரில் நம்பிக்கை வைத்தது போல... என் மீது அடுத்ததாக நம்பிக்கை வைத்தவர் இயக்குனர் கே பாலச்சந்தர். அவர்கள் ரஜினிகாந்த் என்ற பெயரை தேர்வு செய்து, ஒரு மிகச் சிறந்த நடிகருக்கு மட்டுமே இந்த பெயரை வைக்க வேண்டும் என்று நான்கு வருடங்களாக காத்திருந்தார். அவர் கடைசியாக என் மேல் நம்பிக்கை வைத்து, அந்த பெயரை எனக்கு வைத்தார். அவர் வைத்த நம்பிக்கை வீணாகவில்லை.
பாலச்சந்தரை அடுத்து என்னை ஹீரோவாக்கிய கலைஞானம் அவர்கள் என்மேல் வைத்த நம்பிக்கை. கலைஞானம் அவர்களிடம் சென்று,' ரஜினியை ஹீரோவாக போடவேண்டாம்' என்று பலரும் கூறினார்கள்.




மூன்று முடிச்சு

ஆனால் அவர் என்மேல் நம்பிக்கை வைத்து 'பைரவி' படத்தில் என்னை ஹீரோவாக்கி, ஒரு ஹீரோவாக உருவாக்கினார்.அவருடைய நம்பிக்கையும் வீண் போகவில்லை. அந்த படம் ஹிட்டானது. அதன் பிறகு என் மேல் நம்பிக்கை வைத்து பல தயாரிப்பாளர்கள் படம் எடுத்தார்கள்.இதுவரை நான் நடித்த 160 படங்களில் சுமார் 100 தயாரிப்பாளருக்கு மேல் என்னை நம்பி பணம் முதலீடு செய்தார்கள். ரஜினி படத்தில் முதலீடு செய்தால் நஷ்டம் வராது என்று அவர் வைத்த நம்பிக்கையும் வீண் போகவில்லை. அதேபோல் நீங்கள் என் மேல் வைத்திருந்த நம்பிக்கை என்றுமே வீண் போகாது...' என்றார்




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
நேரில் வந்து பாருங்கள்
பட்டுச்சேலை, பஞ்சாபி, குருதார்
மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்
அனைத்தும் வகை வகையாக உண்டு.
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவும் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


PALAZIO
EVENTS
உங்கள் இல்லத்தின் சகல விதமான மங்கல
வைபவங்களுக்கும், மேடை நிகழ்வுகளுக்கும் ஏற்ற
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் ஓர் அழகிய மண்டபம்!
0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத்
தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.
மேலும் எம்மிடம்....
★ போட்டோ மற்றும் வீடியோ
த.கோபிநாத்
+ (49) 1525 3961138
Kasinostr. 25 |42103 Wuppertal


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


HAPPY
Pongal
2020
Double Horse
Nila
AGAM
அகம்
BTM
Aachi
Rabeena
TRS
Kingfisher Nestle Lipton Shan
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
FOR SHOPS ONLY